JUDE.

www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

දිනමුරසු වාරමලර්

ஆக. 22-28,1999

ரூபா 12/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 323

## கைப்பற்றலும் புலிகள் சென்றனர்

## நில மாற்றமும் வந்தனர்



அபாயமான நகர்வுகள்



நடிகையின் கதை

ராஜீவ் கொலை வழக்கு

## சுபாசுந்தரம் வெளியிடும் புதிய தகவல்கள்

படிப்பகம்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

www.padippakam.com

# முரசம்

## புலி முத்திரை

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

யாழ் குடாநாட்டில்
மீனவர்களை
கோவணத்தோடு மீன்பிடிக்குமாறு
இனரீதியான அவமானப்படுத்தல்
மேற்கொள்ளப்பட்டது!

கோவணத்தோடு
மீன்பிடித்தவர்களும்
சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்!

11.08.99 அன்று அதிகாலை
இக் கொடிய சம்பவம்
நடைபெற்றுள்ளது!

குறிப்பிட்ட இரு மீனவர்களும்
தமது அடையாள அட்டைகளை
படையினரிடம் ஒப்படைத்தே
கடலுக்குச் சென்றுள்ளனர்!

ஆனால் இரு மீனவர்களும்
கொல்லப்பட்டதையடுத்து
அடையாள அட்டைகளும
மறைக்கப்பட்டனவாம்!

இருவருமே புலிகள் என
ஒப்புக்கொண்டால்தான்
உடல் ஒப்படைக்கப்படும்
என்று உறவினர்களை
படையினர் மிரட்டியுள்ளனர்!

சாதாரண குடிமக்களை
புலிகளாக முத்திரை குத்தும்
இப்போக்கு புதியதல்ல!

1970களின் பிற்பகுதியில்
நல்லூர் கோவிலுக்கு
சென்று திரும்பிய
பரராஜசிங்கம் என்னும் வாலிபர்
பொலிசாரால் கொல்லப்பட்டார்.

அவரை தீவிரவாதி என்று
சித்தரிப்பதற்காக
அவர் அருகில்
கைத்துப்பாக்கி கிடந்ததாக
பொலிசார்
பொய் கூறினார்கள்.

சிறிமாவோ அம்மையார்
அப்போது பிரதமராக இருந்தார்!

ஆயுதப் போராட்டம்
தீவிரம் பெற முன்பே
இத்தகைய முத்திரை குத்தல்கள்
ஆரம்பமாகிவிட்டன!

இத்தகைய அநியாய
முத்திரை குத்தல்களும்
ஆயுதப் போராட்டம் தீவிரமாக
காரணங்களாக இருந்தன!

இன்றையப் போரின்
தாக்கங்களாக இவற்றைக்
கருதிவிடக்கூடாது.

தமிழ் மக்களுக்கு எதிரான
ஒடுக்குமுறையின்
வடிவங்களே இவையாகும்!

1970 களில்
சுட்டுக் கொன்றுவிட்டு
'தீவிரவாதி' என்றார்கள்!

தற்போது
சுட்டுப் போட்டுவிட்டு
'புலி' என்கிறார்கள்!
அதுதான் வித்தியாசம்!

சமீபகாலத்தில்
கிழக்கிலும் இவ்வாறான
முத்திரை குத்தல்கள்
பல நடந்துள்ளன!

யாழ் குடாநாட்டிலும்
இவ்வாறு நடந்துள்ளன!

அவ்வப்போது இதுபற்றி
தாம் முறையிட்டதாக
தமிழ்க் கட்சிகளும்
அறிக்கைகள் விடுத்தன!

மேலதிகாரிகளுக்கு
தெரியாமல்தான் நடப்பதுபோல
இவர்கள்
முறையிடு செய்கிறார்கள்!

மேலதிகாரிகளுக்கு
தெரியாமல் நடப்பதாயின்
ஒரு தடவை நடக்கலாம்;
இரு தடவை நடக்கலாம்.
ஆனால் இதுவோ
தொடர்ந்து நடக்கிறது!

எனவே மேலே தெரியாமல்
நடக்கும் செயலல்ல!

தெரியாமல் நடந்தால்
முறையிட்டதும்
குறை தீர்ந்திருக்க வேண்டும்!
தவறு களையப்பட்டிருக்க வேண்டும்!

ஆனால் அவ்வாறு
நிகழவில்லையே!

மீனவர்கள்
தொழிலுக்குச் செல்லாது
எதிர்ப்புக் காட்டினார்கள்!

பொய்கூறி
சடலங்களை பெறுவதற்கு
உறுதியாக மறுத்தனர்!

இவையெல்லாம்
பணிந்து போனால்
நீதி கிட்டாது!

போராடாதுவிட்டால்
நியாயம் கிடைக்காது
என்பதையே
உணர்த்தி நிற்கின்றன!

அரசுக்கும், படைகளுக்கும்
நட்பான தமிழ்க் கட்சிகளால்
முறையிட மட்டும் முடியும்!
மக்கள் போராடாதுவிடின்
அந்த முறையீடும்
செவிடன் காதில் ஊதிய சங்கே!

இப்போது தேவை
முறையீடுகளல்ல;
தற்காலிக தீர்வுகளுமல்ல.

முத்திரை குத்தல்கள்
தொடராத வகையில்
இந்த அநியாயத்தை
எதிர்த்துப் போராடவேண்டும்!
அகிலமறியச் செய்யவேண்டும்!

அரசும், படை உயர் மட்டமும்
ஒன்றுமறியாதவர்கள்
என்பது உண்மையானால்,
புலி முத்திரை குத்தியவர்கள்மீது
சட்ட நடவடிக்கை
எடுத்துக் காட்டட்டும்!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

## இருட்டிலிருந்து வெளிச்சத்துக்கு

## ஆன்மீகம்



நம்முடைய கண் வெளியிலிருக்கும் எல்லாப் பொருட்களையும் எப்படிப் பார்க்கிறது? சூரியன் முதலியவற்றின் வெள் ஒளியால் வெளியில் இருக்கும் பொருட்களைப் பார்க்கிறது. கண் வெளியில் இருக்கும் பொருட்களையெல்லாம் பார்ப்பதற்கு துணை செய்வது எது? நினைவு என்கிற உயிர் ஒளி.

வெள் ஒளியையும், உயிர் ஒளியையும் இரண்டு திருவடிகளாகக்கொண்டு எல்லாப் பொருட்களையும் இயங்கும்படி செய்வது எது? அதுதான் இறைவன்-ஒளியாகிய உள் ஒளி. உலகப் பொருட்கள் எல்லாம் கடவுள் மயம். 'கடவுள் மயமான பொருட்களில் இருந்துதான் உலக உயிர்கள் எல்லாம் தோன்றுகின்றன. தோன்றிய உயிர்கள் எல்லாம் சிலகாலம் வாழ்கின்றன. முடிவில் தோன்றிய பொருட்களிலேயே மறைந்தும் விடுகின்றன. உயிர்கள் வாழுகின்ற வாழ்க்கைதான் கடவுள் ஆகிறது. உயிர்களில் இருந்துதான் உயிர்கள் தோன்றுகின்றன. சிறிய உயிர்களிலிருந்தே பெரிய உயிர்கள் தோன்றுகின்றன. அந்த உயிர்கள் உடல்களைப் பெற்று இந்தப் பூமியில் வாழ்கின்றன. மற்ற உயிர்களுக்கு உதவி செய்வதன் மூலமாக நிலைத்தும் நிற்கின்றன. இந்த உண்மை எல்லா உயிர்களுக்கும் புரிவதில்லை.

ஆன்மீக வாழ்க்கையில் இந்த சூட்சுமத்தை, அதன் அரிய நுட்பங்களை, தூலமாக வாழும் உயிர்களின் கண்களுக்கு தெரிவதில்லை. இறைவனைக் காண்பதற்கு சூட்சும உறுப்பான மனம் மட்டும் போதாது. அதற்கு மேலேயும் போக வேண்டும். தியானத்தின் மூலமாகப் பெறும் முடிவான அறிவுதான் கடவுள். இதைப் பற்றி தெரிந்து கொள்வது தான் இறைவனைப் பற்றிய முடிவான அறிவும் ஆகும். அதுவே இறைவனும் ஆகும்.

தொகுப்பு: கொஸ்லாந்தை எஸ்.என். ராஜரட்ணம்.

## இறையச்சத்துடன் தொழுவோம்

இஸ்லாத்தின் ஐம் பெருங்கடமைகளில் ஒன்றாகிய தொழுகையை நிறைவேற்றுபவர் இறையச்சம் உடையவராகவும், தூய எண்ணத்தையுடையவராகவும் இருக்க வேண்டும். அருள் மறையாம் திருமறையிலே அல்லாஹ் அருளியுள்ளான்:

(நபியே) எனக்கு அடிபணிவீராக; என்னை நினைவு கூர்வதற்காக தொழுகையை நிலைநிறுத்துவீராக (20:14)

தொழுகையை நிலை நிறுத்துவீராக: திண்ணமாக தொழுகை மானக் கேடான மற்றும் தீய செயல்களைத் தடுக்கின்றது. (29: 45)

உயர் பண்பு (இஹ்லாஸ்) எது என நபிகளிடம் வினவப்பட்டபோது "நீங்கள் இறைவனைப் பார்க்காத போதும் அவனை நேரில் பார்த்துத் தொழுவதுபோல் தொழுவதாகும் நீங்கள் அவனை பார்க்காத போதும், அவன் மெய்யாகவே உங்களைப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறான். (நூல்: முஸ்லிம்)

மேலும் அல்லாஹ் கூறுகிறான்:

மேலும் கேடுதான்: தம் தொழுகையில் அலட்சியமாய் இருக்கிறார்களே அப்படிப்பட்ட தொழுகையாளிகளுக்கு, அவர்கள் பிறருக்குக் காட்டுவதற்காகவே செயல்படுகிறார்கள். (107: 4,6)

ஊர் உலகத்திற்காகவன்றி, உண்மையாகவே அல்லாஹ்வின் திருப் பொருத்தத்திற்காக மாத்திரம் தொழுது வணங்க முயற்சிப்போமாக.

தொகுப்பு: மருதமுனை அபூ கிஷோர்.

## கவிதைப் போட்டி இல.320

### பரிசுக்குரிய கவிதை

### ஒடுங்காது

ஆடைத்தடை,
ஆகாரத்தடையென
ஆயிரம் விதிக்கப்பட்டாலும்,
அடங்காது மறவரினம்!
ஒடுங்காது நமது கரம்...!

தமிழன்பன்-எட்டியாந்தோட்டை.

**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:**

### பாடம்!

தமிழ்க் கட்சிகளை
நம்புவதைவிட
நம் கையை
நம்புவது மேல்!

அ.யாழினி- மட்டக்களப்பு.



### ஆக்கிரமிப்பு

வன்னியில்
பொருளாதார முற்றுகை;
அவசரகால சட்டத்தின்
இன்னொரு அவதாரம்!

அ.அச்சுதன்-சேனையூர்; மூதூர்.

### சுய நலம்!

முஷ்டியை
மடக்கி
முகத்தில்
குத்தினாலும்;
தன்
இஷ்டப்படிதான்
நடக்கும்
தமிழ்
கட்சிகள்!

மு.பெ.ஜெயராஜ்-ஹெரப்டன்.

### எழுச்சி

எத்தனை புயல்கள் வந்து
எதிர்த்து நின்றாலும்-அஞ்சாது,
இரும்புத் திரைகிழித்து-
எழுச்சியெறும் கை இது!

சி.சிவகௌரி-மட்டுவில்-வடக்கு,
சாவகச்சேரி.

### தொடரும் வேட்டை

பொல்கொட வாவி
கோணேஸ்வரி, கமாலிட்டா
படுகொலை சூத்திரதாரிகளை
தப்ப விட்டது யார்?

சி.சிவேந்திரமணி-'மனோரகம்'
வாழைச்சேனை.

### ஐ.நா.வே தலையிடு!

தங்கத் தமிழர் இங்கடிமையாம்
ஆமோதிப்பதும் தமிழ் கட்சிகளே!
ஐ.நா.வே தலையிடு என்று நாம்
ஆவேசத்துடன் முஷ்டி உயர்த்துவோம்!

எஸ்.சிவசாமி செல்வராஜ்-பூண்டுலோயா.

## கவிதைப் போட்டி இல.323



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 28.08.1999

முகவரி: கவிதைப் போட்டி இல.323
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### அவசர காலச் சட்டம்!

கோரப் பிடியில் சிக்கியிருக்கும்
தமிழினத்தை மேலும்! மேலும்!
நசுக்கும் இரும்புக் கரம்!

வ.இராஜகுலசிங்கம்-மட்டக்களப்பு.

### உறுதி

ஒரு பிடி மண் என்றாலும்;
சொந்த மண் வேண்டும்!

ந.மதி-மோதர.

### எதுவுமில்லை

கைவிரல்கள் மடிந்ததுபோல
காலமெல்லாம் மடிந்ததய்யோ!
அம்மணி தந்த பொதி போல
மடித்த கைக்குள் எதுவுமில்லை!!

கவிஞர் 'திக்கவயல்'-
அம்பாறை.

அன்பிற்கினிய முரசே...!
தினம் தினம்-உன்
வரவை எதிர்பார்த்து காத்திருப்பவர்களில்
நானும் ஒருத்தி!
ஒருவாரம் உன்னைக் காண
தாமதமாகிவிட்டாலும்
நிலவைக் காணாத வானம்போல்
ஆகிவிடுகிறேன்! நீ சுமந்து வரும்
அனைத்து அம்சங்களும் வெகு அருமை.
அதிலும் 'நில் கவனி முன்னேறு',
ரசிகன் தரும் 'இலக்கிய நயம்',
புவனா எழுதிய 'கண்ணீரில் கரைந்த இரவுகள்'
என்னை மிகவும்
கவர்ந்தன.

செல்வி சாந்தி சுப்ரமணியம்- பதுளை.



# வாசக(ர்)சாலை

உலகப் புகழ்பெற்ற புகைப்படங்கள் ஆச்சரியத்தோடு, நமக்கும் தேவையான அர்த்தங்களைத் தருகின்றன. காலமறிந்து கருத்துக் கூறுவதில் முரசுக்கு நிகர் உண்டோ?!

எம். வேணி, யாழ்ப்பாணம்.

## மோனிக்கா

மோனிக்காவின் முதல் இரு அத்தியாயங்களும் அசத்தல். புவனா கலக்குகிறார். மோனிக்காவின் சிறு பிராயத் தோற்றங்கள் அருமை. டயானா தொடர் முடிந்த வருத்தத்தை மோனிக்கா மூலம் இல்லாது செய்துவிட்டார் புவனா.

திருமதி நல்லநாதன்,
மஸ்கெலியா.

## சாட்டையடி

தமிழ்க் கட்சிகளது கூட்டத்தில் குமார் பொன்னம்பலம் கொடுத்த சாட்டையடி பாராட்டத்தக்கதே. அரசை எதிர்க்கத் துணிச்சல் இல்லாத கட்சிகள் மகஜர் அனுப்பி மன்றாடி யாது பயன்? குமார் பொன்னம்பலம் செய்துவரும் பணி இக் காலகட்டத்திற்கு மிக்க அவசியமானதே. அவரது செயற்பாடுகள் மேலும் விரிவுபடுவது நன்று.

கா. கனகசபை, யாழ்ப்பாணம்.

## நீலன் என்ன செய்தார்?

கூட்டணி நீலனின் மேதமை யாருக்குப் பயன்பட்டது? என்று நாரதர் எழுப்பிய கேள்வி அர்த்தமுடையது. கிருஷாந்தி முதல் கோணேஸ்வரி உட்பட கமாலிட்டாவரை எத்தனை அநியாயங்கள். இவற்றையிட்டு நீலன் ஏன் உலக அரங்கிற்கு கொண்டு செல்லவில்லை? மனித உரிமைக்காக குரல் கொடுத்தவர் என்று வாய்ப்பாடு மாதிரி கூறுகிறவர்கள் இதற்கு பதில் கூறுவார்களா? நீலன் ஒரு சட்டத்தரணி. அப்படியிருந்தும் இங்கு கிருஷாந்தி வழக்கு போன்றவற்றில் ஆஜராகக்கூட முன்வந்தாரில்லை. திரு. குமார் பொன்னம்பலம் கிருஷாந்தி வழக்கில் வாதாடியிருந்தார். திரு ஜோசப் பரராஜசிங்கம் கிருஷாந்தி கொலையையிட்டு குரல் கொடுத்திருந்தார். ஆனால் நீலன்...?

இ. மணிவண்ணன், கொழும்பு-06.

## அமெரிக்க அனுதாபம்!

இலங்கையில் அமெரிக்கத் தலையீட்டுக்கு அரசாங்கம் இடமளித்துள்ளது. அமெரிக்காவின் தலையீடு அரசுக்கு சார்பாகவே இருக்கும். இலங்கையில் அமெரிக்க தலையீட்டுக்கு செங்கம்பளம் விரித்தவர்களில் அண்மையில் மரணமான நீலனும் ஒருவர். கிளின்ரனும் அமெரிக்காவும் விழுந்து விழுந்து விடுத்த அறிக்கைகள் அதற்கு சான்று பகர்ந்தன. எத்தனையோ மனித உரிமை மீறல்கள் இங்கு நடக்கும்போதும் அமெரிக்கா வாய் திறக்கவில்லை. இப்போது மட்டும் ஏன் இந்தத் துடி துடிப்பு? குர்தீஷ் மக்களது தலைவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டபோதுகூட அமெரிக்கா இப்படி அக்கறை காட்டவில்லையே?

கே. வினோதராஜ், மட்டக்களப்பு.

## அவசியத்தை வலியுறுத்தியது

அன்பு முரசே!

நீலனின் மரணம் அரசியல் தீர்வின் அவசியத்தை வலியுறுத்துவதாக சம்பந்தன் அறிக்கை வெளியிட்டிருந்தார். அவ்வாறாயின் நீலனை கொன்றது நியாயம் என்று கூறுகிறாரா? இப்படிச் செய்தால்தான் அவசியத்தை வலியுறுத்த முடியும் என்பதுபோலவே அவரது அறிக்கை இருக்கிறது. ஏன் இப்படி தடுமாற்றம் கொள்ள வேண்டும்? பாதை தவறினால் வார்த்தைகளும் குழப்பமாகும்தான்!

எம். ஜெயராஜ், மட்டக்களப்பு.

பின்னட்டையில் சச்சின்-டிராவிட் சொக்கிப் போய் விழிகள் சுழன்றதேன்? ஓ...ரசியா அழகி எலினாவைக் கண்டா...? பூவைச் சுற்றுவது வண்டுதானே! வெரி சூப்பர் இரண்டு படங்களின் கோணங்கள்- உங்கள் கற்பனைக்குப் பாராட்டுக்கள்.

உக்குவளை அம்ரிதா.

திக்திக்கும் முரசே!

உன் படைப்புகள் பலே பலே. அதிலும் 'அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை' பழைய நினைவுகளை மீண்டும் நினைவு படுத்துவதுடன் ஆனையிறவு சமர் பற்றி அறியாதவர்கள் அனைவருக்கும் அதனை படம் பிடித்து காட்டிவிட்டாய்.

எஸ். மனோ, பதுளை.

நீ வாரந்தோறும் சுமந்து வரும் ஆக்கங்கள் அனைத்தும் சூப்பர்!

அதிலும் 'மக்களின் இளவரசி, இங்கிலாந்தின் ரோஜா' டயானாவின் சோகத் தொடர்- 'கண்ணீரில் கரைந்த இரவுகள்' ஆரம்பம் முதல் இறுதிவரை என்னையும் கண்ணீரில் கரைத்து விட்டது.

இத் தொடரைத் தந்த புவனாவிற்கும், இத் தொடரை சுமந்து வந்த என் இனிய முரசிற்கும் என் வாழ்த்துக்களும் நன்றிகளும் உரித்தாகுக!

செ.ரூபானி, கொழும்பு-12.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலை நகல் (Fax):- 074-513266

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு வேறுபிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

www.padippakam.com

# ஐ.தே.கட்சி ஒத்துழையாமை இயக்கம்

# 2000ம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தல்

ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் என்பவற்றுக்காக தற்போதே தயாராகும்படி பொதுஜன முன்னணி தலைமை தமது முக்கிய பிரமுகர்களுக்குக் கட்டளையிட்டுள்ளது.

இதற்கிடையே ஜனாதிபதி ஆட்சி முறையை மாற்றுமாறு பொதுஜன முன்னணியில் உள்ள கட்சிகள் சில ஆர்ப்பாட்டம் நடத்தி உள்ளன. தீர்வை முன்வைக்குமாறும் கோரியுள்ளன.

இந்தக் கட்சிகளது போராட்டம் ஒரு நாடகமே என்பதால், இவைபற்றி ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா அலட்சியம் காட்டியுள்ளார்.

பொதுஜன முன்னணிக்குள் இருந்தாலும் கொள்கைகளுக்காக குரல் கொடுத்ததாக தமது கட்சி ஆதரவாளர்களை திருப்திப்படுத்துவதற்காகவே லங்கா சமசமாஜக் கட்சி போன்றவை போராட்டங்களை நடத்துகின்றன.

பொதுஜன முன்னணியை விட்டால் முன்னாள் இடதுசாரிக் கட்சிகளுக்கு வேறு போக்கிடம் கிடையாது. அதனால் அவர்கள் போராட்டம் நடத்துவதெல்லாம் தமது கட்சி ஆதரவாளர்களை திருப்திப்படுத்துவதற்காகவே என்று ஆளும் அணித் தலைமை நன்கு அறிந்து வைத்துள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளாக அரசை ஆதரித்து அமைச்சர் பதவிகளில் ஒட்டியிருந்தவர்கள், தேர்தல் நெருங்கும்போது ஆரவாரம் காட்டுவது புளித்துப்போன தந்திரம் என்றே அரசியல் பார்வையாளர்களும் கூறுகின்றனர்.

இக் கட்சிகள் போராட்டம் நடத்தியும்கூட, இக் கட்சிகளது கோரிக்கை தொடர்பாக ஜனாதிபதி இவர்களை அழைத்துப் பேச்சு நடத்தவில்லை. இது ஒன்றே இவர்களது போராட்டத்தை பொருட்டாக எடுக்கவில்லை என்பதற்கு சான்றாகும் என்று அவர்கள் கூறுகின்றனர்.

இதற்கிடையே ஆளும் தரப்புடன் இனிமேல் எவ்விடயத்திலும் ஒத்துழைப்பதில்லை என்று ஐ.தே.கட்சி திட்டவட்டமாக முடிவு செய்துள்ளது.

இனப்பிரச்சனைத் தீர்வு விடயத்தில் ஐ.தே. கட்சியுடன் சில விடயங்களில் உடன்பாடு ஏற்பட்டதாக நீதியமைச்சர் கூறிவருகிறார்.

"தீர்வு விடயத்தில் எவ்வித உடன்பாடும் எக்கட்டத்திலும் ஏற்படவில்லை. எக் கட்டத்திலும் அரசாங்கத்தின் தற்போதைய பொதியை ஆதரிக்கமாட்டோம்!" என்று ஐ.தே. கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா திட்டவட்டமாக கூறியுள்ளார்.

"சில தமிழ்க் கட்சிகள் தமது அரசியல் எதிர்காலத்திற்காக ஐக்கிய தேசியக் கட்சியும், அரசாங்கமும் உடன்பாடு காணக் கூடிய சூழல் இருப்பதாக கூறிவருகின்றன. அவ்வாறான சூழல் எதுவும் தற்போதில்லை. மேலும் மேலும் சூழ்நிலை சீர்கெட்டு வருகிறது!" என்று ஐ.தே.கட்சி வட்டாரங்கள் கூறியுள்ளன.

அடுத்து வரவுள்ள ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் என்பவற்றுக்கு முன்பாக இனப்பிரச்சனைத் தீர்வுக்கான புதிய நகர்வுகள் எவற்றிலும் ஆளும் தரப்பு ஈடுபடமாட்டாது என்றும் நம்பகமாகத் தெரியவந்துள்ளது.

தேர்தலுக்கு முன்னர் தற்போதுள்ள அரசியலமைப்பு சீர்திருத்த யோசனைகளை அரசாங்கம் நிறைவேற்றுமானால், ஜனாதிபதி ஆட்சி முறைக்கும் முடிவு கட்டியாக வேண்டும். எனவேதான் அரசியலமைப்பு சீர்திருத்த யோசனைகளை இனப்பிரச்சனை தீர்வோடு, அரசாங்கம் சம்பந்தப்படுத்தி தாமதத்தை நியாயப்படுத்தி வருகிறது.

தேர்தல்களுக்கு முன்னர் புலிகளை ஓரம் கட்டிவிடவேண்டும் என்பதே அரசாங்கத்தின் நோக்கம்.

எதிர்வரும் நவம்பருக்குள் வன்னியில் படை நடவடிக்கைகள் எதிர்பார்த்த பலனை அளிக்கமாட்டாது என்று தெரியவந்துள்ளதால், அடுத்த ஆண்டின் ஆரம்பத்தில் ஜனாதிபதித் தேர்தலை நடாத்துவது பற்றி யோசிக்கப்படுகிறது.

கொழும்பிலும், நாட்டின் பல பகுதிகளிலும் புலிகளது தாக்குதல்கள் பரவலாகி வருவதும் ஜனாதிபதித் தேர்தலை உடன் நடத்தும் யோசனையை தள்ளிவைக்கும் முடிவுக்கு தூண்டுவதாகவும் கூறப்படுகிறது.

## தூதரகம் வெளியிடும் பிரசுரங்கள்

## ஜெனிவா பேரணியில் குறுக்கீடு

விடுதலைப் புலிகள் தங்கள் சர்வதேச பிரசார மையத்தை ஜெனீவா நகருக்கு நகர்த்தியுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச நீதிமன்றம் உட்பட உலகின் முக்கிய நிறுவனங்கள் ஜெனீவா நகரிலேயே இருக்கின்றன.

தமிழீழ விடுதலைப்புலிகள் தங்களுக்கான ஆதரவை திரட்டுவதையிட்டு அதற்கு எதிரான நடவடிக்கைகளை இலங்கை அரசு ஜெனீவா தூதரகத்தின் ஊடாக மேற்கொண்டுவருகிறது. பிரசுரங்கள் அச்சிட்டு வெளியிடுவதோடு புலிகளுக்கு எதிரான சில நடவடிக்கைகளை நேரடியாகவும் மேற்கொள்கிறது.

கடந்த 09.08.99 அன்று ஐ.நாவை நோக்கிய அமைதிப் பேரணியினை ஜெனீவா ரயில்வேஸ்டேசனில் இருந்து தொடங்குவதற்காக பேரணி ஏற்பாட்டாளர்கள் பகுதி பகுதியாக நின்று செயல்பட்டுக் கொண்டிருந்தனர். இவர்களில் ஒரு பகுதியினர் ஐ.நா சபையின் முன்றலில் இப்பேரணியின் கூட்டத்தை நடத்துவதற்காக அதிகாலை வேளையில் மேடைகளை அமைத்துக் கொண்டிருந்தார்கள்.

அப்போது பென்ஸ் காரில் வந்து இறங்கிய சிலர் கூட்டம் நடக்க இருந்த இடத்தின் மறுப்பக்கத்தில் சில துண்டுப்பிரசுரங்களை வைத்துவிட்டு, அண்மையில் கொழும்பு நகரில் வைத்து தற்கொலைக் குண்டுதாரியினால் கொல்லப்பட்ட நீலன் திருச்செல்வத்தின் படத்துடனான ஓர் திரைச் சீலையினையும் அவ்விடத்தில் கட்டி விட்டு மறைந்து விட்டார்கள்.

அதில் விடுதலைப் புலிகள் கொலை வெறி பிடித்தவர்கள் என்றும், தங்களின் பிரதிநிதிகளையே குண்டு வைத்துக் கொலை செய்பவர்கள் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

பின்னர் அதனை பார்வையிட்ட பேரணி ஏற்பாட்டாளர்கள் அத்துணியினை இறக்கியிருக்கிறார்கள். இலங்கை தூதரகத்தைச் சேர்ந்தவர்களே மேற்படி செயலில் ஈடுபட்டதாகத் தெரிகிறது.

## குறி தவறிய தாக்குதல்

## பயணிகள் வேன் சேதம்

மூதூரில் 04.08.99 அன்று நடைபெற்ற சிலிண்டர் தாக்குதலில் தனியார் வேன் ஒன்று சிக்கியது. இதில் சிவஞானமூர்த்தி என்பவர் பலியானார். வேனில் பயணம் செய்த ஐந்துபேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இத்தாக்குதல் பற்றி அறியப்படுவதாவது;

இலங்கை தேசிய துணைப் படையின் கல்லாறு இராணுவ முகாம் இணைப்பதிகாரி புதன்கிழமைகளில் மூதூர் கட்டை பறிச்சான் நெற்சந்தைப்படுத்தும் இராணுவ முகாமுக்கு செல்வது வழக்கம். வேன் ஒன்றிலேயே அவர் செல்வதுண்டு.

கடந்த 04.08.99 அன்று இணைப்பதிகாரியின் வேன் புறப்பட்டு வந்து பாலத்தடிச் சேனை இராணுவ முகாமில் தரித்து நின்றது.

திருமலை-மட்டக்களப்பு வீதியில் மல்லிகைத்தீவுச் சந்திக்கு 200 மீட்டர் தூரத்தில், பிரதான நீர்பாய்ச்சல் வாய்க்காலுக்கு வலப் பக்கமாக புலிகள் காத்திருந்தனர்.

வீதியை நோக்கி கிழக்குத் தெற்காக சிலிண்டர்கள் வைக்கப்பட்டிருந்தன.

அதிகாரியின் வேனுக்காக புலிகள் காத்திருந்தபோது அதே போல தோற்றமுடைய தனியார் வேன் ஒன்று வந்தது. அதனைக் கண்டதும் உடனடியாக சிலிண்டர் ஒன்றை புலிகள் வெடிக்க வைத்தனர்.

அது அதிகாரியின் வேன் அல்ல என்பதை சட்டென்று புரிந்துகொண்டதால் இரண்டாவது சிலிண்டரை வெடிக்க வைக்காது புலிகள் சென்றுவிட்டனர். 20 கிலோ நிறைகொண்ட அந்த சிலிண்டர் பின்னர் பொலிசாரால் கண்டுபிடிக்கப்பட்டது.

வேனில் பலியான சிவஞானமூர்த்தி (63) தற்செயலாகத்தான் வேனில் வந்திருக்கிறார். பஸ் பிடிக்க வீதியில் நின்றவரை வேன் சாரதி கண்டு ஏற்றிக் கொண்டு வந்திருக்கிறார்.

தாக்குதல் நடைபெற்ற இடத்தில் முன்னரும் மூன்று தடவைகள் புலிகளது கண்ணி வெடித் தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன.

## கறுப்பு ஜூலை அனுஷ்டிப்பு!

## அரசின்மீது புலிகள் குற்றச்சாட்டு

1983 கறுப்பு ஜூலையை சந்திரிக்கா அரசாங்கம் அனுஷ்டித்ததும், மத வழிபாடுகள் நடத்தியதும் உலகை ஏமாற்றும் நாடகம் என்று புலிகளின் பத்திரிகையான 'களத்தில்' விபரித்துள்ளது.

இது தொடர்பாக 'களத்தில்' பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது "கசாப்புக் கடைக்காரர் பசுவதைக்கு எதிராக குரல் கொடுப்பது போன்றதே, கறுப்பு ஜூலையை இன்றைய அரசாங்கம் நினைவு கூருவதுமாகும்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் நிகழ்ந்த 83 ஜூலைப் படுகொலைகள் தமிழர்களது விடுதலைப் போராட்டம் வளர்ச்சி பெறுவதற்கு திருப்பு முனையாக இருந்தன என்பது உண்மைதான்.

ஆனால் 1977ம் ஆண்டுக்கு முற்பட்ட சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சிக் காலத்திலும், 1950களில் சந்திரிக்காவின் தந்தையார் பண்டாரநாயக்காவின் ஆட்சிக் காலத்திலும் தமிழீழப் போராட்டத்துக்கு அவசியமான- தாக்கமான சம்பவங்கள் பல நிகழ்ந்துள்ளன.

தனிச்சிங்களச் சட்டம் கொண்டுவந்தது முதல், அவசரகாலச் சட்டத்தை அறிமுகப்படுத்தியது வரை பல நிகழ்வுகள் பண்டாரநாயக்கா ஆட்சிக் காலத்தில் நடைபெற்றன.

60ல் ஆட்சிக்கு வந்த சிறிமாவோ பண்டாரநாயக்காவே தமிழர் பகுதிகளுக்கு முதன் முதலாக இராணுவத்தை அனுப்பி வைத்த பெருமையைப் பெறுகிறார்.

1971ல் தரப்படுத்தல் கொண்டுவந்து தமிழ் மாணவர்களது எழுச்சிக்கு வித்திட்டவரும் சிறிமாவோ பண்டாரநாயக்காவே. 74ம் ஆண்டு உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் ஒன்பது தமிழர்கள் பலியானதும் அவரது ஆட்சிக் காலத்திலேயே.

இவற்றையெல்லாம் வசதியாக மறைத்துவிட்டு, 83 ஜூலையில் நடைபெற்ற இன அழிப்பு நடவடிக்கை மட்டும்தான் புலிகளது போராட்டத்திற்கு வழிகோலியதாக பொய்யான பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன" என்று குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

## 90ம் ஆண்டில் கிழக்குப் படுகொலை!

## 'பழிவாங்கவே கரும்புலித் தாக்குதல்'

மட்டக்களப்பு வாகரை இராணுவ முகாமில் இடம்பெற்ற கரும்புலித் தாக்குதல் தொடர்பாக மேலும் சில தகவல்கள் வெளியாகி உள்ளன.

தாக்குதல் நடத்திய கரும்புலி மட்டக்களப்பைச் சேர்ந்தவர். அவரது இயக்கப் பெயர் மேஜர் இரட்ணா. சொந்தப் பெயர் பாலசிங்கம் ஆனந்தன்.

தாக்குதலில் பலியான மேஜர் கருணாநாயக்க கடந்த பத்து வருடங்களாக மட்டக்களப்பு பகுதியில் கடமையாற்றியவர். வாழைச்சேனை, கொம்மாதுறை, வாகரை என்று மட்டக்களப் புக்குள்ளேயே பத்துவருடங்களாக பணியாற்றினார்.

இத் தாக்குதல் தொடர்பாக மட்டக்களப்பு புலிகளது வட்டாரம் கூறிய தகவலின்படி, 1990ம் ஆண்டு கிழக்கில் நடைபெற்ற படுகொலைகளுக்கு பழிவாங்கும் விதமாகவே அவர் கொல்லப்பட்டுள்ளாராம்.

1990ம் ஆண்டு கிழக்கு பல்கலைக் கழகத்தில் சுமார் 159 இளைஞர்கள் கைதாகி படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தின் போது, மேஜர் கருணாநாயக்க முக்கிய பங்கு வகித்ததாக புலிகள் கூறியுள்ளனர். 1990ம் ஆண்டு இவர் வாழைச்சேனையில் கடமையாற்றியது குறிப்பிடத்தக்கது.

"நீண்டகாலமாக இவர்மீது குறிவைத்திருந்தோம். நாம் குறிவைத்திருப்பதை அறிந்து விழிப்பாகவே இருந்து வந்தார். முகாமை விட்டு வெளியே செல்வதும் அரிதாக இருந்தது. அதனால்தான் முகாமுக்குள்ளேயே தாக்குதல் நடத்தி நீண்ட கால இலக்கொன்றை பூர்த்தி செய்தோம்!" என்று மட்டக்களப்பு புலிகளது முக்கியஸ்தர்கள் கூறியுள்ளனராம்.

மேஜர் கருணாநாயக்கா சரளமாக தமிழ் பேசக்கூடியவர். மக்களோடு மிகவும் நெருக்கமாகப் பழகி கைக்குள் போட்டுக் கொள்வதிலும் வல்லவராம். இவரை வாகரை பிரதேச வாசிகள் 'சங்கிலியன்' என்று பட்டப்பெயர் கூறியே அழைப்பார்கள்.

மட்டக்களப்பில் கப்டனாக இருந்து மேஜராகி, ஆணையிடும் அதிகாரியாக பதவி உயர்ந்தவர் கருணாநாயக்கா.

கரும்புலி மேஜர் அரசப்பனால் கொல்லப்பட்ட ராசிக்கும் புலிகளது நீண்டகால இலக்காக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## புலிகளின் செயற்பாடுகள் தீவிரம்

## மலையகத்தில் பாதுகாப்பு உஷார்!

(கண்டி நிருபர்)

மத்திய மலை நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் புலிகளின் செயற்பாடுகள் தொடர்பாக பலர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

பத்து நாட்களுக்கு முன்னர் மாத்தளையில் கைது செய்யப்பட்ட ஒருவர் தெரிவித்த தகவலை அடுத்து 15ஆம் திகதி இரவு தலாத்துஓயா கெட்டவெல என்னும் இடத்தில் தேடுதல் நடத்தப்பட்டது.

அத் தேடுதலின்போது நல்லூரைச் சேர்ந்த ஒரு தமிழ் இளைஞரும் யுவதியும் கைதாகினர்.

இவர்களிடம் இருந்து ஜெலிக்னைட் மருந்து 4 கிலோவும் மற்றும் வேறு பொருட்களும் மீட்கப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கடந்த 12ஆம் திகதி கண்டியை நோக்கி அம்பிட்டியாவில் இருந்து வந்த தனியார் பஸ் ஒன்றின் ஆசனத்துக்கு அடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சக்தி வாய்ந்த வெடிபொருட்களையும் பொலிஸார் கைப்பற்றினர். இதனைக் கொண்டுவந்த நபர் பிடிபடாது தப்பிச் சென்றுவிட்டார்.

அட்டனில் கடந்த 12ஆம் திகதி டெலிகொம் நிலையத்திற்கு அருகில் குறித்த நேரத்தில் வெடிக்கும் குண்டு ஒன்றும், 14ஆம் திகதி அட்டனில் சிற்றுண்டிச் சாலை அருகில் வைக்கப்பட்டிருந்த இதே தரத்திலான குண்டு ஒன்றையும் அட்டன் பொலிஸார் கைப்பற்றி உள்ளனர்.

கண்டியில் தலாத்து ஓயாவில் கைப்பற்றப்பட்ட வெடிபொருட்கள் தொடர்பாக மாத்தளையில் கைதாகிய சுருட்டுச் சுற்றும் தொழிலாளியான நல்லூர் தமிழ் இளைஞர் ஊடாகவே அந்த விபரங்களை பொலிஸார் பெற்றுக் கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கண்டியில் இப்பொழுது வரலாற்றுப் பெருமை மிக்க எசல பெரஹரா தொடங்கியிருக்கிறது. 25 ஆவது வருடாந்த தேசிய விளையாட்டு நிகழ்வுகளும் கண்டியில் கடந்த வாரம் இடம்பெற்றன. ஜனாதிபதியும் கடந்த 15ஆம் திகதி தலதாமாளிகையில் மறுசீரமைக்கப்பட்ட மின் ஒளி அலங்காரத்தையும் தொடக்கி வைத்தார். கண்டி பெரஹரா இம்மாதம் 26ஆம் திகதிதான் நிறைவு பெறும்.

இவ்வருடத்தில் மத்திய பிரதேசத்தில் புலிகளின் செயற்பாடுகள் படிப்படியாக அதிகரித்து வருவதையே பிரஸ்தாப சம்பவங்கள் எடுத்துக்காட்டுவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதற்கிடையில் வெளி இடங்களில் இருந்து மலையகத்திற்கு வருகை தரும் தமிழ் இளைஞர்கள் பலர் கடந்த சில மாதங்களாக கைது செய்யப்பட்டனர். அவர்களில் பலர் விடுதலையாகி இருப்பதுடன் மற்றும் சிலர் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## திருமலையில் தாக்குதல் இலக்குகள்

## கைதானவர் கூறிய தகவல்

ஆகஸ்ட் 10ம் திகதியன்று புலி இயக்க உறுப்பினர் ஒருவர் திருமலையில் கைதானார். திருமலை ரயில்வே நிலையத்தின் அருகில் வைத்து காவலரணிலிருந்த பொலிசாரிடம் பிடிபட்ட கிருஷ்ணபிள்ளை இராமேஸ்வரன் என்பவர் (அன்பு மாமா என்னும் இயக்கப் பெயர் கொண்ட இவருடைய அடையாளம் ஆ901) பல முக்கியமான தகவல்களை-விசாரணைகளின்போது வெளியிட்டிருப்பதாகத் தெரிகிறது.

தோரமண்காடு என்ற இடத்தில் பல பயங்கரமான வெடி மருந்துப் பொருட்களை படையினர் மீட்டெடுத்துள்ளனர்.

இவை பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த இடங்களைப் பற்றிய தகவல்களை அன்பு மாமாதான், விசாரணையின் போது வெளியிட்டுள்ளாராம்.

திருகோணமலையில் பாரிய தாக்குதல்களை நடத்துவதற்காகவே இவ்வெடி பொருட்கள் கொண்டு வரப்பட்டதாகவும் வேறு பல போராளிகள் திருமலையில் ஊடுருவி இருப்பதாகவும் மேலும் அவர் கூறியிருக்கிறார்.

திருகோணமலையிலுள்ள இராணுவ உயர் அதிகாரிகளையும், பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த இலக்குகளையும் தாக்குவதற்காகவே வெடிமருந்துகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டதாகவும் அவர் கூறியிருக்கிறார். மேலும் பல தகவல்களைப் பெறுவதற்காக அன்பு மாமா தொடர்ந்து விசாரிக்கப்பட்டு வருகிறார்.

## மின்சாரம் சீர்குலைப்பு!

தங்களால் சீர்குலைக்கப்பட்டிருந்த மின்விநியோகத்தை மீண்டும் சீர் செய்வதற்கு புலிகள் கிழக்கு மாகாணத்தில் அனுமதித்ததைத் தொடர்ந்து, இவ்வாண்டு ஜனவரிமாதம் முதல் மட்டக்களப்பு மாவட்டம் மீண்டும் மின்சாரத்தைப் பெற்றது தெரிந்ததே.

கடந்த எட்டு மாதகாலமாக மட்டக்களப்பு மாவட்ட மின் விநியோகம் சுமுகமாக இருந்தது.

இருப்பினும் கடந்த வாரம் மட்டக்களப்பு மாவட்டத்தில் முதல் தடவையாக 33 ஆயிரம் வோல்ற்ஸ் அதி உயர் மின் வலுக் கொண்ட 2 தூண்களைப் புலிகள் சாய்த்துள்ளனர். மட்டக்களப்பு-வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக் கழகத்திற்குப் பின்னால் உள்ள கம்பங்களே சாய்க்கப்பட்டன.

இதனால் சுமார் 65 ஆயிரம் ரூபா நஷ்டமேற்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. புதிய மின் கம்பங்களை நிறுவி மின் விநியோகம் சீர் செய்யப்பட்டுள்ளது.

## ஆளும் அணியின் 5 வருடம்

## பெரு விழா நடத்த ஏற்பாடு

பொதுஜன முன்னணி ஆட்சிப்பீடமேறி ஐந்து வருடங்கள் பூர்த்தியாவது தொடர்பாக மிகப்பெரிய அளவில் கொண்டாட்டங்களுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. 21ம் திகதி சனிக்கிழமையன்று கொழும்பு நகரில் நடைபெறவிருக்கும் ஊர்வலத்திலும் பொதுக்கூட்டத்திலும் இலட்சக்கணக்கான மக்களை நாடெங்கணுமிருந்து திரட்டி வந்து கலந்து கொள்ளவைக்க அமைச்சர்களும் ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

ஆட்சியாளர்களின் இவ்விழாவுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து வரும் ஆயுதப்படை அதிகாரிகள் பாடுதான் பெரும் திண்டாட்டத்தை எதிர்நோக்குகிறது. இதற்குக் காரணம், விடுதலைப் புலிகளின் தாக்குதல் குழுக்கள் தலைநகரில் ஊடுருவியிருப்பதாகத் தெரிவிக்கப்படும் செய்திதான்.

கடந்த மாதம் ஐக்கிய தேசியக் கட்சியினர் நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை கண்ணீர்ப் புகைக் குண்டுகள் வீசியும், தண்ணீர் பீச்சியடிக்கும் குழாய்களைப் பயன்படுத்தியதுடன் குண்டாந்தடிகளால் தாக்கியும் ஆர்ப்பாட்டக்காரர்களை பொலிசாரும் ஆயுதப் படையினரும் விரட்டி அடித்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியினர் கொள்ளுப்பிட்டியிலுள்ள ஜனாதிபதியின் வாசஸ்தலத்துக்குச் சென்று மகஜர் ஒன்றைக் கையளிக்க முயன்றபோது ஆயுதப்படையினர் தடுத்தனர். செய்தியாளர்களும் படப்பிடிப்பாளர்களும் தாக்கப்பட்டனர் என்பதும் தெரிந்ததே.

ஊர்வலத்தில் கலந்து கொண்ட ஆர்ப்பாட்டக்காரர்களைத் தாங்கள் தடுத்தமைக்குக் காரணம், விடுதலைப்புலிகளின் தற்கொலைப் படையினர் ஊர்வலத்தில் ஊடுருவி, வேண்டாத விளைவுகளை ஏற்படுத்தி விடக்கூடும் என்று கருதியமைதான், என்று படைத்தரப்பினரும் பொலிசாரும் கூறியிருந்தனர்.

இது உண்மையானால், பொ.ஜ. முன்னணி நடத்தும் பெருவிழாவுக்கு எப்படி அனுமதி கொடுக்கப் பட்டது? என்று பலரும் ஐயப்பாடு தெரிவித்துள்ளனர்.

## புலிகள் புகுந்து அச்சுறுத்தல்

## குடியேற்றவாசிகள் வெளியேற்றம்

பொலநறுவை மாவட்டத்திலுள்ள வெலிகந்தை குடாப்பொக்கனையில் உள்ள சிங்கள குடியேற்றம் புலிகளால் அச்சுறுத்தப்பட்டுள்ளதாக ஐலண்ட் பத்திரிகை முன் பக்கத்தில் செய்தி வெளியிட்டுள்ளது.

பௌத்த மதகுரு ஒருவரால் குடாப்பொக்கனையில் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டனர். பின்னர் குறிப்பிட்ட மதகுரு சுட்டுக் கொல்லப்பட்டார்.

தற்போது குடாப்பொக்கனை பகுதியில் புலிகள் ஆயுதங்களுடன் நடமாடுகின்றனர். சமீபத்தில் இங்கிருந்த பொலிஸ் நிலையம் மூடப்பட்டதுதான் புலிகளது நடமாட்டத்துக்கு காரணம் என்று ஐலண்ட் செய்தி கூறுகிறது.

'இது எமது சொந்த மண். இங்கு குடியேற்றங்களை அனுமதியோம்' என்று புலிகள் அப்பகுதி மக்களை அழைத்துக் கூறினார்களாம். இதனையடுத்து அங்கு குடியேறி இருந்த சிங்கள மக்கள் அங்கிருந்து வெளியேறி வருகின்றனர்.

பொலிஸ் நிலையம் இருந்தபோதே அங்கு புலிகள் நடமாடினர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் கூறியுள்ளன.



படிப்பகம்

www.padippakam.com

# தனிச்சிங்களமுகப்பு
## அமைச்சின் அழைப்பிதழ்

சமுர்த்தி இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சினால் தேசிய விளையாட்டு விழா நடைபெற்று வருகிறது. ஆகஸ்ட்-12, 13, 14ம் திகதிகளில் இவ்விழா நடைபெறுகிறது.

இதற்கான சிறப்பு அழைப்பிதழின் முகப்பு முழுக்க தனிச் சிங்களத்திலேயே அச்சிடப்பட்டுள்ளது.

அமைச்சுக்களும், அரச திணைக்களங்களும் தமிழுக்கு சம இடம் கொடுக்க வேண்டும் என்றும், தமிழ் மொழியை அமுல் நடத்துமாறும் சில வருடங்களுக்கு முன்னர் ஜனாதிபதி பணித்திருந்தார். அதற்காக இரண்டுமாத காலக்கெடுவும் விதித்திருந்தார்.

ஆனால் தற்போதும் எவ்வித முன்னேற்றமும் இருப்பதாகத் தெரியவில்லை.

குறிப்பிட்ட அழைப்பிதழ் தமிழ் எம்.பிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# பஸ் வண்டிகள் உண்டு
## ஊழியர்கள் இல்லை!

மட்டக்களப்பு, திருக்கோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய புதிய கிழக்கு பஸ் கம்பனியின் கீழ்வரும் டிப்போக்களில் பஸ் சாரதிகளுக்கும், பஸ் நடத்துநர்களுக்கும் பெருமளவு வெற்றிடம் நிலவுகிறது.

பயணிகளின் தேவையை ஓரளவேனும் ஈடு செய்யக் கூடிய வகையில் மட்டக்களப்பு, வாழைச்சேனை, ஏறாவூர், காத்தான்குடி, களுவாஞ்சிக்குடி, கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, மூதூர், திருக்கோணமலை போன்ற பஸ் டிப்போக்களில் இருந்தாலும், அவற்றைக் கொண்டு நடத்தக்கூடிய ஆளணி இல்லாததால் பல பஸ் வண்டிகளைச் சேவையில் ஈடுபடுத்த முடியாத நிலையில் பஸ்கள் வெறுமனே கிடப்பில் உள்ளன.

தனியார் போக்குவரத்து வாகனங்களையே அத்தியாவசியமாக நம்பியிருக்க வேண்டிய நிலையுள்ளது. அலுவலக ஊழியர்கள், மாணவர்கள், மற்றும் தூரப் பயணம் மேற்கொள்வோரும் தனியார் போக்குவரத்து வாகனங்களையே உரிய வேளைக்கு நம்பியிருப்பதாகக் கூறுகிறார்கள்.

புதிய கிழக்கு பஸ் கம்பனியில் ஆட்சேர்ப்புச் செய்வதற்காக இவ்வாண்டு பெப்ரவரிமாதம் அம்பாறையில் நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்பட்டன. ஆயினும் இன்னமும் வெற்றிடங்களை நிரப்புவதற்குரிய நடவடிக்கைள் எடுக்கப்படவில்லை.

# கொலையா? தற்கொலையா?

கற்பிட்டியில் மூன்று தமிழ் இளைஞர்கள் கைதானார்கள். அவர்களில் ஒருவர் பொலிஸ் நிலையத்தில் மரணமாகியுள்ளார்.

கைதாகும்போது பூரண சோதனை செய்யப்படுவது வழமை. எனவே கைதானபின்னர் சயனைட் உட்கொள்ள சந்தர்ப்பம் இல்லை.

எனவே இந்த மரணத்தை யிட்டு தீர ஆராயவேண்டும். ஆனால் தமிழ்ப் பத்திரிகை ஒன்றே அதனை 'தற்கொலை' என்று தலைப்பிட்டுள்ளது. இது மிக வேதனையானது.

தமிழ்க் கட்சிகள்தான் சோரம் போய் உள்ளன என்றால், பத்திரிகைகளும் ஒத்துப்பாடலாமா?

கற்பிட்டி இளைஞர் மரணம் பற்றி மனித உரிமை அமைப்புக்கள் எங்கு போயின?

பொலிஸ் நிலையத்தில் நடந்த மரணத்தை பொலிஸ் அதிகாரிகளே விசாரிப்பது எப்படி முறையாகும்?

ஒரு எம்.பி. பலியானால் மனித உரிமை பற்றி வாய் ஓயாது பேசுகிறார்கள். ஒரு இயக்க உறுப்பினர் பலியானால் சகோதரப் படுகொலை என்று கூவுகிறார்கள். கற்பிட்டியில் ஒரு தமிழ் உயிர் போய் இருக்கிறது. இந்தத் தமிழ்க் கட்சிகள் எங்கு போயின?

சோ.கிருஷ்ணன்-புத்தளம்.

# 'சக்தி'யின் சார்பு நிலை

'சக்தி' தொலைக்காட்சியின் செய்தி அறிக்கை, அரச தொலைக்காட்சியின் செய்தி அறிக்கைபோல மாறிவருகிறது.

புலிகளை 'பயங்கரவாதிகள்' என்றே பல சந்தர்ப்பங்களில் குறிப்பிடுகிறார்கள். இச் செய்தி அறிக்கைகளுக்கு சிங்கள அதிகாரி ஒருவரே பொறுப்பாக இருப்பதாக அறிகிறோம். அது உண்மையானால் தமிழர் ஒருவரது நிறுவனம் பேரினவாத அபிலாசைகளுக்கு ஊதுகுழலாக மாறுவதாகவே கருத வேண்டியிருக்கும்.

பி.மாதவன், கொழும்பு-05


## மட்டக்களப்பு மாந்திரீகம்

உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கு. மட்டக்களப்பு மாந்திரீக வசியம் செய்து கொள்வதற்கு பரம்பரை வைத்திய மனோதத்துவ நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள்.

இரகசியம் வெளியாகாது.

DR. A.P.S. KUTTY
50, THEATRE ROAD,
NINTHAVUR-21,
SRI LANKA.
067-50349





## கலை அலங்கார வகுப்புக்கள்

* சிகை அலங்காரம்
* அழகுக்கலை
* மணப்பெண் அலங்காரம்
* மலர் கொத்து செய்தல்
* 4 மாத கற்கைநெறி

ஆரம்பம் விரைவில்

சான்றிதழ்கள் வழங்கப்படும்

FASNAZ BEAUTY SALON
142டபிள்யூ. ஏ.சில்வா மாவத்தை.
கொழும்பு-06.
தொலைபேசி: 589457



## மனோதத்துவ வைத்தியம்
வவுனியாவிலும் (வன்னி இன்னில்) சந்திக்கலாம்

இளைஞர்களே! சக்தி இழந்து மெலிந்து, நித்திரையின்மை, பயம் நடுக்கம், ஞாபக மறதி, தாழ்வு மனப்பான்மை ஏற்படக்காரணமான தவறுகளை நிறுத்தி எதிர்காலம் பிரகாசிக்க பிரபல மனோதத்துவ நிபுணர் DR.P.ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்.

### SEXUAL DISORDERS (தாம்பத்திய கோளாறுகள்)

தாம்பத்திய கோளாறுகளுக்கு நோயும் காரணமானாலும் 85% தாழ்வு மனப்பான்மையே காரணமாகும். தாழ்வு மனப்பான்மையை 90 நிமிடத்தில் நீக்கி, நான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்தே பணம் பெறப்படும்.

### வெளிநாட்டில் வசிப்போருக்குவிஷேட ஏற்பாடுகள்

எந்தவித தாம்பத்திய பாதிப்புனாலும் தயக்கமின்றி எழுதவும். உமது கேள்விகளுக்கு விரிவான பதில் தந்தபின் முடியாதவன், இயலாதவன் என்ற தாழ்வு மனப்பான்மை நீங்க மனோதத்துவ சிகிச்சை பதிவு நாடா மூலமும், உடல் பாதிப்பிற்கு நல்ல மூலிகை மருந்தும் பெற்று தாம்பத்திய குறைகளை முற்றாக நீங்கிய ஆண்மகனாகுங்கள். (அந்தரங்கம் உறுதியாக பேணப்படும்) பதில் பெற முத்திரை செலவு அனுப்பவும்.

### மட்டக்களப்பு விலாசத்திற்கு மட்டும் கடிதத் தொடர்பு கொள்ளவும்

நீரிழிவு நோய் முற்றாக சுகமாக்கலாம். மனநோய்கள், தாழ்வு மனப்பான்மை 'ஹிஸ்டீரியா' என்பனவற்றுக்கும் மனோதத்துவ சிகிச்சை உண்டு. ஆஸ்துமா, தலையிடி, வாதம், வெள்ளை போதல், கிரந்திநோய், குழந்தை பேறு இன்மை, முடி உதிர்தல் எல்லாவற்றுக்கும் மருந்துகள் உண்டு.

**கல்முனையில் செப்டம்பர் 4,5ம் திகதிகளில்**
T.M.M. பாமஸி, கல்முனை. T.P. - 067-29329

**வவுனியாவில் செப்டம்பர் 11,12 திகதிகளில்**
(Vanni Inn) 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோயில் ஒழுங்கை, வவுனியாவில் சந்திக்கலாம் T.P.024-22074,

**கொழும்பில் ஆகஸ்ட் 22 முதல் 29 வரை**
DR.P.ARUMUGAM S.A.M.P. REG. 9492
SRI SAWBAKIYA INN, 67/A, WOLFENDHAL STREET, COLOMBO-13
(5 லாம்புச்சந்தியில் இருந்து 100 யார் தூரத்தில் உம்பிச்சி பிளேஸ் பள்ளி வாசலுக்கு முன்னால் உள்ளது) T.P. 338165, 338166, 338164 FAX: 338161.
கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் No-072-609388

கடிதத் தொடர்பு: RESIDENT T.P:- 065-24019

DR.P.ARUMUGAM S.A.M.P.,
NO.51/5. Koolavady Road,
Batticaloa. SRI LANKA.


## முதலாம் வருட நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 02 | 17 |
| 07 | 08 |
| 1931 | 1998 |

### அமரர். உயர் திரு.கிறிசாந்துஸ் மரியநாயகம்

(இளைப்பாறிய மாவட்ட காணி, விவாகப் பதிவாளர்)

எங்கள் குடும்பத்தின் தலைவனாய் பாசத்தோடும் பரிவோடும்
வாழ்ந்த எம் அன்புத் தெய்வமே, பப்பாவே!
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஓடியது ஓராண்டு வையகத்தில்
நீர் எம்மை மறந்து தேவன் வானகத்தில்
இனி எங்கே உமைக் காண்போம் குவலயத்தில்
இன்று நானும் என் மகனும் கண்ணீர் அவலத்தில்
சதிபதியாய் வாழ்ந்து சடுதியாய்ப் போனதேனோ?
அதிகாலையில் தாரகையாய் ஒளிர்வதும் நீர்தானோ?
உமது பாதார விந்தத்தில் எமது கண்ணீரை காணிக்கை ஆக்குகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும் மனைவி ராணி,
மகன் றாஜ் மோகன், தாய், மாமி, சகோதரர், சகோதரிகள்,
மைத்துனர் மைத்துனிகள், மருமக்கள், பெறாமக்கள், உற்றார்,
உறவினர், நண்பர்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல்:- என் றட்ணகுலம்-மைத்துனர். 111£ பாலையூற்று, திருகோணமலை.


## ஹோமியோபதி

தமிழ்நாட்டின் பிரபல ஹோமியோபதி சிகிச்சை நிபுணர்
Dr. R. தியாகராஜன் D.H.M.S. AMRSH (Lond)
நாட்பட்ட தீராத வியாதிகளுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கிறார்.
ஹோட்டல் கிறீன்லண்ட்ஸ். தொ.பே: 585592 - 581986
18.08.1999 - 23.08.1999
இந்தியத் தொ.பே: 0091-431-432946
0091-431-432046
வெளிநாடுகளில் இருப்பவர்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படும்.



சுவிற்ஸர்லாந்தில் சகலவிதமான தொலைபேசி அட்டைகளையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் மற்றும் அனைத்து சஞ்சிகைகள், ஒரிஜினல் வீடியோ கொப்பிகள் வாடகைக்கும்–விற்பனைக்கும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்–

Tarmu Trading
Aarauer Strasse-76
4600-Olten- Swiss.
T.P.& Fax : 062-2971070 Natel :- 079-2771573


## 31ம் நாள் நினைவஞ்சலி



திரு.ஜோசப் பஸ்ரியன்பிள்ளை
(ஜெயசிங்கம்)

பிறப்பு:-25.03.1942
இறப்பு:- 21.07.1999

மறைந்த மாணிக்கமே!
எங்கள் நினைவில்
உறைந்தவரே!
உம் நினைவில்
வாழ்கிறோம் ஐயா!
என்றும் நாம்
உன்னைப் போற்றுவோமய்யா!

தகவல்:-சின்னவன்
ஏ.நிக்ஷன்குடும்பம், வத்தளை.


## METHOD OF COMPUTERISED BOOK - KEEPING & ACCOUNTANCY
கணனி மூலம் கணக்குப் பதிதலும் கணக்கீடும்

மூன்று மாத கால பாடநெறி

கடைக்கணக்கில் இருந்து கம்பனி கணக்கு வரை கணனியின் உதவியுடன் கணக்குப்பதியும் முறை. இப்பாடநெறி தபால் மூலமும் / நேரிலும் கற்கமுடியும். இந்நெறியை பயில்வது மூலம் DIPLOMA IN MCBA சான்றிதழை பெற்றுக் கொள்ளமுடியும்.

விபரங்களுக்கு தொடர்புகொள்க.

BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
S - 27 FIRST FLOOR, COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX.
P.O. BOX NO:162, COLOMBO - 11 TELE: 434770,



## தெய்வீக மருத்துவம்

THEIVEEGAM INTERNATIONAL SOCIAL AND SPIRITUAL SERVICES

சர்வதேச சமூக தெய்வீக சேவை
NTSF-CHARITY REG. NO.HA04BT219

கிரகப்பகை மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனத்தாக்கம் காதல், கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித்தடை, கணவன்-மனைவி குடும்பவாழ்க்கையில் சந்தோஷமின்மை, உறவுப்பகை, வெளியில் சொல்லமுடியாத வெட்கமான பிரச்சனை, தீய பழக்கம், மனிதந்த்தமை, மருந்தீடு, போன்ற தீமைகள் ஏற்படுகின்றது. இது போன்ற வேறு எவ்வித பிரச்சனைகளானாலும் காண்டம் கூறும் சோதிடத்தினால் பிரச்சனைக்குரிய காரணத்தைக் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ இறைவனால் சித்தர்களுக்கு போதித்தருளப்பட்ட புனித புராதன தீங்கற்ற மாந்திரீக தெய்வீக மருந்துவத்தினால் நிவர்த்தியளித்து வருகின்றோம். ஆயுர்வேத மருத்துவர் "பாலசோதிடர் (SAMP)" காலை 8.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை. நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனைகளை எழுதினால், அல்லது பக்ஸ், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, கடல் கடந்து உடன் பயன்தரும் தெய்வீக மருந்துப்பொருட்களை தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். தபால் செலவுகளை அனுப்பாதவர்களின் விடயங்கள் கவனிக்கப்படமாட்டாது. இரகசியம் பாதுகாக்கப்படும்.

தெய்வீகம் ஸ்ரீ லங்கா
கல்லடி அரசவிடுதி வீதி,
மட்டக்களப்பு.

வெளிநாட்டவர்களின் தொடர்புக்கு: T.PHONE/FAX: 0094 65 24825

THEIVEEGAM SRI LANKA
HEAD OFFICE
BATTICALOA-SRI LANKA
T.PHONE/FAX: 065-24825

வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்"
"DISPEL DARKNESS IN LIFE AND LET LIGHT SHINE"


## விழிநீர் காணிக்கை

நன்றி நவிலல்

இகம் :- 26.06.1939
பரம் :- 06.07.1999



அன்பால் அறிவால்
உயர்ந்த எமதில்லத்
தலைவா!

பொன்போல் மிளிர்
மேனியனே புனிதத்
தெய்வநாயகனே!

மின்போல் மறைந்தாய்
மேதினி மக்கள் துயர்
கண்டோ!

இன்ப இறைவன்
பாதமதில் இனிதாய்
சாந்தி பெறுவீரே!

துணைவியார்:-
திருமதி த.நாகேஸ்வரி
மகன்மார்:
செல்வன் த.தர்ஷன் (கனடா)
செல்வன் த.சுதர்ஷன் (கனடா)
செல்வன் த.செந்தூரன்
மகள்:- செல்வி த.நர்மதா
35/1 புளூமெண்டல் லேன்,
கொழும்பு-13.

### திரு. குலசேகரம்பிள்ளை தனநாயகம் அவர்கள்

(முன்னாள் யாழ்/தினேஷ் புத்தகசாலை உரிமையாளர்)


## AFTER A/L WHAT'S NEXT ?

இந்த துரிதப்படுத்தும் எக் கற்கைநெறியானாலும்
ரூபா 3,500/= மட்டுமே.

250 விசேட சலுகை அனுமதிகள் மட்டுமே.

- DIPLOMA IN COMPUTER STUDIES
- CERTIFICATE IN MICROSOFT OFFICE
- CERTIFICATE IN DESKTOP PUBLISHING
- CERTIFICATE IN COMPUTERISED ACCOUNTING
- CERTIFICATE IN VISUAL BASIC/VISUAL J++/VISUAL C++
- CERTIFICATE IN WINDOWS NETWORKING
- DIPLOMA IN HARDWARE ENGINEERING
- CERTIFICATE IN INTERNET APPLICATIONS
- ACCPAC / C Language / PASCAL / FOXPRO

புதிய பிரிவுகள் ஆரம்பம் Aug 29, Sept 1,3,11, 1999.

COLLABORATED WITH K.T.P.M COMPUTER TRAINING CENTRE
29, Kovil Road, Kurumankadu, Vavuniya. 024-22521
37, Vairavapuliyankulam, Vavuniya 024-20487

INSTITUTE OF INFORMATION SYSTEMS (PVT.) LTD.
( AFFILIATED TO IMIS-U.K )
(AUTHORISED DEALERS NSK. SINGAPORE)
379, 1st Floor, Galle Road, Colombo-06.
Tel : 074-517390, 077-319426



## மலையாள மாந்திரீகம்



மலையாள மாந்திரிகத்தில் எண்ணங்களை எண்ணிய வாறு மின்சார வேகத்தில் வெளி நாட்டிலும் உள்நாட்டிலும் வெற்றிபெற்றவர்கள் எத்தனை எத்தனையோ. இனி உங்கள் குறை என்ன. கணவன் மனைவி பிணக்கா. காதல் தோல்வியா. பிரயாணத் தடையா. இன்னும் அனேக துறைகளுக்கு உங்கள் பிறப்பு த்திகதியுடன் தொடர்பு கொள்ளவும். வெளிநாட்டு தொலைபேசி அழைப்புகள் இலங்கை நேரப்படி காலை 9- மணி முதல் இரவு 9 மணி வரையே ஏற்றுக் கொள்ளப்படும். தேவை எனில் உலக மாந்திரிக ஜோதிட சக்கரவர்த்தி

P. K. Samy (J. D. G. A. N) J.P
162, Kotahena Street, May Feild Road,
Clombo 13
Tel 342463, 344831, 431137
Fax 0094 1 342464



## அதிஷ்டத்தை அள்ளித் தரும் அதிசயக் கற்கள்

பல வருடங்கள் ஆராய்ச்சியின் பின் மண்ணுக்கடியில் மறைந்து நிற்கும் மகத்தான இரத்தினங்களை உங்கள் கைபிடிக்குள் கொண்டு வந்துள்ளோம். வாழ்வில் வியாபாரம், தொழில், திருமணம், கல்வி, வெளிநாட்டு பயணம் மற்றும் பல வகைகளில் அதிஷ்டத்தை அள்ளித் தரும் முழு சரீரத்திற்கும் பொருந்தும். இரத்தினங்களை நியுமராலஜி முறையில் இலவசமாகக் கணித்துக் கூற அதை அணிந்து நீங்களும் அதிஷ்டசாலியாக மாறலாம்

Accredited by National Gem & Jewellery Authority

ARUL JEWELLERS
3, Sea Street, colombo-11.
Sri Lanka. T.P.436331
Branch :105, Galle road, wellawatte, Colombo.06.




படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# கடற் புலிகள் விரித்த வலை

மட்டக்களப்பில் புலிகளுக்கு எதிரான நடவடிக்கை ஒன்றுக்கு படையினர் தயாராகி வந்த நேரத்தில், புலிகள் படையினரை தேடி நகருக்குள் வந்துவிட்டனர்.

மட்டக்களப்பில் ஜெயந்தன் படையணி உட்பட புலிகளின் புதிய அணிகள் பரவலான தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றன.

அங்கு புலிகளின் தாக்குதல் தீவிரமானால் வன்னிப் போர்முனை பற்றி தமது பிரசாரங்கள் அடிபட்டுப்போகும் என்று அரசாங்கத்திற்கு கவலை.

அதனால்தான் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தை அவசரமாக மட்டக்களப்பு சென்று படையதிகாரிகளைச் சந்தித்து நிலமைகளை ஆராய்ந்தார்.

படை உயரதிகாரிகளும் மட்டக்களப்பு விரைந்து படையினரை உஷார்ப்படுத்தினார்கள்.

இதன் அடுத்த கட்டமாக புலிகளது கட்டுப்பாட்டுப் பகுதிகளை நோக்கி மட்டுப்படுத்தப்பட்ட நகர்வுகளுக்குப் படையினர் ஆயத்தமாகினர்.

புலிகளை தற்காப்பு நிலைக்குள் தள்ளுவதுதான் இந்த நகர்வுகளின் நோக்கம். அவ்வாறு தற்காப்பு நிலைக்குள் தள்ளினால் மட்டக்களப்பு நகருக்குள் ஊடுருவும் வேகம் மட்டுப்படுத்தப்படும்.

முகாம்கள், காவலரண்கள் என்பவற்றை தாக்குவதற்கு தோதாக அணி திரள்வதையும் தடுக்கலாம் என்பதுதான் படையினரின் திட்டமாக இருக்க வேண்டும்.

ஆனால் படையினர் புலிகளைத் தேடிச் செல்ல முன்பாக, புலிகள் படையினரின் காலடிக்குள் குண்டுகளை கொண்டுவந்துவிட்டனர்.

இதனால் மட்டக்களப்பில் தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளிலேயே படையினர் காலூன்றி நிற்பதற்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது.

09.08.99 அன்று வாகரை படை முகாம்களுக்குள்ளேயே கரும்புலி புகுந்து முகாம் அதிகாரியை தீர்த்துக் கட்டியிருந்தார்.

படையினருக்கு பெரும் சவாலாக, அவர்களது குகைக்குள் சென்றே அவர்களைச் சந்தித்த நிகழ்வாக இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

அன்றிலிருந்து இரண்டு நாட்களுக்குள் மற்றுமொரு பாரிய தாக்குதல் மட்டக்களப்பு நகருக்குள் நடந்திருக்கிறது.

கண்ணிவெடித் தாக்குதலில் பாரிய உயிரிழப்பை படைத்தரப்புக்கு கொடுத்துள்ளனர் புலிகள்.

மிகத் துல்லியமாக இத் தாக்குதல் திட்டமிடப்பட்டது.

இத் தாக்குதல் நடப்பதற்கு முதல் நாளான 10.08.99 அன்று மட்டக்களப்பு ஸ்ரீ மாமாங்கப் பிள்ளையார் ஆலய ஏற்பாடுகளால் நகரம் களைகட்டியிருந்தது.

பொதுமக்கள் மட்டுமன்றி படையினரும் ஆலய உற்சவத்தால் கவரப்பட்டிருந்தனர். பாதுகாப்புக் கெடுபிடிகளும் தளர்த்தப்பட்டிருந்தன.

சம்பவத்திற்கு முதல்நாள் பிற்பகல் முதலே எவ்வித இடையூறும் இல்லாது திருவிழாவுக்கு செல்ல வசதியாக போக்குவரத்து பாதை படையினரால் திறந்துவிடப்பட்டிருந்தது.

மாலையாகியதும் ஆலயத்திருவிழா ஏற்பாடுகளுக்காக நகரக் கடைகளும் நேரகாலத்துடன் மூடப்பட்டுவிட்டன.

இவ்வாறு மூடப்படும் கடைகள் தீர்த்த உற்சவம் முடிந்து மறுநாளே மறுபடி திறக்கப்படுவதுண்டு.

இதனால் நகரமே வெறிச்சோடியது. அதுமட்டுமன்றி 10.08.99 அன்று இரவு மட்டக்களப்பு நகரில் மின்சாரம் தடைப்பட்டிருந்தது. அதனால் நகரமே இருளில் மூழ்கியிருந்தது.

இவையெல்லாம் புலிகளுக்கு கிளைமோர் தாக்குதலுக்கான தயாரிப்புக்களைச் செய்வதற்கு சாதகமான சூழல்களாக இருந்தன.

நகரில் நீண்ட நாட்களாக மூடிக்கிடந்த கடையொன்றையே கிளைமோர் தாக்குதல் நடத்த புலிகள் பயன்படுத்தினார்கள்.

ரிமோட் கொன்ட்ரோல் மூலமே கிளைமோர் இயக்கப்பட்டதாக செய்திகள் வெளியாகி இருந்தன.

வவுனியா, மன்னார் பாதையில் ரிமோட் கொன்ட்ரோல் குண்டுகள் மூலம் வாகனத் தொடரணிகள் தாக்கப்பட்டன.

அதனால் மட்டக்களப்பு தாக்குதலும் ரிமோட் கொன்ட்ரோல் மூலம் நடத்தப்பட்டதாக உடனே தப்பாக கணிக்கப்பட்டுவிட்டது.

வயர் பொருத்தி இழுத்துச் சென்றுதான் வெடிக்க வைத்திருக்கிறார்கள். 'V' வடிவில் கிளைமோர் குண்டு தயாரிக்கப்பட்டிருக்கிறது.

வாகனத் தொடரணி அதனைத் தாண்டும் போது வயரை அழுத்தி வெடிக்கவைத்துவிட்டு புலிகள் இருவர் தப்பிச் சென்றுள்ளனர்.

தொடரணியில் பொலிசார் சென்ற ட்ரக்கை குறிவைத்தே தாக்குதல் நடத்தப்பட்டதாக கூறுவதும் தவறானது. ஏனெனில் தொடரணியில் சென்ற பொலிசாரும், படையினரும் பெரும்பாலானோர் சிவில் உடையில் சென்றனர். எனவே பொலிசார் யார், இராணுவத்தினர் யார் என்று இனம் காண முடியாது.

அது மட்டுமன்றி தொடரணியில் வரும் படையினர் தம்மைக் காணமுடியாதவாறும், கிளைமோர் வெடிக்கும்போது தம்மை பாதிக்காத தூரத்திலுமே புலிகள் வயர்களுடன் பதுங்கியிருந்தனர்.

தொடரணியில் குறிப்பிடப்பட்ட ஒரு ட்ரக்கை துல்லியமாக இனம் காண சந்தர்ப்பமோ, நேர அவகாசமோ இருக்காது. அவ்வாறு கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தால், கிளைமோரை வெடிக்க முன்பே வாகனம் தாண்டிப் போய்விடும்.

தொடரணியில் வரும் ஏதாவது ஒரு வாகனத்தை தகர்ப்பதுதான் புலிகளது நோக்கமாக இருந்தது. பொலிசாரைவிட இராணுவத்தினருக்கு ஆள் இழப்பை அதிகப்படுத்துவதையே புலிகள் அதிகம் விரும்புவர்.

எனினும் அன்றைய தாக்குதலில் பொலிஸ் ட்ரக்தான் மாட்டியது. உடனடியாக 9 பேர் பலியானார்கள். 21 பொலிசார் காயமடைந்தனர். காயமடைந்த பலரது நிலை கவலைக்கிடமாகவே இருந்தது.

பலியான பொலிசாரில் இரண்டுபேர் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் மெய்ப்பாதுகாவலர்.

ஒரு மாதத்திற்கு முன்னர் 14.07.99 அன்று புதன்கிழமை படையினரின் வாகனத் தொடரணிக்கு குறிவைத்து, மட்டக்களப்பு பிரதான பொலிஸ் நிலையம் முன்பாகவே சைக்கிள் குண்டொன்றை புலிகள் நிறுத்தி வைத்திருந்தனர்.

நேரம் கணித்து தயாரிக்கப்பட்ட அந்த சைக்கிள் குண்டுத் தாக்குதல் திட்டமிட்டபடி வெற்றியளிக்கவில்லை.

தற்போது மீண்டும் ஒரு புதன்கிழமையே தொடரணிக்கு குறிவைத்து, திட்டமிட்டபடி காரியத்தை முடித்துள்ளனர்.

இதன் பின்னர் மட்டக்களப்பில் தேடுதல்கள், கைதுகள் தீவிரமாகியுள்ளன. கறுப்பு சீருடை அணிந்த படையினர் தேடுதல்களை மேற்கொள்ளுகின்றனர்.

முன்னர் வெள்ளைவேன் பீதியைக் கிளப்பி பொதுமக்களை கிலி கொள்ளவைத்தனர். தற்போது கறுப்பு சீருடையில் தேடுதல் நடத்தி பீதியைக் கிளப்புகின்றனர்.

உளவியல் ரீதியில் மக்களை கிலி கொள்ள வைப்பதற்கே இவ்வாறான கறுப்பு சீருடைகள் பயன்படுத்தப்படுகின்றன.

-●●-

நீண்ட நாட்களின் பின்னர் முல்லைக் கடலில் கடற்சமர் நடந்துள்ளது. 16.08.99 அன்று முல்லைத்தீவு புல்மோட்டை கடற்பரப்பில் இச்சமர் மூண்டது.

புல்மோட்டை கடற்பரப்பில் இதற்கு முன்னரும் பல கடற்சமர்கள் நடந்துள்ளன.

16.08.99 அன்று நடைபெற்ற கடற்சமருக்கு முன்னோடியான சண்டை ஒன்று 12.08.99 அன்று முல்லைத்தீவு கொக்கிளாய் கடற்பரப்பில் நடைபெற்றது.

புலிகளது படகுகள் செல்வதை கடற்படை ரோந்துப் படகுகள் கண்டுவிட்டன.

இதனையடுத்து புலிகளின் படகுகளை நோக்கி டோரா சண்டைப் படகுகள் விரைந்தன.

கடற்புலிகளுக்கும், கடற்படையினருக்கும் இடையே மோதல் மூண்டது. இம் மோதலில் இரு தரப்பும் பெரிய இழப்புக்கள் ஏதுமின்றி சண்டையை முடித்துக் கொண்டன.

கடற்புலிகளது இருபடகுகளை தாம் மூழ்கடித்ததாக கடற்படையினர் கூறினர். ஒரு டோராப் படகை தாம் சேதமாக்கியதாகவும், தமது தரப்பில் இழப்பில்லை என்றும் புலிகள் அறிவித்தனர்.

இச் சண்டையின் பின்புதான் தமது படகுகளை கண்டதும் தாக்குவதற்கு துரத்தி வரும் கடற்படையினரை வலை விரித்துத் தாக்க கடற்புலிகள் திட்டமிட்டனர்.

16.08.99 அன்று அதிகாலை மூன்று மணியளவில் புல்மோட்டைக் கடற்பரப்பில் கடற்புலிகளது படகுகள் சில நடமாடின.

கடற்படையினருக்கு போக்குக் காட்டி தம்மை நோக்கி இழுப்பதற்காக கடற்புலிகள் செய்த தந்திரமே அதுவாகும்.

சற்று எட்டத்தில் கடற் கரும்புலிப் படகு ஒன்று தாக்குதலுக்கு தயாராக நின்றிருந்தது.

கடற்புலிகள் எதிர்பார்த்தது போன்றே கடற்படை ரோந்துப் படகுகள் புலிகளது படகுகளைக் கண்டதும் தாக்குதல் நடத்த விரைந்தன.



கடற்படை டோரா சண்டைப் படகுகள் தாக்குதல் தொடுக்க ஆரம்பித்தன. கடற்புலிகளும் தப்பி ஓடுவது போன்றும், பின்னர் நின்று தாக்குவது போன்றும் போக்குக் காட்டியபடி இருந்தனர்.

அதிகாலை 3.15 மணியளவில் இச் சண்டை ஆரம்பமானது.

கடற்புலிகளும், கடற்படையினரும் சண்டையிட்டுக் கொண்டிருக்கையில், கடற்கரும்புலிப் படகு டோராவைக் குறிவைத்து விரைந்து சென்றது.

கடற் சண்டைகள் பலவற்றில் அனுபவம் மிக்கவரும், படகை இலாவகமாகச் செலுத்துவதில் திறமை பெற்றவருமான மேரியப்பன் கரும்புலிப் படகை செலுத்திச் சென்றார். அப்படகில் மேரியப்பனும், எழில்வேந்தன் என்னும் இன்னொரு கடற் கரும்புலியும் இருந்தனர்.

கடற் கரும்புலிப் படகு தம்மை நோக்கி வருவதைக் கண்டதும் டோராப் படகு தாக்குதல் தொடுத்தது.

டோராவின் தாக்குதல்களுக்கு போக்கு காட்டியபடி மிக இலாவகமாக படகை செலுத்திய மேரியப்பன், டோராவில் மோதி வெடிக்க வைத்தார்.

இதுதான் நாமறிந்த தகவல் ஆனால், கடற்படையினர் தமது டோரா தாக்கியழிக்கப்பட்டதை ஏற்கவில்லை.

தமது தாக்குதலில் கடற்புலிப் படகுகள் இரண்டு நிர்மூலமானதாகவும் 12 புலிகள் பலியானதாக நம்புவதாகவும் கூறியுள்ளனர்.

ஒரு டோரா முற்றாக தகர்ப்பு. இன்னொரு டோரா சேதம். பத்துக் கடற்படையினர் பலி என்பது புலிகளது தகவல். அது தப்பான தகவல் என்று கூறியுள்ளது கடற்படை தரப்பு.

கடும் சண்டை நடந்தது. ஆனால் தமது படகுகளுக்கோ, படையினருக்கோ சிறு சேதமும் இல்லை என்பது கடற்படை தரப்பின் செய்தி. அப்படியொரு சண்டை ஆச்சரியம்தான்!

கடற்புலிகள், தரப்பில் கடற்கரும்புலி லெப்டினன்ட் கேணல் மேரியப்பன் (வீரவாகு சிவனேஸ்வரன்-மூதூர்), கடற்கரும்புலி மேஜர் எழில்வேந்தன் (வடிவேல் செந்தில்குமார்-மட்டக்களப்பு) ஆகியோர் பலியானார்கள்.

மேரியப்பன் கடற்புலிகளது தாக்குதல் அணித் தளபதிகளில் ஒருவர்.

மேரியப்பன், எழில்வேந்தன் இருவரது உருவப்படங்களுக்கும் புலிகள் பெரும் அஞ்சலி செலுத்தி, தாக்குதல் வெற்றியை கொண்டாடியதாக தகவல்கள் கூறுகின்றன.

இந்த கடற்சண்டையின் பின்னர் கடற்படையினரின் சண்டைக் கப்பல்கள் ஆழ்கடற்பரப்பில் நின்றபடி கடற்கரையை நோக்கி பீரங்கித் தாக்குதல்களை தொடுத்துள்ளன.

இத்தாக்குதலால் மீனவர்களின் படகு ஒன்று தீப்பற்றி நிர்மூலமானது. படகில் இருந்த இரு மீனவர்களும் பலியாகினர். ஒருவரது சடலம் மீட்கப்பட்டது.

தாக்குதலால் படுகாயமடைந்த முஸ்லிம் மீனவர் ஒருவர் புல்மோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

மீனவர் படகு நிர்மூலமானதைத்தான் கடற்புலிகளது படகு நிர்மூலமானதாக கருதி செய்தி கூறப்பட்டதோ தெரியவில்லை.

சமீபகாலத்தில் புலிகளது தாக்குதல்கள் சகல முனைகளிலும் வெற்றியளிப்பதோடு, படைத்தரப்புக்கு பாரிய இழப்புக்களையும் ஏற்படுத்தி வருகின்றன.

# பதுக்கப்பட்டுள்ள வெடிமருந்துகள்

-★-

வடக்கு-கிழக்கிலும் அதற்கு வெளியேயும் சமீபகாலமாக வெடி குண்டுத் தாக்குதல்களையே புலிகள் நடத்தி வருகின்றனர்.

ரிமோட் கொன்ட்ரோல் தாக்குதல், கிளைமோர் தாக்குதல், கரும்புலித் தாக்குதல் போன்றவை நடத்தப்பட்டுள்ளன.

புலிகளிடம் ஆட்பலம் போதாது, உளவியல் ரீதியிலும் தாக்குதல் பலம் இல்லாது போய்விட்டனர். அதனால்தான் இவ்வாறான தாக்குதல்களில் ஈடுபடுகின்றனர் என்று படைத்தரப்பு கூறியதாக சண்டே ரைம்ஸ் இக்பால் அத்தாஸ் கூறியுள்ளார்.

இது தவறான கணிப்பீடு. படையினரை தாக்கி அழிப்பதுதான் புலிகளின் இலக்கு. அதனை தமது தரப்பில் எந்தளவு குறைந்த இழப்புடன் செய்யமுடியுமோ அதுதான் புலிகளுக்கு வெற்றி.

சில மாதங்களுக்கு முன்னரே எக்ஸ்ரே ரிப்போர்ட்டில் இத்தகைய தாக்குதல்கள் தீவிரமாகப் போவதை குறிப்பிட்டிருந்தோம்.

வன்னியில் குண்டுத் தாக்குதல்களுக்கான தீவிரமான பயிற்சிகள் நடந்து வருகின்றன. வெடிகுண்டுகளை பயன்படுத்தி தமது தரப்பில் குறைந்த இழப்போடு படைத்தரப்புக்கு பாரிய இழப்பை ஏற்படுத்துவதே புலிகளது புதிய உத்தி என்று குறிப்பிட்டிருந்தோம்.

இக்குண்டுத் தாக்குதல்களுக்கான பயிற்சிகளின்போது பல வெடி விபத்துக்களும் ஏற்பட்டன. புலிகளும் பலியானார்கள்.

வெடிமருந்துகளை பயன்படுத்தி பல்வேறு தாக்குதல்களை நடத்தக் கூடியதாக பல உறுப்பினர்கள் ஆண்களும், பெண்களும் தயார் படுத்தப்பட்டுள்ளனர். தேர்ச்சி பெற்றுள்ளனர்.

வவுனியா-மன்னார் சாலையில் ரிமோட் கொன்ட்ரோல் மூலம் சைக்கிள் குண்டு வெடிக்கவைத்து நடத்தப்பட்ட தாக்குதலும் புலிகளது தேர்ச்சியைத்தான் காட்டியிருக்கிறது.

வெடிமருந்துகளை பயன்படுத்தி கரும்புலித் தாக்குதல் முதற்கொண்டு கிளைமோர் தாக்குதல்கள் வரை நடத்த வசதியாக வெடிமருந்துகள் நாட்டின் பல பகுதிகளுக்கு புலிகளால் அனுப்பப்பட்டுள்ளன.

இவை புலிகளால் மட்டுமன்றி புலிகளது ஆதரவாளர்களாலும் குறிப்பிட்ட சில பகுதிகளுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.

சிலருக்கு பணம் கொடுத்தும் அவர்கள் ஊடாக வெடி மருந்துகளை புலிகள் தமக்கு தேவையான பகுதிகளுக்கு கொண்டு செல்கிறார்கள்.

இதனால் வெடி மருந்துகளோடு கைதாகும் ஒருவர் புலியாகத்தான் இருக்க வேண்டும் என்றில்லை. அவருக்கு புலிகளது திட்டம் குறித்தோ, குறிப்பிட்ட பகுதியில் புலிகளது செயற்பாடுகள் குறித்தோ எதுவும் தெரியாமல் இருக்கலாம்.

சமீபத்தில் கண்டியில் வெடி மருந்துகளோடு சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் புலிகளோடு எந்தளவு தொடர்பில் இருந்தனர் என்பது சந்தேகம்தான்.

மலையகத்தில் பரவலாக வெடி மருந்துகள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளன என்ற தகவல் பாதுகாப்புத் தரப்புக்கு பெரும் அதிர்ச்சியளித்துள்ளது.

ஆனால் அவை எங்குள்ளன என்பதை கண்டறிவது கடினம். மலையகத்தில் புலிகள் இயக்க உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகமாகியுள்ள நிலையில், பரவலான குண்டுத் தாக்குதல்களை புலிகள் நடத்தக்கூடும்.

நாடெங்கும் பாதுகாப்பு நிலவரத்துக்கு சவால் விடுத்து பாதுகாப்பு தரப்புக்கு திண்டாட்டம் ஏற்படுத்துவதற்கு புலிகள் பல திட்டங்களை வகுத்துள்ளதாக தகவல்கள் கூறுகின்றன.

இதனால் நாடெங்கும் புலிகளது நடவடிக்கைகள் மேலும் தீவிரமாகும் அபாயம் தோன்றியுள்ளது.

-□□-

யாழ் குடாநாட்டில் ஐந்து இளம் பெண்கள் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இக் கைதுகள் யாழ் குடாநாட்டில் இளம் பெண்களிடையே அச்சத்தை உருவாக்கியுள்ளன. இந்த அச்சமானது, சும்மா இருந்து கைதாவதைவிட, புலிகளுடன் சேர்ந்தால் என்ன? என்ற சிந்தனையையும் உருவாக்கும்.

யாழ் குடாநாட்டில் இருந்து 1994இல் சென்ற புலிகள் இப்போது பரவலாக மறுபடி வந்துவிட்டனர்.

தம்மைப் பற்றிய தகவல்களை கொடுத்தோர் தொடர்பாகவும், கொடுப்போர் தொடர்பாகவும் விபரங்களை திரட்டுவதில் புலிகள் ஈடுபட்டு வருகின்றனராம்.

தற்போது யாழ் மாவட்ட புலிகளது இராணுவத் தளபதியாக இருப்பவர் மகேந்தி. இந்தியப் படை காலத்தில் யாழ் குடாநாட்டில் பல்வேறு தாக்குதல்களில் பங்குகொண்டவர்.

யாழ் மாவட்ட அரசியல் பிரிவுத் தலைவர் தூயவன். நிர்வாகத் துறை சார்பாக கடிதங்களை அனுப்பி வருவதும் தூயவன்தான்.

யாழ் குடாநாட்டில் விரைவில் சில தாக்குதல்களை நடத்துவதற்கு மகேந்தி திட்டமிட்டுள்ளதாகவும், அதற்கான உத்தரவுகள் யாழ் குடாநாட்டில் உள்ள புலிகளுக்கு கிடைத்துள்ளதாகவும் தெரிகிறது.

நாரதர்

# அதிரடி அய்யாத்துரை



**தேர்தல் நெருங்கி** வருவதால் பலருக்கு ஞானம் பிறக்க ஆரம்பித்திருக்கிறது. ரெண்டு எழுத்தாருடன் போர் நடத்த அதிகாரமுள்ள சக்தியானவர் விரும்பவில்லையாம். சிறுடைத் தரப்புத்தான் பிடிவாதம் பிடிக்கிறதாம். ரெண்டு எழுத்தாருடன் பேச அதிகாரத்தரப்பு நாட்டமாம். இப்படியொரு கதையை உருட்டிவிட்டால் தமிழ் வாக்குகள் வெறுப்பாகப் பாயாது என்று நினைக்கினமாக்கும். உண்மையாகவே சண்டையை நிறுத்த விரும்பினால் அதிகாரமுள்ள சக்தியானவருக்கு 24 மணிநேரம்கூட அதிகம்தான்! தேர்தலுக்கு முன்னர் சண்டையை நிறுத்தினால், பின்னர் சாதனைப் பட்டியலுக்கு எங்கே போகிறது? இந்த அரிச்சுவடிகூட தெரியாமல் வதந்திகளை நம்பலாமோ?

**விளையாட்டுத்துறை** அமைச்சரின் தந்தையாரின் மரணச் சடங்கு கண்டியில் நடந்தது. அங்கு வடக்கு-கிழக்கு முன்னாள் முதல்வரும், ஜனநாயகக் கட்சித் தலைவரும் இடக்கு முடக்காக சந்தித்தனராம். பின்னர் ஒருவிதமாக சுதாகரித்துக்கொண்டு பழைய பாசத்துடன் கப்பென்று கட்டித் தழுவிக்கொண்டனராம். இரண்டு பேரையும் ஒன்றாகக் கண்ட அமைச்சர்கள், "சண்டை பிடித்துவிடாதீர்கள்!" என்று கிண்டலடித்தார்களாம்.

**தமிழக எழுத்தாளர்** பாலகுமாரன் கொழும்புக்கு விஜயம் செய்திருந்தார். தன்னைச் சந்தித்தவர்களிடம் ரெண்டு எழுத்தார் பற்றியும், அவர்களது தலைவர் பற்றியும் உணர்ச்சிவசப்பட்டு பிரஸ்தாபித்தாராம். தொலைக்காட்சிப் பேட்டியிலும் பூடகமாக ரெண்டு எழுத்துத் தலைவரைப் புகழ்ந்து விட்டுப் போய்விட்டார்.

**இலங்கை இராணுவத்தின்** ஐம்பதாம் ஆண்டு கொண்டாடப்படப்போகுது. அதற்காக முதலாவது தளபதியை அழைக்கப் போகினமாம். முதற் தளபதி தமிழர்: அன்ரன் முத்துக்குமாரு. தளபதி இப்போது தளர்பதியாகி அவுஸ்திரேலியாவில் இருக்கிறார். விழாவுக்கு வரப்போகிறார். இந்த வயதில் பயணம் ஒத்துப்போகுமோ தெரியவில்லை!

**கிழக்கில்** கரும் ரெண்டு எழுத்தார் நடமாட்டம் சிறுடைத் தரப்பிலும் சலசலப்பை ஏற்படுத்தி இருக்குதாம். காரைதீவில் ஆலய பாதுகாப்புக்குச் செல்ல சிறுடையினர் மறுத்தனராம். 'கரும் ரெண்டு எழுத்தார் திரிகிறார்கள். நாங்கள் உங்களுக்கு ஏன் பாதுகாப்புத் தரவேண்டும்?' என்று அதிகாரி கேட்டாராம். குறிப்பிட்ட அதிகாரி பல வருடங்களாக அங்கு பணியில் உள்ளார். அவருக்கும் குறி வைக்கப்பட்டுள்ளதாகத் தகவலாம்.

**கொழும்பு** ஆங்கில தினசரி ஒன்று இனவாதத்தில் முன்னணியில் நிற்பது யாவரும் அறிந்த சமாச்சாரம். நீலத்தார் மறைவுக்காக ஆசிரியர் தலையங்கம் தீட்டி கண்ணீர் கவிதையும் வெளியிட்டுள்ளது.

**சமாதானத்தை** வலியுறுத்தியும், தீர்வை முன்வைக்குமாறும் கொழும்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது. நவசமசமாஜக் கட்சி நடத்திய போராட்டம் நேர்மையானது. ஏனைய போராட்டங்கள் சங்கிலித் திருடன் திருவிழாக் கூட்டத்துக்குள் அரோகரா கோஷம் போட்ட கதைதான். ஆட்சிக்கு ஆதரவான கட்சிகள் ஏன் போராட்டம் நடத்த வேணும்? சமாதானக் கோஷம் போடுவது ஃபாஷன் மாதிரியாகிப்போச்சு!

**மயூராபதி ஆலயத்** திருவிழா கொழும்பில் கோலாகலமாக நடந்திருக்குது. வீதியெங்கும் பக்தி மணம். கூடவே தமிழ் மணம். நிறைகுடங்கள், பக்தர்கள் பாற்குடங்கள் என்று ஒரே கோலாகலம். வீரவிதானக்காரருக்கு வயிறு பற்றி எரிந்திருக்கும்!

**ஜெனீவாவையே** கலங்குவது மாதிரி ஊர்வலம் நடத்தியிருக்கினம் ரெண்டு எழுத்து ஆதரவாளர்கள். அங்குள்ள தூதரகம் அதிர்ச்சியில் இருக்குதாம். ரெண்டு எழுத்து ஆலோசகருக்கு ஜெனிவா செல்ல அனுமதி மறுக்கப்பட்டதற்கும் தூதரகம்தான் காரணமாம்.

**கொழும்பில்** சுவரொட்டிகள் பரவலாக முளைத்திருக்குது. 'பொதியும் வேண்டாம். புலிகளுடன் பேச்சும் வேண்டாம்' என்று எழுதிக்கிடக்குது. அதைப் படித்துப் போட்டு என் நண்பர் ஒருவர் சொன்னார்: "எங்களுக்கும் உந்தப் பொதி வேண்டாம் என்றுதானே சொல்லுகிறோம். உந்த சத்தில்லாத பொதியை வைத்து அவையே சொதி வைக்கட்டும்!" நியாயம்தான்!

**இந்தவாரப் பொன்மொழி:** உபயம் கல்கி.

"எதை எழுதினாலும்
அதை நாலுபேர்
பாராட்டவாவது வேண்டும்
திட்டவாவது வேண்டும்
இல்லையென்றால்
எழுதாமலேயே இருந்துவிடலாம்!"



படிப்பகம்

www.padippakam.com



ஆனையிறவு தாக்குதலின் தோல்விக்கு மத்தியில் 1991 நவம்பரில் மாவீரர்தினம் வந்தது. பிரபாகரன் என்ன கூறப்போகிறார் என்று அறியும் ஆவல் பரவலாக இருந்தது.

பிரபாகரன் விடுத்த செய்தி இதுதான்;

"எனது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய தமிழீழ மக்களே!

இன்றைய தினத்தை மாவீரர் நாளாக, தியாகிகளின் திருநாளாக, எமது தேச்த்தின் பெருநாளாக நாம் கொண்டாடுகின்றோம்.

எமது மண்ணுக்காய், எமது மக்களுக்காய், தமது இன்னுயிரை அர்ப்பணித்த தியாகிகளை இன்று நாம் எமது இதயத்து ஆலயத்தில் நினைவு கூர்ந்து கௌரவிக்கின்றோம்.

## மகத்துவமானவர்கள்

ஒரு புனித இலட்சியத்திற்காக வாழ்ந்து, அந்த இலட்சியத்திற்காகப் போராடி, அந்த இலட்சியத்தை அடைவதற்காக தமது வாழ்வைத் தியாகம் செய்த இந்த மாவீரர்கள் மகத்துவமானவர்கள்.

இந்த மாவீரர்களது அற்புதமான இலட்சிய வாழ்க்கை, அவர்களது தியாகங்கள், அவர்கள் அனுபவித்த துன்ப துயரங்கள், ஏக்கங்கள், அவர்கள் கண்ட கனவுகள்- இவை எல்லாவற்றினதும் ஒட்டுமொத்த வெளிப்பாடாகவே எமது போராட்ட வரலாறு முன்னேறிச் செல்கின்றது. எமது வீர சுதந்திர வரலாறு இந்த மாவீரர்களின் கண்ணீரால் எழுதப்பட்டது.

## கடினமான வரலாறு

எமது விடுதலை இயக்கம் மிகவும் நீண்ட, கடினமான-நெருக்கடிகள் நிறைந்த ஒரு வரலாற்றுப் பயணத்தைத் தொடர்ந்து வருகின்றது. உலகின் எந்தவொரு விடுதலை இயக்கமுமே சந்தித்திராத சவால்களை, சோதனைகளை, எதிர்பாராத திருப்பங்களை இந்த வரலாற்று ஓட்டத்தில் நாம் எதிர் கொண்டோம்.

எமது போராட்டத்திற்கு எதிரான பல்வேறு விரோத சக்திகளும், துரோக சக்திகளும் இணைந்து செயற்பட்டன. எமது வரலாற்று எதிரியுடன் வலிமை மிகுந்த வல்லரசுகளும் எமக்கு எதிரான அணி சேர்ந்து கொண்டன.

சதிகளாக, நாச செயல்களாக, நம்பிக்கைத் துரோகங்களாக, ஏமாற்றுப் படலங்களாக எமது இயக்கம் பல நெருக்கடிகளை எதிர் கொண்டது.

அலையலையாக எழுந்த எதிரியின் படையெடுப்புக்கள் ஒரு புறமும், அந்நிய இராணுவ ஆக்கிரமிப்பை மறுபுறமாகவும் நாம் தனித்து நின்று எதிர் கொண்டோம். பல கட்டங்களில் எமது இயக்கம் அழிவின் விழிம்பிற்கு தள்ளப்பட்டது.

## சுதந்திரத்தின் தூண்கள்

புயலாக எழுந்த இந்தப் பேராபத்துக்களை எல்லாம் மலையாக எதிர் கொள்ள இரும்பை ஒத்த மன உறுதி தேவைப்பட்டது. இந்தச் சோதனை மிகுந்த நெருக்கடியான வரலாற்றுக் கட்டங்களில் எனக்குப் பக்க பலமாக, மனித மலைகளாக உறுதியோடு நின்ற மாவீரர்களை நான் என்றும் மறக்க முடியாது. இந்த இலட்சிய வேங்கைகளின் தளராத உறுதிதான் எமது சுதந்திர இயக்கத்தின் தூண்களாக நிற்கின்றன.

எமது போராட்டம் எத்தனையோ சவால்களுக்கு ஈடு கொடுத்து தன்து விடுதலைப் பயணத்தில் வெற்றி நடைபோட முடிந்தது என்றால் அதற்கான அடிப்படைக் காரணம் எமது இலட்சிய உறுதிதான் என்பதை நான் திடமாகக் கூறுவேன். நீண்ட வரலாற்று அனுபவத்தில் நான் கண்டு உணர்ந்த உண்மை இது.

ஒரு விடுதலைப் போராட்டம் பல சூறாவளிகளைச் சந்திக்கின்றது. பல நெருக்கடிகளை எதிர்கொள்கின்றது. கொந்தளிப் பான பல சூழ்நிலைகளுக்கு முகம் கொடுக்கின்றது. விடுதலைப் போராட்டம் என்பது இரத்தம் சிந்தும் ஒரு மரண பலம். சாவையும், அழிவையும், துன்பத்தையும் பரிசாகக் கொடுத் துத்தான் நாம் சுதந்திரம் எனும் சுவர்க்கத்தை காண முடியும். கரடு முரடான பாதைகள் நிறைந்த இந்த இலட்சியப் பயணத்தில் எமக்கு ஒரேயொரு ஊன்று கோலாக இருப்பது எமது உறுதிதான்.

## நெருக்கடியான வரலாற்றுத் திருப்பம்

இன்று ஒரு புதிய நெருக்கடியான வரலாற்றுத் திருப்பத்தை நாம் சந்தித்து நிற்கின்றோம்.

எதிரிப்படைகள் யாழ்ப்பாணக் குடாநாட்டை முற்றுகையிட்டு நிற்கின்றன. பொருளாதாரத் தடைகளை இறுக்கி உணவுப் பஞ்சத்தை உண்டு பண்ண எதிரி முனைகின்றான்.

இராணுவ அழுத்தம், பொருளாதார நெருக்குதல் என்ற ரீதியில் இரு முனைகளில் எமது மக்கள்மீது யுத்தம் ஒன்று ஏவப்பட்டிருக்கிறது. எமது போராட்டத்தின் அசைக்க முடியாத அரணாக நிற்கும் எமது மக்களின் மன பலத்தை உடைத்துவிட எதிரியானவன் எல்லாவித தந்திரோபயங்களையும் கடைப்பிடிக்கலாம் என்பது எமக்குத் தெரியாதது அல்ல.

எமது மக்கள் சிங்கள இனவாத அடக்குமுறையின் அக்கினிப் பட்டறையில் புடம் போடப் பட்டவர்கள்; அரச பயங்கரவாதத்தின் அகோரங்களைச் சந்தித்தவர்கள். துன்பச் சிலுவையைச் சதா சுமந்து பழகியவர்கள். மரணத்தின் நிழலில் படுத்துறங்கி வாழ்பவர்கள்.

## இறுதி ஆயுதமாக உணவுப் போர்

களைத்துப் போனவனின் இறுதி ஆயுதமாக உணவுப் போர் எமது மக்கள்மீது தொடுக்கப்படலாம். பட்டினித் தீயால் மக்களின் மன உறுதியைச் சுட்டெரிக்க எதிரி முயற்சிக்கலாம். ஆனால் சுதந்திரப் பசியில் உறுதி பூண்ட மக்களை சோற்றுப் பசி தீண்டிடப் போவதில்லை.

எனது அன்பார்ந்த மக்களே!

இன்று நாம் எதிர்கொள்ளும் இந்த நெருக்கடியான சூழ்நிலையில் எதிரியின் எந்த சவாலுக்கும் நாம் முகம் கொடுக்க தயாராக இருக்க வேண்டும்.

எமது மன உறுதிக்கு எதிரி சவால் விடுகிறான். இந்த சவாலை ஏற்பதற்கு எமக்கு ஆன்ம உறுதியை தவிர வேறு ஆயுதங்கள் தேவையில்லை.

சிங்கள அரசானது ஒருபுறம் போர்க் கொடியை உயர்த்திக் கொண்டு மறுபுறம் சமாதானச் சமிக்ஞைகளை காட்டுகிறது.

## சமாதானமா? போரா?

நாம் சமாதானத்திற்கும் தயார், போருக்கும் தயார். சமாதானத்தின் வழியைத் திறப்பதா அல்லது யுத்தத்தின் பாதையில் செல்வதா என்பதனை எதிரி தான் தீர்மானிக்க வேண்டும். நாம் சமாதானத்தின் கதவுகளை திறந்து விட்டிருக்கிறோம். சமாதான வழிமுறையில் சமரசப் பேச்சுக்களை நடத்த நாம் தயார்.

எந்த வித அழுத்தங்களுமின்றி, எந்தவித ஆதிக்கமுமின்றி, சமத்துவத்தின் அடிப்படையில் நீதியின் அடிப்படையில், நிபந்தனையின்றி பேச்சுக்களில் பங்கு கொள்ள நாம் என்றும் தயார்.

எமது கொள்கையை எமது நிலைப் பாட்டை, எமது தேசிய போராட்டத்திற்கு ஆதாரமான அடிப்படைகளை சிங்கள அரசிற்கும் உலகிற்கும் விளக்க, பேச்சுவார்த்தைகள் வாய்ப்பளிக்கும்.

## கௌரவமாக வாழ

நாம் இனத்துவேசிகள் அல்லர். போர் வெறி கொண்ட வன்முறையாளர்களும் அல்லர். நாம் சிங்கள மக்களை எதிரிகளாவோ விரோதிகளாகவோ கருதவில்லை. நாம் சிங்கள தேசத்தை அங்கீகரிக்கின்றோம். சிங்களப் பண் பாட்டை கௌரவிக்கின்றோம். சிங்கள மக்களின் தேசிய வாழ்வில், அவர்களது சுதந்திரத்தில் நாம் எவ்விதமும் தலையிட விரும்பவில்லை.

நாம் எமது வரலாற்று தாயகத்தில் ஒரு தேசிய மக்கள் இனம் என்ற அந்தஸ்துடன் நிம்மதியாக, சுதந்திரமாக, கௌரவத்துடன் வாழ விரும்புகின்றோம். எம்மை நிம்மதியாக வாழ விடுங்கள் என்பதுதான் எமது மக்களின் எளிமையான அரசியல் அபிலாசை. இந்த நியாயமான, நீதியான, நாகரிகமான எமது மக்களின் வேண்டுகோளைச் சிங்கள அரசு எப்பொழுது அங்கீகரிக்கின்றதோ அப்பொழுது தான் ஒரு நிரந்தர சமாதானமும் தீர்வும் ஏற்பட வாய்ப்புண்டு.

## அழுத்தங்களுக்கு விட்டுக்கொடோம்

இராணுவ அடக்குமுறை என்ற அணுகுமுறை மூலம் தமிழ் மக்களின் தேசிய பிரச்சினையை தீர்க்க முடியாது என்பதை சிங்கள அரசு இன்னமும் தெரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. இராணுவ மேலாதிக்கத்தை எட்டிப்பிடிக்க வேண்டும். தமிழர் தாயகத்தை ஆக்கிரமிக்க வேண்டும் என்ற ஆதிக்க வெறி இன்னும் சிங்கள ஆளும் வர்க்கத்திடமிருந்து அகன்று போனதாகத் தெரியவில்லை.

இராணுவ ஆதிக்கத்திற்கும் அழுத்தத்திற்கும், புலிகள் இயக்கம் என்றுமே விட்டுக் கொடுத்ததேயில்லை. கொண்ட கொள்கையில் நாம் என்றுமே வளைந்து கொண்டதில்லை. எமது இயக்கத்தின் இந்த உறுதிப்பாடு உலகத்தின் மிகப் பெரிய இராணுவமே பரீட்சித்துப் பார்த்து தோல்வி கண்டது. சிங்கள இராணுவமும் இந்த வரலாற்றுத் தவறை சந்திக்கத்தான் நேரிடும்.

எனது அன்பார்ந்த தமிழீழ மக்களே!

நீண்ட விடுதலைப் பயணத்தின் சோர்வுகள் எம்மை ஆட்கொள்ளலாம், போராட்ட வாழ்வில் பெரும் சுமைகள் எம்மை அழுத்திப் பிடிக்கலாம். மேலும், பழுக்கள் எம்மீது சுமத்தப்படலாம். ஆனால் நாம் ஒரு சுதந்திர இலட்சியத்தில் பற்றுக் கொண்டு உறுதி கொண்ட மக்களாக ஒன்று திரண்டு நின் றால் எந்தவொரு சக்தியாலும் எம்மை அசைக்கவோ அழிக்கவோ முடியாது. வீர சுதந்திரம் வேண்டி நிற்கும் மக்களுக்கு உறுதிதான் வலிமைக்கு ஆயுதம்.

இன்று எமது மாவீரர்களின் கல்லறைகளில் இருந்த ஒலிக்கும் சுதந்திர கீதமும் உறுதியின் உன்னதத்தைத்தான் பாடுகின்றது."

இதுதான் பிரபாகரன் விடுத்திருந்த செய்தி.

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# மட்டக்களப்பில் புலிகளுக்கு ஏற்பட்ட இழப்பு

அரசியல் தொடர்

அற்புதன் எழுதுவது

## தளபதி பலி

1991 நவம்பர் 30ம் திகதி அம்பாறை மட்டக்களப்பு காட்டுப் பகுதிக்குள் படையினர் பதுங்கியிருந்து தாக்குதல் ஒன்றை நடத்தினார்கள்.

இத் தாக்குதலில் புலிகளுக்கு பேரிழப்பு ஒன்று ஏற்பட்டது. மட்டக்களப்பு பிரதித் தளபதியான ஜோய் இத் தாக்குதலில் பலியானார்.

ஜோய் மட்டக்களப்பை பிறப்பிடமாகக் கொண்டவர். 1986ம் ஆண்டு படையினரால் ஜோயின் நண்பர்கள் சிலர் தாக்கப்பட்டனர்.

அதனைக் கண்டு சீற்றமடைந்த ஜோய் புலிகளுடன் தன்னை இணைத்துக் கொண்டார்.

1986 இன் நடுப்பகுதியில் இயக்கத்தில் சேர்ந்த ஜோய் ஐந்து வருடங்களுக்குள் பிராந்திய உபதளபதியாகும் அளவுக்கு திறமையானவராக இருந்தார்.

இந்தியப் படையுடனான போரின்போது பிரபாகரனின் மெய்ப்பாதுகாவலர் அணியில் ஜோய் முக்கிய உறுப்பினர்.

பிரபாகரனை கைது செய்யப்போவதாக சூளுரைத்து இந்தியப் படை மேற்கொண்ட நடவடிக்கை 'ஒப்பரேசன் செக்மேட்'

அதனை முறியடிப்பதில் முன்னின்ற புலிகளில் ஜோயும் ஒருவர்.

இந்தியப் படையணியின் கூர்க்கா படைப்பிரிவின் பிரசித்திபெற்ற அதிகாரி கோர்ணல் பக்ஸி. துணிந்தவர், போர் நுட்பத்தில் வல்லவர் என்று கோர்ணல் பக்ஸியை கூறுவார்கள்.

மணலாற்றுக் காட்டில் புலிகளை வென்று வாகை சூடும் நடவடிக்கைக்கு கோர்ணல் பக்ஸியைத்தான் முக்கியமாக நம்பியிருந்தது இந்தியப்படை.

அந்த கோர்ணல் பக்ஸி மணலாற்றுக் காட்டில் புலிகளது தாக்குதலில் கொல்லப் பட்டார். அத் தாக்குதல் அணியில் ஜோய் முக்கியமான பங்கு வகித்திருந்தார்.

ஜோயின் திறமைகளை கவனித்த பிரபாகரன் தாக்குதல் அணிக்கு அவரை தெரிவு செய்தார்.

இந்தியப் படை 'வெளியேற்றத்தின் பின்னர் யாழ் கோட்டை முகாம் தாக்குதலில் ஜோய் பங்கேற்றார்.

கோட்டை மோதலில் ஜோயின் இடுப்பில் குண்டு பாய்ந்தது. அதனை அகற்ற முடியாது என்று டாக்டர்கள் கூறிவிட்டனர்.

இடுப்பில் குண்டு பாதிப்பு இருந்த போதும் தொடர்ந்து சண்டைகளில் ஈடுபட்ட ஜோயை 1991ம் ஆண்டின் மத்திய பகுதியில் மட்டக்களப்பு பிரதித் தளபதியாக அனுப்பிவைத்தார் பிரபாகரன்.

மட்டக்களப்பில் மொறக்கொட்டாஞ்சேனை, சித்தாண்டி ஆகிய பகுதிகளில் படையினருக்கு எதிரான தாக்குதல்கள் பல ஜோயின் தலைமையில் நடத்தப்பட்டன.

குறுகிய காலமே பிரதித் தளபதியாக பொறுப்பு வகித்தபோதும், ஜோய் தலைமை தாங்கிய நடவடிக்கைகள் வெற்றிகரமாக அமைந்தன.

1991 மாவீரர் தினத்தை அனுஷ்டித்து முடிந்த கையோடு ஜோய் பலியானது புலிகளுக்கு துயர் தரும் நிகழ்வாகவே அமைந்தது.

(தொடர்ந்து வரும்)



மணலாற்றுக் காட்டில் புலிகள்

## புலியைப் பாராட்டிய மான்

தமிழர்களது தேசியத் தலைவர் 'தம்பி' பிரபாகரன் அவர்களைப் பற்றி இந்திய அரசியல் தலைவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ளும் வாய்ப்பு எனக்கு பலமுறை கிட்டியது.

1990ம் ஆண்டு மார்ச் மாதம் தமிழீழம் சென்று தலைவர் பிரபாகரன் அவர்களையும், மக்களையும் சந்தித்துவிட்டு தமிழகம் திரும்பி பிறகு டில்லி சென்று பல தலைவர்களைச் சந்தித்து தமிழீழப் போராட்டம் பற்றி விளக்கினேன்.

அப்போது சீக்கியத் தலைவர் சிம்ரஞ்சித்சிங்மான் அவர்களையும் சந்தித்தேன். என்னைமிக அன்புடன் வரவேற்று உபசரித்த அவர் நிலவரங்களை ஆர்வத்துடன் கேட்டறிந்தார்.

இருநாட்டு இராணுவத்தையும் எதிர்க்கத் துணிந்த தம்பி பிரபாகரனது துணிச்சலை பாராட்டினார். இறுதியாக அவர் கூறிய வார்த்தைகள் என்னை திகைக்க வைத்தன.

"எனது வாழ்நாளில் நான் ஒரு முறையாவது பிரபாகரன் அவர்களைச் சந்திக்க வேண்டும். இது எனது நீண்ட நாள் ஆசை!" என்றார்.

பழ. நெடுமாறன்
-தனது நூலில்-

---

ராஜீவ் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை பெற்று, மேன் முறையீட்டில் விடுதலை யானவர் புகைப்படப் பிடிப்பாளர் சுபா சுந்தரம். ராஜீவ் கொலை வழக்கு தொடர்பான புதிய தகவல்கள், விசாரணை நடந்த முறைகள் பற்றி அவர் கூறும் தகவல்கள் புதியவை. கண்டிப்பாக நாம் அறிந்து கொள்ள வேண்டியவை.




# மறு பிறவி

12.05.99

எட்டு ஆண்டுகளுக்கு பிறகு எனது பழைய வானத்தைப் பார்க்கிறேன். எனது பூமியை மீண்டும் காலால் அளக்கிறேன். எனது தமிழ்ச் சகோதரர்களை கண்குளிரப் பார்த்து ஆனந்த ஈரத்தில் நனைகிறேன்.

சென்னை மத்திய சிறைச் சாலையின் வாசலில் நின்று ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தபோது, எட்டு ஆண்டுகளுக்கு முன் ஏற்படுத்தப்பட்ட காயத்தின் தழும்புகளிலிருந்து வலியெடுத்தது. அந்த இருட்டுக் காலத்தின் கசப்பு அனுபவங்கள் மனதுக்குள் பாரமானது.

ஒரு சில விநாடிகள் தான்...

மீண்டும் எனது ஆகாயத்தையும் பூமியையும் பார்த்து பரவசமடைகிறேன். என்னை வரவேற்பதற்காக சிறைவாசலில் காத்திருக்கும் தோழர் சுப.வீரபாண்டியன் தனது செல்லுலார் போனில் பேசிக் கொண்டிருக்கிறார். பறக்கும் தட்டைப் பார்ப்பதுபோல் அச்சரியத்துடன் பார்க்கிறேன் அந்த செல்லுலார் கருவியை. எட்டு ஆண்டுகளுக்கு முந்தைய எமது உலகத்தில் செல்லுலார் கிடையாது. பேஜர் கிடையாது, இத்தனை டி.வி. சேனல்கள் கிடையாது.

எல்லாமே எனக்கு புதிதாகவும் ஆச்சரியமாகவும் தெரிகிறது- மனிதர்களைத் தவிர.

அதோ எனது சகோதர பத்திரிகையாளர்கள் கையசைத்து வரவேற்கிறார்கள்.

என்னிடம் கேமரா பயிற்சி பெற்ற 'சிஷ்யர்கள்' என்னைக் கண்டதும் "சுபாண்ணே... சுபாண்ணே" என்று உணர்ச்சி மிகுந்த உற்சாகத்துடன் குரல் கொடுப்பது என் காதுகளை குளிரச் செய்கிறது.

அவர்கள் கையில் இருக்கும் நவீனரக கேமராக்கள் என்னைப் பார்த்து 'நீ பழைய மனிதன்' என்று சொல்வது போல் இருக்கிறது. வரிவடிவில் இருந்த பத்திரிகையுலகம் ஒளி வடிவிலும் மாறியிருப்பதை டி.வி. கேமரா மேன்களை பார்த்ததும் உணர்ந்து கொள்கிறேன்.

இன்று எத்தனை புகைப்படக் கருவிகள் என்னை சூழ்ந்துகொண்டு வெளிச்சமிடுகின்றன என்பதை என்னால் கணக்கிட முடியவில்லை. ஆனாலும் அந்த தினம் நன்றாகவே ஞாபகமிருக்கிறது. நான் சிறையில் அடைக்கப்பட்ட அன்றைய தினத்தில் மூன்றே மூன்று கேமராக்கள் மட்டுமே என்னை கரிசனத்தோடு பார்த்தன.

வீடு.. இது என் தாய்வீடு.. 98 வயதில் தள்ளாடும் என் தாய், ஈன்ற பொழுதை விடவும் இப்போது சந்தோஷமாக இருக்கிறாள். எனது சகோதரி அடக்கி வைத்திருந்த துயரத்தை கண்ணீரால் வெளிப்படுத்தி விட்டு கட்டிப் பிடித்து முத்தமிடுகிறாள்.

இதோ இரண்டு ஜீவன்கள்... எனது தம்பியின் பேத்திகள்.. நான் சிறையறையில் இருந்தபோது கருவறையில் உருவானவை. புதிய மனிதனைப் பார்ப்பதுபோல் என்னைப் பார்த்து புன்னகைக்கின்றன.

அந்த மழலைகளைப் போல என்னால் புன்னகைக்க முடியவில்லை. எட்டாண்டு நினைவுகள் மனதுக்குள் வட்டமிட்டுக் கொண்டே இருக்கிறது.

இரவு மணி 7 ஆகிறது. இந்த நேரத்திற்கெல்லாம் சிறைப்பறவையாகி விடுவேன். கம்பிகளுக்குள் காலத்தை கணக்கிட்டுக் கொண்டிருக்க வேண்டும்.

இன்று சுதந்திரமாக நடமாட முடிவதைக்கூட என்னால் நம்பமுடிய வில்லை. அடைபட வேண்டிய நேரம் நெருங்கிவிட்டதே என்கிறது எனது மனம். பழைய நெருக்கடியிலிருந்து இன்னமும் மீளாமல்.

மின்விசிறி சுழன்று காற்று தாராளமாக வீசினாலும் தூக்கம் மட்டும் தொலை தூரத்தில் இருக்கிறது. இந்த ஜன்னல் கம்பிகளெல்லாம் சிறைக்கம்பிகளாக மாறினால் தான் உறக்கம் வருமோ!

எத்தனை வகை துன்பங்கள்... எவ்வளவு கொடிய குற்றச்சாட்டு... பாடாய் படுத்திய விசாரணைகள்... சொல்லமுடியாத சித்ரவதைகள்... மரணத்திற்கு தேதி குறித்த தீர்ப்பு... இப்படி அடுக்கடுக்கான சோதனைகளிலும் ஆதரவாய் இருந்த தமிழ் நெஞ்சங்களை நன்றியுடன் நினைத்துப் பார்க்கிறேன்.

எங்கள் கைவிலங்குகளை உடைப்பதற்காக கைவளையல்களை கழற்றித் தந்தும் வழக்கு நிதியை வாரி வழங்கியும் உதவி செய்த ஈரநெஞ்சங்கள் எத்தனை, எத்தனை!

உலகத்திடமிருந்து தனித்துவிடப்பட்ட எனது எட்டாண்டுகளின் அனுபவங்களை!

ராஜீவ் கொலை வழக்கில் மறைக்கப் பட்ட சில உண்மைகளை! சிறைச்சாலை சொல்லித் தந்த பாடங்களை!

ஒரு மறுபிறப்பின் முழுக்கதையை அடுத்த இதழில் கேளுங்கள்...

(தொடர்ந்து வரும்)

www.padippakam.com

## அலசுவது - இராஜதந்திரி

# புதிய பேரினவாதத்தின் நாசூக்கான நகர்வுகள்

வன்னியில் மாங்குளம் வரை செய்தியாளர்களை படையினர் அழைத்துச் சென்றிருந்தனர்.

வன்னி மக்களுக்கு எதிரான பொருளாதார முற்றுகையை தளர்த்தும் நடவடிக்கையை பிரசாரப்படுத்தவே செய்தியாளர்களை அழைத்துச் சென்றிருந்தனர்.

பொருளாதார முற்றுகைக்கு எதிரான சர்வதேச அழுத்தம் காரணமாகவே, அதனை தளர்த்தும் காட்சியை உலகறியச் செய்திருந்தனர்.

வன்னி மாங்குளம் வரை செய்தியாளர்கள் கண்ணுற்ற காட்சிகள் ஆட்சியாளரின் இராணுவத் தீர்வு முனைப்பின் இலக்குகள் எவ்வாறு அமைகின்றன என்பதை துல்லியமாக உணர்த்தியுள்ளன.

வவுனியா முதல் மாங்குளம் வரையான 30 கிலோ மீட்டர் சாலைவரையே செய்தியாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர்.

எனவே செய்தியாளர்கள் கண்ட காட்சிகளைவிட காணாத காட்சிகளே அதிகமாகும்.

ஆனால் மேலோட்டமாக கண்ணுற்ற காட்சிகளே அதிர்ச்சியளிப்பனவாக விளங்கியுள்ளன. தமிழ் பேசும் மக்களது பாரம்பரிய பூமியின் ஒரு பகுதி மயானமாக மாறிக் கிடப்பதையும், அங்கு தமிழ் மக்கள் வாழ்ந்ததுக்கான தடயங்கள் அழிக்கப்பட்டு வருவதையும் அவர்கள் காணக்கூடியதாக இருந்தது.

இலங்கை முழுவதையும் சிங்கள பௌத்த நாடாக மாற்றுவது என்ற கொள்கை கடந்த 51 ஆண்டுகளாக பல்வேறு ரூபங்களில் வெளிப்பட்டு வருகிறது.

தமிழ் பேசும் மக்கள் வாய்வீச்சும், பாராளுமன்ற ஆசையும் கொண்ட தலைமைகளால் வழிநடத்தப்பட்ட காலகட்டம் ஒன்று இருந்தது.

இத் தலைமைகள் இன ஒடுக்குமுறைகளையிட்டு மேடைகள் போட்டு முழங்கினார்கள். பாராளுமன்றத்தில் மணிக்கணக்காக உரையாற்றினார்கள். ஆனால் எக்கட்டத்திலும் இன ஒடுக்குமுறைகளை தடுக்கின்ற வேலைத்திட்டங்களை கொண்டிருக்கவில்லை.

எனவே சிங்களத் தலைமைகள் நேரடியாகவே தமிழ் மக்களைப் பார்த்து சவால்விட்டன. இலங்கை பௌத்த சிங்கள நாடுதான் என்று

> **"புதிய பேரினவாதத்தின் கூட்டாளிகளாக பாராளுமன்றவாத தமிழ்க் கட்சிகள் இருப்பது வெளியுலகை ஏமாற்ற அற்புதமான வாய்ப்பாகும்!"**

அரசியல் யாப்பையே வெளியிடுமளவுக்கு துணிந்திருந்தன.

ஓங்கி அடித்தால் தமிழ் பேசும் தரப்பு ஒடுங்கிவிடும் என்ற பேரினவாதத் துரைத்தனமே அப்போது மேலோங்கியிருந்தது.

இனப்படுகொலைகள், மலையகத் தமிழர்களை நாடற்றவர்களாக்கும் சட்டங்கள், நாடு கடத்தும் ஒப்பந்தங்கள், தனிச் சிங்களச் சட்டம், பௌத்த சிங்கள நாடாக பிரகடனப்படுத்தும் அரசியல் அமைப்பு சட்டம், சிங்களக் குடியேற்றங்கள் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இவையெல்லாம் எந்த ஒளிவு மறைவுமின்றி சிங்கள ஆட்சியாளரால் மேற்கொள்ளப்பட்ட பகிரங்கமான ஒடுக்குமுறைகளாகும்.

ஒடுக்கப்படும் இனத்திடம் இருந்து எதிர்ப்பு கிளம்பாது என்று தெரிந்தால், நேரடியாகவே ஒடுக்குமுறைகளைக் கட்டவிழ்த்துவிட ஒடுக்கும் ஆட்சியாளர்கள் பின்நிற்பதில்லை.

தமிழ் பேசும் தரப்பில் ஆயுதப் போராட்டம் வெடித்தெழும்வரை நேரடியான ஒடுக்கு முறைகளே கட்டவிழ்த்துவிடப்பட்டன.

ஆனால் ஆயுதப் போராட்டம் ஆரம்பமாகி, தீவிரம் பெறத் தொடங்கிய பின்னர் ஒடுக்குமுறையின் வடிவங்கள் மாற்றமடைந்தன.

'24 மணி நேரத்தில் தனிச்சிங்களச் சட்டத்தை கொண்டுவந்து காட்டுகிறேன்' என்று சூளுரைத்தார் சந்திரிக்கா அம்மையாரின் தந்தையார் பண்டாரநாயக்கா.

'போர் ஏன்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்' என்று சவால் விடுத்திருந்தார் ஜே.ஆர்.ஜெயவர்த்தனே.

எதிர்க்கட்சித் தலைவராக அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் அமர்ந்திருந்தபோது, 'அமிர்தலிங்கத்தை எப்படிக் கொலை செய்யலாம்' என்று இரண்டு சிங்கள பா.உக்கள் பகிரங்கமாகவே விவாதித்தனர்.

'பண்டைய சிங்கள அரசர்கள் தேசத்துரோகிகளுக்கு செய்வதுபோல இரு கழுகுகளை ஒன்று சேர்த்துக் கட்டுவது. பின்னர் அமிர்தலிங்கத்தின் கால்களை இரு கழுகுகளின் கால்களோடு கட்டிவிட்டு, கழுகுகளை கட்டியிருந்த கயிறுகளை அறுத்துவிடவேண்டும்' என்று ஒருவர் கூறினார்.

இன்னொருவர், தன்னிடம் அதிகாரம் இருந்தால் அண்மையிலுள்ள தூணில் அமிர்தலிங்கத்தை கட்டிவைத்து அவருக்கு புத்திவரும் வகையில் சவுக்கடி கொடுப்பேன் என்றும், பின்னர் அமிர்தலிங்கத்தின் உடலை வாவியில் அல்லது கடலில் வீசலாம் என்றும் கூறினார்.

தமிழ் பேசும் தரப்பின் அன்றைய தலைமைக்கு பாராளுமன்றத்தில் கிடைத்த மரியாதை இவ்வாறுதான் இருந்தது.

அமிர்தலிங்கத்தை மிரட்டுவதற்காக அவருக்கு சிங்களத் தீவிரவாதிகளால் ஆபத்து ஏற்பட உள்ளதாகக் கூறி, பாதுகாப்பு வழங்கியும் நாடகமாடியிருந்தார் ஜே.ஆர்.

இவ்வாறு மிரட்டி உருட்டி பணியவைப்பதும், பேச்சுக்கு அழைத்து ஏமாற்றுவதாகவுமே தமிழ்த் தலைமைகளை சிங்கள ஆட்சியாளர்கள் கையாண்டு வந்தனர்.

1980களின் பின்னர் இந்நிலை மாறியது. தமிழ் பேசும் தரப்பின் தலைமை பாராளுமன்ற அரசியல்வாதிகளின் கைகளில் இருந்து அரசியல், இராணுவ தலைமைகளிடம் சென்றது.

இதன்பின்னர் சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் பேசும் தரப்பை பார்த்து கேலி செய்யும் நிலைமாறி, கிலி கொள்ளும் நிலை ஏற்பட்டது. இதன் காரணமாக உலக அரங்கில் இராணுவ உதவி கேட்டு கையேந்தும் நிலை தோன்றியது. போரைத் தொடர பொருளாதார உதவிகள் தேவையாக இருந்தன.

வெளியுலகில் கையேந்தும்போது முன்னர்போல, போர் என்றால் போர் என்று கூறிக் கொண்டோ, தனிச்சிங்களச் சட்டத்தை 24 மணிநேரத்தில் கொண்டுவருவேன் என்று கூறிக்கொண்டோ கையேந்த முடியாது.

தம்மை மிகச் சிறந்த சமத்துவ வாதிகளாகவும், நியாயவாதிகளாகவும், சகல இனங்களையும் மதிப்பவர்களாகவும் காண்பித்தபடிதான் கையேந்த முடியும்.

இதன் காரணமாகவே, முதலில் போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம் என்று சவால்விட்ட ஜே.ஆர், 'தமிழர்களுக்கு பிரச்சனை உண்டு. அரசியல் தீர்வு காண்பதற்கு தயார்' என்று கூறவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

எனவே, சிங்களப் பேரினவாதத்தின் பகிரங்கமான நேரடியான இன ஒடுக்குமுறையானது ஜே.ஆரின் பதவிக்காலத்தின் இறுதிக் கட்டத்திலேயே தன் ரூபத்தை மாற்றிக்கொண்டுவிட்டது.

பல்லிளித்தபடியும், இனிப்பான வார்த்தைகளை கூறியபடியும், கட்டியணைத்தபடியும் தமிழ் பேசும் தரப்பை நாசூக்காக தரைமட்டமாக்கும் விதமாக பேரினவாதம் புதிய அவதாரமெடுத்தது. இதுதான் புதிய பேரினவாதம் என்றழைக்கப்படுகிறது.

பழைய பேரினவாதத்தை சுலபமாக இனம் கண்டு கொள்ள முடியும். புதிய பேரினவாதம் ஆபத்தானது. பொல்லாதது. இதனை இனம் கண்டு கொள்வதற்கு தமிழ்பேசும் தரப்பு விழிப்பாக இருந்தாக வேண்டும்.

இன்னொன்றையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். ஆயுதப்போராட்டம் கிளர்ந்தெழாது இருந்திருக்குமாயின் இலங்கை முழுவதையும் பௌத்த நாடாக்கும் இலக்கை பழைய பேரினவாதம் தனது நேரடியான வழிமுறைகள் மூலமாக எப்போதோ உருவாக்கி முடித்திருக்கும்.

தற்போது தமிழ் மக்கள் போரினால் பல இன்னல்களை சுமந்து வரும் போதும், நாம் தமிழ் பேசும் மக்கள், யாருக்கும் தாழ்ந்தவர்களல்ல என்று தலை நிமிர்ந்து நிற்க முடிகிறது. குட்டக் குனியும் மக்களாக கருதப்படும் அவமானமான நிலை இன்றில்லை.

ஆனால் ஆயுதப் போராட்டம் எழுந்திருக்காது விட்டால், தற்போது தமிழ் பேசும் மக்கள் இத் தீவில் வாழ்ந்ததுக்கான தடயங்களை தேட வேண்டிய நிலையும் தோன்றியிருக்கும்.

யாழ் குடாநாட்டை சிங்களமாக்கும் திட்டம் 1980களிலேயே தீட்டப்பட்டிருந்தது. அதனை நிறைவேற்றும் ஏற்பாடுகளும் துரிதமாக நடந்திருந்தன. தமிழ் பாராளுமன்றவாதிகளால் அதனை தடுக்க இயலாதிருந்தது.

எனவே, இலங்கை முழுவதையும் பௌத்த நாடாக்கும் இலக்கை எட்டுவதற்கு புதிய பேரினவாதம் இரண்டு முக்கிய தடைகளை எதிர்கொண்டுள்ளது.

1) விடுதலைப் புலிகளின் அரசியல், இராணுவ பலம்.

2) வெளியுலக அபிப்பிராயம்.

இந்த இரண்டையும் எதிர்கொள்ள புதிய பேரினவாதம் கையாண்டுவரும் வழிமுறைகளில் முக்கியமானவற்றை பின்வருமாறு பட்டியலிடலாம்.

1) இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு அவசியம் என்பதை ஒப்புக்கொள்வது போல நடித்தல்.

2) புலிகளை பயங்கரவாதிகளாக சித்தரித்தபடி, புலிகளுக்கு எதிரான போர் என்ற போர்வையில், இராணுவத்தீர்வை முன்னெடுத்தல்.

3) தற்போது பாராளுமன்ற அரசியல் பாதையில்



உள்ள தமிழ்க் கட்சிகளை தேவைக்கேற்ப பயன்படுத்துதல்.

இந்த மூன்றுமே புதிய சிங்களப் பேரினவாதத்தின் முக்கியமான உத்திகளாகும்.

இந்த உத்தியை ஜே.ஆரைவிட பிரேமதாசா சிறப்பாக செய்திருந்தார். அதற்கு பின்னர் வந்த ஜனாதிபதி விஜயதுங்கா இந்த உத்திக்கு மாறாக செயற்பட்டு பேரினவாதியாக உள்நாட்டிலும், உலக அரங்கிலும் அம்பலமாகியிருந்தார்.

எனவே, புதிய பேரினவாதத்தின் மேற்கண்ட உத்திகளை தற்போதைய ஆட்சியாளரே மிகத் திறம்பட முன்னெடுத்து வருகின்றனர்.

பொதி என்று அழைக்கப்படுகின்ற ஆவணம் ஒன்றைக் காண்பித்தே வெளியுலகை திருப்தி செய்ய முடிந்தமைதான் இன்றைய ஆட்சியாளரின் முதல் வெற்றியாக அமைந்திருந்தது.

இத்தனைக்கும் அது தீர்வுத் திட்டம்கூட இல்லை. வெறுமனே யோசனைகள் மட்டும்தான். தமிழ் பேசும் தரப்பின் அடிப்படை அபிலாசைகளை ஒரு சதவீதமேனும் அந்த யோசனைகள் கணக்கில் கொள்ளவில்லை.

அவ்வாறிருந்தும் வெளியுலகில் அதனை விற்பனை செய்ய தமிழ் பாராளுமன்றவாதிகள் சிலரே உறுதுணை புரிந்து வருவதும் ஆட்சியாளருக்கு கிடைத்த சாதகமான சந்தர்ப்பமாகும்.

எனவே, பொதியை காட்டி உலகின் வாயை மூடியபடியும், அரசியல் தீர்வு பற்றி அடிக்கடி பேசியபடியும் இராணுவத்தீர்வை மிகக் கச்சிதமாக முடுக்கிவிட்டுள்ளனர்.

இந்த விடயத்திலும் சமாசவாத தமிழ்க் கட்சிகள் ஆட்சியாளரின் இராணுவத்தீர்வு முனைப்பை, ஏதோ புலிகளுக்கும், அரசுக்கும் இடையிலான போராக மட்டுமே கூறிவருகின்றன. இவ்வாறு கூறுவதும் ஆட்சியாளருக்கு சாதகமானதேயாகும்.

புலிகளுக்கும், படையினருக்கும் இடையேதான் போர் நடைபெறுகிறது. என்பது புறத்தோற்றம் மட்டுமே. ஆனால் இந்தப் போரை அரசாங்கம் நடத்துவதன் நோக்கம் புலிகளை பலவீனப்படுத்துவது மட்டுமேயல்ல என்பது மிகத் தெளிவாக, உள்ளங்கை நெல்லிக்கனியாக தெரிந்துவிட்டது.

அவ்வாறு தெரிந்த பின்னரும் புலிகளுக்கும், அரசுக்கும் இடையிலான போராக மட்டுமே இதனை சித்தரிப்பது, இப் போர் தமிழ் பேசும் தரப்புக்கு எதிரான போராக விசுவரூபமெடுத்திருப்பதை உலகுக்கு மறைக்க துணைபோகும் செயலாகவே விளங்குகிறது.

எனவே, தனது நண்பர்களாக தமிழ்க் கட்சிகளைப் பெற்றிருப்பதும், அக் கட்சிகளும் முற்று முழுதாக சரணடைவுப் பாதையில் திரும்பி விட்டமையுமே இன்றைய ஆட்சியாளருக்கு கிடைத்துள்ள அற்புதமான வாய்ப்புக்களாகும்.

தமிழ் பேசும் மக்களை தனித்துவம் இல்லாத மக்கள் கூட்டமாக மாற்றுவதற்கு பேரினவாதம் வகுத்த முக்கியமான சூழ்ச்சிப் பொறிதான் நிலப் பறிப்பு.

இதனை பழைய பேரினவாதம் நேரடியாக செய்திருந்தது. இன்றைய ஆட்சியாளர்கள் புலிகளுக்கு எதிரான போர் என்ற பெயரில் மறைமுகமாக ஆனால் தீவிரமாக நிறைவேற்றி வருகின்றனர்.

யாழ் குடாநாட்டில் வலிகாமப் பகுதியில் தமிழ் மக்களை மீளக்குடியேற தடைவிதிக்கப்பட்டுள்ளது. அங்குள்ள குடியிருப்புக்கள் பெரும்பாலும் அழிக்கப்பட்டுள்ளன.

இப்பகுதியில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை நடத்த ஐ.தே.கட்சி ஆட்சியில் திட்டமிடப்பட்டிருந்தது. பின்னர் பரணில் போடப்பட்டு தூசி படிந்து கிடந்து அத்திட்டத்தை மறுபடி இன்றைய ஆட்சியாளர்களே கையில் எடுத்திருந்தனர்.

> **பாராளுமன்ற வாதம் என்றால் என்ன?**
>
> **பாராளுமன்றத்தை புனிதமானதாகவும், பெரும் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடியதாகவும் மக்களை நம்பவைப்பது. இனப் பிரச்சனை தீர்வு பாராளுமன்றத்தில் கிட்டும் என்று கூறி போராட்ட அவசியத்தை மறுத்து–மக்களை திசை திருப்புவது!**

அத் திட்டம் அம்பலமானதாலும், பலத்த எதிர்ப்பு ஏற்பட்டதாலும் அதனை கைவிடப்போவதாக கூறினார்கள். ஆனால் தமிழ் மக்களிடையே பெரும் உணர்ச்சியை கிளறிய இவ்விடயம் தொடர்பாக இன்றுவரை ஜனாதிபதி நேரடியாக எவ்வித உத்தரவாதத்தையும் வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அதுமட்டுமன்றி தன்னிடம் அதிகாரம் இருந்தும் வலிகாம நிலச் சுவீகரிப்பு பற்றிய வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்ய ஜனாதிபதி முன்வரவில்லை என்பதும் கவனிக்கத்தக்கதாகும்.

இனப்பிரச்சனையை காரணம் காட்டி நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறைக்கு நியாயம் கற்பிக்கும் ஆட்சியாளர், அதனை பயன்படுத்தி ஒரு வர்த்தமானி அறிவித்தலைக்கூட இரத்துச் செய்ய முன்வருகிறார்களில்லை.

இராணுவத்தீர்வு முனைப்பில் வெற்றிபெற்ற பின்னர் இத்திட்டத்தை மறுபடி கையில் எடுத்தால் தமிழ்க்கட்சிகளும் கண்டுகொள்ளப்போவதில்லை. தமிழ்மக்களும் எதிர்க்கத் துணியார்கள். எனவே பின்னர் பார்த்துக் கொள்ளலாம் என்றும் ஒத்திவைத்துள்ளதாகவே கருதக்கூடியதாகவுள்ளது.

அதே சமயம் யாழ் காரைநகரில் கடற்படை முகாம் விஸ்தரிப்புக்காக என்றுகூறி தமிழர்களது நிலங்கள் சுவீகரிக்கப்பட்டு வருகின்றன.

தாம் கூறியதால் வலிகாமம் சுவீகரிப்பை கைவிட்டுவிட்டதாக தமிழ்க் கட்சிகளும் மக்களை ஏமாற்றிவிட்டு மௌனமாகிவிட்டன. வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்யுமாறோ, காரைநகர் காணி சுவீகரிப்புப் பற்றியோ இக் கட்சிகளும் மூச்சுக் காட்டவில்லை.

யாழ் குடாநாட்டில் நாகவிகாரை போன்ற பௌத்த ஆலயப் புரைமைப்பில் படையினர் முன்னிற்கின்றனர். ஆனால் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள வலிகாமம் பகுதியில் இந்து கிறிஸ்தவ ஆலயங்கள் பல சிதைவுண்டு கிடக்கின்றன.

இதேபோன்றே வன்னியிலும் நிலப்பிடிப்பு என்பது நிலத்தின் கோலத்தையே மாற்றும் விதமாக மாறியுள்ளது.

இடம்பெயர்ந்த மக்கள் இனி எப்போதும் அங்கிருந்து திரும்பிவந்து உரிமை கொண்டாட முடியாதளவுக்கு வீடுகள், கடைகள், கோவில்கள், பாடசாலைகள் யாவும் தரைமட்டமாகியுள்ளன.

இந்து, கிறிஸ்தவ ஆலயங்கள் இடிந்துகிடக்க, மறுபுறத்தில் பௌத்த ஆலயங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. தமிழர்களது காணிகளில் சிங்கள விவசாயிகள் பலன் பெறுவதற்கும் அனுமதிக்கப்படுகின்றனர். படிப்படியாக அக் காணிகளில் அவர்களே உரிமை பாராட்டுவார்கள் என்பது தெரியாத விடயமல்ல.

வன்னியில் படை நடவடிக்கை தொடங்கியபோதே பறையனாளங்குளம் என்பது சப்புமல்புர என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. பின்னர் எதிர்ப்பினால் பெயர் மாற்றம் கைவிடப்பட்டாலும்கூட, பெயர் மாற்றத்தூண்டிய மனோபாவம் அப்படியேதான் இருக்கிறது.

அந்த மனோபாவமே இப்போது வன்னியின் பல பகுதிகளை பௌத்த பகுதிகளாக உருமாற்றம் செய்தபடி தொடர்ந்து கொண்டிருக்கிறது.

தற்போதைக்கு வலிகாமத்திலோ, வன்னியில் விடுவிக்கப்பட்ட பகுதிகளிலோ சிங்களக் குடியேற்றங்கள் நடத்தப்படாமல் இருக்கலாம்.

ஏனெனில், குடியேற்றம் நடத்த முற்பட்டு எதிர்ப்பு ஏற்படும்போது, அதனை புலிகள் தமக்கு சாதகமாக பயன்படுத்துவார்கள். தமது நோக்கம் 'தமிழர்களை புலிகளிடம் இருந்து விடுவிப்பது மட்டுமே' என்று உலக அரங்கிலும் கூறமுடியாமல் போகும் என்பதால் தங்கள் நோக்கங்களை அடக்கிவைத்திருக்கலாம்.

ஆனால் இராணுவத்தீர்வில் வெற்றி கண்டுவிட்டால் பின்னர் உலக அபிப்பிராயம் பற்றியும் ஆட்சியாளர்கள் கவலைகொள்ளமாட்டார்கள். ஏனெனில் பின்னர் போரை நடத்த தற்போதுள்ளது போன்று பெரும் நிதித் தேவை இருக்காது.

எனவே, தமிழ் பேசும் தரப்பின் உடனடிக் கடமை, இன்றைய யுத்தத்திற்கு அடிப்படை காரணமாக இருப்பது தமிழ் பேசும் தரப்புக்கு எதிரான இராணுவத் தீர்வு முனைப்பே என்பதை உலகுக்கு எடுத்துக்காட்டுவதேயாகும்.

தமிழ் பேசும் மக்களது பாரம்பரிய பூமியை உருமாற்றம் செய்துவரும் ஆபத்தான நிகழ்வுகளையும் போதுமானளவு அம்பலப்படுத்தியாக வேண்டும்.

அரசின் வாக்குறுதிகளை நம்பி நிலப் பிடிப்பு விவகாரத்தில் அலட்சியமாக இருப்பது எதிர்காலத்தில் தமிழ் பேசும் தரப்பு நாடோடிகளாக நட்டாற்றில் விழுவதற்கே வழிவகுக்கும்.

---

## சந்திக்கு வராத சங்கதிகள்

**நக்கீரன்**

'கோவணத்தோடு மீன்பிடிக்க வேண்டும்' என்ற கட்டளையை தளர்த்திவிட்டார்களாம். பார்த்தீர்களா? படையினரின் பெரிய உள்ளத்தை!! "புல்லரிக்கிறது!" இப்படிக் கூறவும் ஆட்கள் இருக்கிறார்கள்.

கோவணத்தோடு மீன்பிடிக்க வேண்டும் என்று உத்தரவிடுமளவுக்கு படையினரின் மனோநிலை இருந்திருக்கிறது என்றால், தமிழர்கள் பற்றிய அவர்களது கணிப்பு என்ன? அதுதான் முக்கியம்.

எத்தனை கேவலமாக நினைத்திருக்கிறார்கள். நாடெங்கும்தான் கடல்வலயச் சட்டம் இருக்கிறது. கொழும்பு, காலி போன்ற கேந்திர முக்கியத்துவமிக்க கடற்பகுதிகளில் சிங்கள மீனவர்களும்தான் கடலுக்கு செல்லுகிறார்கள். இங்கெல்லாம் இப்படி ஒரு உத்தரவு போடத் துணிவார்களா? மனம்தான் உடன்படுமா?!

யாழில் கோவணத்தோடு செல்ல வேண்டும் என்ற உத்தரவை மறுப்பின்றி ஏற்றிருந்தால் தளர்த்தித் தான் இருப்பார்களா?

இந்த அநாகரிகமான உத்தரவு தொடர்பாக எந்தவொரு தமிழ்க் கட்சியும் முதலில் அக்கறை காட்டவேயில்லை. ஆனால் 'முரசு' உட்பட பத்திரிகைகள் இதனை கண்டிக்கத் தலைப்பட்ட பின்புதான், வழக்கம்போல தமிழ்க் கட்சிகள் அறிக்கைகள் விட்டன.

தமிழ்க் கட்சிகளுக்கு உண்மையாகவே சுரணை இருந்திருந்தால் அந்த உத்தரவு வந்தவுடனேயே எதிர்த்துக் குரல் கொடுத்திருக்க வேண்டும். மீனவர்களை கோவணத்தோடு செல்ல வேண்டாம் என்று தடுத்து அவர்களது போராட்டத்துக்கு தலைமை தாங்கியிருக்க வேண்டும். நிச்சயம் தீர்வு கிட்டியிருக்கும். ஏனெனில் இவ்வாறான அநாகரிகமான உத்தரவுக்கு எதிர்ப்பு வந்து அம்பலமாகும்போது அரசு அதனை பகிரங்கமாக நியாயப்படுத்த முடியாது.

அடிமைத்தனத்தை எதிர்க்கும் மனோபாவத்தை மக்களிடம் உருவாக்குவதே அரசியல் கட்சிகளது பணி. அடங்கிப் போகும் மனப்போக்கை ஊக்குவிப்பதல்ல.

***

**தா**ம் கூட்டாக அறிக்கை விட்டதால்தான் வன்னிக்கு உணவு போனதாம். தமிழ்க் கட்சிகள் சில கூறியுள்ள இந்த ஆண்டின் மிகச் சிறந்த தமாஷ்களில் இதுவும் ஒன்று.

இதில் முதலாவது விஷயம், வன்னிக்கு அரசு தானாக முன்வந்து உணவு அனுப்பவில்லை.

நாட்டின் ஒரு பகுதிக்கு ஒரு குறிப்பிட்ட

### உரிமை கோரும் தமிழ் கட்சிகள்



வரையறைக்குப் பின்னரும் உணவு அனுப்பாது ஒரு அரசாங்கம் தாமதிக்க முடியாது. அப்படித் தாமதித்தால் உலகம் அதனை அனுமதியாது.

சில வாரங்கள் தடைபோட்டுப் பார்க்கலாம். அதற்குள் மக்கள் புலிகளை நெருக்கி நிபந்தனைகளுக்கு கட்டுப்பட வைத்தால் வெற்றிதான் என்று அரசாங்கம் கணக்குப் போட்டது.

அந்தக் கணக்குப் பிழைத்துப்போனது. யூ.என்.எச்.சி.ஆர் போன்றவை இவ்விடயம் பற்றி ஜெனிவாவிலும் பேசின. வடக்கு-கிழக்கிலும் போராட்டங்கள் பரவலாக நடக்கத் தொடங்கின. பொருளாதார முற்றுகை புலிகளுக்கு சார்பான நிலையையே தோற்றுவித்தது. இந் நிலையில்தான் அரசாங்கம் முற்றுகையைக் கைவிட்டது.

இந்த தமிழ்க் கட்சிகள் விடுத்த வேண்டுகோளை அரசு மதித்திருந்தால், இக் கட்சிகளது ஒரு பிரதிநிதியையாவது அழைத்துப் பேசியிருப்பார்களே! கடிதம் கிடைத்தது என்றாவது பதில் போட்டிருப்பார்களே.

ஏற்கனவே புலிகளின் நிழலில் குளிர்காய்ந்தனர். இப்போது மக்களது போராட்டங்களால் கிடைக்கும் பலன்களுக்கும் உரிமை கோர ஆரம்பித்துவிட்டன தமிழ்க் கட்சிகள்.

அரசு இவர்களது கூட்டையே ஒரு பொருட்டாக எடுக்கவில்லை. இவர்கள் என்னவென்றால் 'நாம் கூறித்தான் யாவும் நடக்கிறது' என்று கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

***

**யா**ழ் குடாநாட்டில் மீனவர்கள் கோவணத்தோடு மீன்பிடிக்கும் கட்டளையை தளர்த்துமாறு ஈ.பி.டி.பி தலைவர் தேவானந்தா அரசிடம் கோரியிருந்தார். இது படையினருக்கும் தெரியும்.

ஆனால் அந்த உத்தரவை தளர்த்தும் முடிவை எடுத்தபோது, யாழ் படைத்தரப்பு ஈ.பி.டி.பியை அழைக்கவில்லை. மீனவர் பிரதிநிதிகளை அழைத்து பேசிவிட்டு, அவர்களது கோரிக்கைக்கு இணங்கியே தளர்த்துவதாக அறிவித்தனர்.

படைத்தரப்பு நினைத்தால் ஈ.பி.டி.பி பிரதிநிதி ஒருவரையும் கூட்டத்துக்கு அழைத்திருக்கலாம்.

'இவர்கள் கூறி நாம் கேட்பதா?' என்ற எண்ணத்தில்தான் தம்மை அழைக்கவில்லை என்று ஈ.பி.டி.பி வட்டாரங்களே கூறுகின்றன.

தமிழ்க் கட்சிகளை இன்று நடத்தும் முறை இதுதான். ஆனால் தமக்கு தேவையானபோது புலிகளுக்கு எதிராகப் பயன்படுத்த தவறுவதில்லை.


படிப்பகம்

www.padippakam.com

# உண்மைத் தொடர்
## அதிர் இடி 75

**கடந்தவாரம்**

**அமீன் தனது இரண்டாவது மனைவியான 'கே'க்கு எதிராக சதி செய்கிறான். அவளது வீட்டில் துப்பாக்கி இருந்ததாக கைது செய்கிறார்கள். அவள் விடுதலையானதும் அமீனை எதிர்க்கத் துணிகிறாள். அமீனால் அவள் கொல்லப்படுகிறாள்.**

**இனி....**

# இடி அமீன்

'கே'யின் உடல் அருகே அமர்ந்த அமீனுக்குள் தன் ஆண்மையை அவள் இளக்காரமாகக் கூறியதுதான் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

அவனுக்கு இரத்தம் கொதித்தது. அதே கொதிப்போடு அவள் உடலை கத்தியால் அறுக்கத்தொடங்கினான்.

கசாப்புக்கடையில் மாடு வெட்டுவது போல, அவளது உடலை துண்டு துண்டாக வெட்டிக்கொண்டிருந்தான்.

'யாருக்கடி ஆண்மை போதவில்லை?' என்று அவன் உதடுகள் புலம்பிக்கொண்டிருந்தன.

அமீனுக்கு கொலை புதிதல்ல. மனித மாமிசத்தையே உண்ணும் அவனுக்கு மனித உடலை வெட்டிப்போடுவதும் புதிதல்ல.

ஆனாலும் இதற்கு முன்னர் இவ்வாறு யாருடைய உடலையும் துண்டு துண்டாக வெட்டியதில்லை.

'கே'யின் உடல் முழுவதையும் வெட்டியதில் அவனுக்கு வியர்த்தது. குளிரூட்டப்பட்ட அறையிலும் வியர்க்கும் அளவுக்கு சூடாகியிருந்தான்.

கேயின் தலையைத் தவிர, உடலின் ஏனைய பகுதிகள் யாவுமே துண்டு துண்டுகளாக குவிந்து கிடந்தன.

வேலை முடிந்த பின்னர்தான் அமீனுக்குள் தலைவிரித்தாடிய மிருகம் சற்று ஒய்ந்தது. அவனது வெறித்தனம் சற்றுத் தணிந்தது.

குவிந்து கிடந்த சதைக் குவியலை சற்று நேரம் உற்றுப் பார்த்தான். அவனது முகத்தில் கொடூரமான திருப்தி குடிகொண்டிருந்தது. அவனது தடித்த உதடுகளில் புன்னகை தோன்றி மறைந்தது.

தன் செயலுக்காக ஒரு கணம்கூட அவன் வருந்தவில்லை. தன்னை இகழ்ந்தவளுக்கு தகுந்த தண்டனை தந்துவிட்டதாகவே நினைத்தான்.

தன் உதவியாளரை அழைத்தான். "பெரிய கோணிப்பை ஒன்று கொண்டு வா!" என்றான்.

கோணிப்பையோடு வந்த உதவியாளனுக்கு, சதைக்குவியலைக் கண்டதும் தலைசுற்றியது. பயத்தில் கை கால்கள் வெடவெடத்தன. அருவருப்பில் வாந்தி வரும்போலவும் இருந்தது.

அமீனின் உதவியாளன் கொலைகளைப் பார்க்காதவன் அல்ல. ஆனால் இப்படி உடம்பைக் கொத்துக் கறியாக்கியதை அவன் பார்த்ததில்லை.

**"என்னடா பார்க்கிறாய்? நம்பிக்கைத் துரோகிகளுக்கு நான் கொடுக்கும் உச்சபட்ச தண்டனை இதுதான். எல்லாவற்றையும் வாரிக் கோணிப்பைக்குள்ளே போடு!"** என்றான் அமீன்.

அமீன் சர்வசாதாரணமாகக் கூறிவிட்டான். உதவியாளனுக்கு குமட்டிக் கொண்டு வந்தது. 'கே'யின் தலை அவனைப் பரிதாபமாகப் பார்ப்பதுபோல இரத்தம் காயாமல் கிடந்தது.

நடுங்கும் கரங்களால் அத் தலையைத் தூக்கி கோணிப்பைக்குள் திணித்தான். பின்னர் சதைக் குவியல்களை திணித்தான். பின்னர் மூட்டையாகக் கட்டினான்.

அவன் மூட்டையைக் கட்டி முடிப்பதற்கு இடையே அமீன் அந்த மூட்டையை எங்கே போடவேண்டும் என்று முடிவு செய்து அதற்கான ஆட்களையும் தயார்படுத்தி விட்டான்.

கேயின் காதலரான டாக்டர் முக்காசாவின் கார் டிக்கிக்குள் மூட்டையை வைத்துவிட வேண்டும். பின்னர் காரைப் பொலிசார் சோதனையிடவேண்டும். முக்காசா மீது கொலைப்பழி சுமத்தவேண்டும் என்று திட்டம் போட்டுவிட்டான் அமீன்.

மருத்துவமனையின் வாகனத் தரிப்பிடத்தில் டாக்டர் முக்காசாவின் கார் நிறுத்தப்பட்டிருந்தது.

அதன் அருகே வேன் ஒன்று வந்து நின்றது. அமீனின் உதவியாளனும் மேலும் இரண்டு பேரும் இறங்கினார்கள்.

முக்காசாவின் கார் டிக்கியை திறந்து பிணமூட்டையை தூக்கிப் போட்டனர். துரிதகதியில் காரியத்தை முடித்துவிட்டு போய்விட்டனர்.

தனக்கு எதிரான சதிவலை தன்னை நோக்கி நெருங்கி வந்து கொண்டிருப்பதை அறியாதவராக டாக்டர் முக்காசா சத்திர சிகிச்சை ஒன்றை மேற்கொள்ள தயாராகிக் கொண்டிருந்தார்.

அவரது நண்பரான சக டாக்டர் ஒருவர் முக்காசாவின் காரை சிறிது நேர உபயோகத்திற்காகக் கேட்டுவந்தார்.

சத்திர சிகிச்சை முடித்துக் கிளம்ப நேரமாகும் என்பதால், கார்ச் சாவியை கொடுத்துவிட்டார் முக்காசா.

முக்காசாவின் காரை எதிர்பார்த்து பிரதான சாலையில் பொலிசார் காத்திருந்தனர்.

கார் வழிமறிக்கப்பட்டது. "நான் ஒரு டாக்டர். எனது காரை சோதனையிடத்தான் வேண்டுமா?" என்று கேட்டார் முக்காசாவின் நண்பர்.

"மன்னிக்க வேண்டும் டாக்டர். சகல வாகனங்களையும் சோதனையிடுமாறு உத்தரவு!" என்றார்கள் பொலிஸ்காரர்கள்.

டாக்டர் காரைவிட்டு இறங்கவில்லை. காருக்குள் மேலோட்டமாகப் பார்த்துவிட்டு, "சாவியைக் கொடுங்கள் டாக்டர், டிக்கியை பார்க்கவேண்டும்!" என்றார்கள்.

டாக்டர் சாவியைக் கொடுக்காது தானே இறங்கிப்போய் டிக்கியைத் திறந்து காட்டினார்.

டிக்கிக்குள் பிணமூட்டை பத்திரமாகக் கிடந்தது. "இந்த மூட்டைக்குள் என்ன இருக்கிறது?" என்று பொலிஸ் அதிகாரி கேட்ட போது, டாக்டருக்கு அந்த நேரம் பார்த்து ஜோக்கடிக்கும் மூட் வந்து தொலைத்தது.

"என்ன பிணமா கிடக்கப் போகிறது? ஏதாவது வீட்டுச் சாமான்களாக இருக்கும்!" என்று சிரித்த டாக்டரை முறைத்தபடி உத்தரவிட்டார் பொலிஸ் அதிகாரி: "அந்த மூட்டையை அவிழ்த்துப் பாருங்கள்!"


பொலிசார் மூட்டையை அவிழ்த்தபோது, அதற்காகவே காத்திருந்ததுபோல, கேயின் தலை உருண்டு வந்து வெளியே விழ, டாக்டரும் அதனைக் கண்டுவிட, அவரையும் அறியாமலேயே கத்தினார்; "நோ, நோ, நோ"

அந்த டாக்டரையே வெறித்துப் பார்ப்பது போல கண்களை விரித்தபடி தரையில் விழுந்து கிடந்தது கேயின் தலை.

"என்ன டாக்டர் ஜோக்கடிக்கிறீர்கள் என்று பார்த்தால், உண்மையைத்தான் கூறியிருக்கிறீர்கள். இது யாருடைய பிணம் என்பதையும் கூறிவிடுங்கள் டாக்டர் முக்காசா!" என்றார் நமட்டுச் சிரிப்புடன் பொலிஸ் அதிகாரி.

அவர்தான் முக்காசா என்ற பொலிஸ் அதிகாரி தவறாக நினைத்துவிட்டார். "நான் முக்காசா இல்லை, நான் அவரது நண்பன்" என்றார் டாக்டர்.

பொலிஸ் அதிகாரி அவர் கூறியதை நம்பவில்லை. அதற்குள் கூட்டம் கூடிவிட்டது. மனிதத் தலையையும், கோணிப்பைக்குள் தசைத்துண்டுகளையும் கண்ட கூட்டத்தினர் அதிர்ச்சியில் உறைந்துபோனார்கள்.



அது யாருடைய தலை என்பது அப்போது அவர்களுக்குத் தெரியவில்லை. அன்று மாலை வானொலிச் செய்தி கேட்ட பின்னர்தான் தெரிந்தது.

"பெண் ஒருவர் கோரமாகக் கொலை செய்யப்பட்டுள்ளார். அவரது உடல் கண்ட துண்டமாக வெட்டப்பட்டுள்ளது.

கொலையான பெண் நமது அதி உத்தம அதிபரின் முன்னாள் மனைவி கே என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இக் கொலை பற்றிய திடுக்கிடும் தகவல்கள் பல அம்பலமாகியுள்ளன.

கேயின் காதலரான டாக்டர் முக்காசா என்பவரே இக் கொடூர கொலையின் சூத்திரதாரி. கேயைக் கொன்று அவரது உடலை கூறு போட்டு, மூட்டையாகக்கட்டி தன் நண்பரின் மூலமாக பிணமூட்டையை மறைக்க எத்தனித்துள்ளார்.

பொலிசார் வழக்கமான வீதிச்சோதனையில் ஈடுபட்டிருந்தபோது தற்செயலாக முக்காசாவின் காரும் மாட்டிக் கொண்டது.

முக்காசாதான் பிணமூட்டையை தன்னிடம் ஒப்படைத்ததாக அவரது நண்பர் கூறியுள்ளார்.

தற்போது டாக்டர் முக்காசாவும் அவரது குடும்பத்தினரும் தலைமறைவாக உள்ளனர். பொலிசார் வலை வீசித் தேடி வருகின்றனர்.

தன் முன்னாள் மனைவிக்கு நேர்ந்துள்ள துயரமான முடிவு குறித்து அதி உத்தம இடி அமீன் அவர்கள் ஆழ்ந்த கவலையடைந்துள்ளார்!" என்று வானொலி தெரிவித்தது.

உகண்டா அரச வானொலி இடி அமீனின் ஊதுகுழல் என்பதால் அது கூறும் செய்திகளை மக்கள் நம்புவதில்லை.

ஆனால் முக்காசாவின் வாகனத்தில் பிணமூட்டை கிடந்ததைக் கண்ட பொதுமக்கள் மூலமாக செய்தி பரவியதால், முக்காசாதான் கொலை செய்திருக்கவேண்டும் என்று மக்களும் நம்பிவிட்டனர்.

அடுத்த மூன்று நாட்களுக்குள் டாக்டர் முக்காசா பற்றிய மற்றொரு தகவலை பத்திரிகைகள் வெளியிட்டன.

"முலாகோ மருத்துவமனையில் டாக்டர் முக்காசாவும் அவரது குடும்பத்தினரும் அனுமதிக்கப்பட்டனர்.

டாக்டர் முக்காசா தூக்க மாத்திரைகளை அதிகளவில் உட்கொண்டதால் மரணமாகியுள்ளார்.

அவருடைய மனைவியும் ஐந்து பிள்ளைகளும் தூக்கமாத்திரைகள் உட்கொண்ட நிலையில் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

தானும் தற்கொலை செய்து கொண்டதோடு, தன் மனைவி பிள்ளைகளுக்கும் முக்காசா தூக்க மாத்திரை கொடுத்துள்ளார்!" என்று செய்திகள் வெளியாகின.

அந்தச் செய்திகள் உண்மைதான். 'கே'யின் கொலையோடு தன்னைத் தொடர்புபடுத்த சதி நடந்துள்ளதை அறிந்ததுமே குடும்பத்தோடு தலைமறைவாகிவிட்டார் முக்காசா.

அவர்கள் மறைந்திருந்த இடத்தைக் கண்டுபிடித்து பொலிசார் சுற்றி வளைத்தார்கள்.

தானோ தன் குடும்ப உறுப்பினர்களோ உயிருடன் பிடிபட்டால் அமீனிடம் சித்திரவதைகளையும், அவமானங்களையும் சந்திக்க நேரிடும் என்று பயந்துபோனார் முக்காசா.

அவருக்கு ஒரே ஒரு வழிதான் இருந்தது. தினமும் அவமானப்பட்டுச் சாவதை விட, உடனடியாகச் செத்து விடலாம் என்று தீர்மானித்தார்.

சாவதற்கு முன்பாக மளமளவென்று கடிதம் ஒன்று எழுதினார். கேயின் கொலைக்கும் தனக்கும் தொடர்பில்லை என்பதையும், கேயைக் காதலித்ததும், நெருக்கமாகப் பழகியதும் மட்டுமே உண்மை என்றும் எழுதி வைத்தார்.

பொலிசார் வந்தபோது குடும்பமே உயிருக்காகப் போராடிக்கொண்டிருந்தது. அப்படியே அள்ளிக் கொண்டுபோய் மருத்துவமனையில் சேர்த்தார்கள்.

முக்காசா எழுதிய கடிதம் அமீனிடம் சேர்ப்பிக்கப்பட்டது. கண்டுபிடித்து சேர்த்த பொலிஸ் அதிகாரிக்கு பதவி உயர்வை உடனடியாக அறிவித்தான் அமீன்.

கடிதத்தைப் படித்துவிட்டு, அதனைச் சுக்கலாக கிழித்து குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டு, முலாகோ மருத்துவமனைக்கு போன் செய்தான்.

தலைமை டாக்டரிடம் முக்காசாவின் உடல் நிலை பற்றி அமீன் கேட்க, "அபாயக் கட்டத்தை தாண்டிக் கொண்டிருக்கிறார். காப்பாற்றிவிடலாம்" என்றார் டாக்டர்.

மறுமனையில் இருந்து அமீனின் குரல் திடமாக ஒலித்தது: **"முக்காசா உயிர் பிழைத்தால், உமது உயிர் உமக்குச் சொந்தமாக இருக்காது!"** அத்தோடு போனை வைத்துவிட்டான்.

அதன்பின்னரே முக்காசாவின் உயிர் பிரிந்தது. அதாவது பிரியவைக்கப்பட்டது. மனைவி பிள்ளைகள் மட்டுமே காப்பாற்றப்பட்டனர்.

டாக்டர் முக்காசா இறந்து போனதால், கேயை கொடூரமாகக் கொன்றது அவர்தான் என்றும் அந்த உண்மை அம்பலமானதால்தான் தற்கொலை செய்து கொண்டார் என்றும் மக்களும் முடிவு செய்து கொண்டனர்.

முக்காசாவின் மரணச் செய்தியை அமீன் புதுமையாகக் கொண்டாட நினைத்தான்.

நான்காம் மனைவியான அழகி மெடினாவை ஜனாதிபதி மாளிகைக்கு வருமாறு அழைத்தான். மெடினாவுக்கு புதிய அனுபவங்கள் காத்திருந்தன.

(இடி தொடரும்)

**தருவது ரசிகன்**

# கிரகண கொலை



சூரிய கிரகணம் பார்ப்பதற்கு யாருக்குத்தான் ஆசையில்லை. எகிப்தில் ஒரு பெண்ணுக்கு அந்த ஆசை அபாயத்தில் முடிந்திருக்கிறது.

எகிப்து நாட்டைச் சேர்ந்தவர் அப்துல் நாசர் நூருதீன். அவரது மனைவி செய்ராப்.

சூரிய கிரகணத்தை தொலைக்காட்சி வழியாக கண்டுகளித்துக் கொண்டிருந்தார் செய்ராப்.

அந்த நேரத்தில் அவரது கணவர் 'ரீ' போட்டுத் தருமாறு கேட்டார். சூரியகிரகணத்தை பார்த்துவிட்டு போட்டுத் தருகிறேன் என்று மனைவி கூறினார்.

இதனால் இருவருக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. இறுதியில் மனைவியின் கழுத்தை நெரித்துக் கொன்றுவிட்டார் கோபக்கார கணவர்.

தற்போது பொலிசில் சரணடைந்து இருக்கிறார்.

# வயாக்ரா விபரீதம்



ஆசைக்கு வயதில்லை. அந்த ஆசை அளவோடு இருந்தால் பழுதில்லை.

சுவீடன் நாட்டைச் சேர்ந்த 80 வயதுக்காரர் ஒருவருக்கும், 66 வயதுக்காரர் ஒருவருக்கும் செக்ஸில் ஈடுபட ஆசைவந்திருக்கிறது.

இருவருமே 'வயாக்ரா' மாத்திரை சாப்பிட்டுவிட்டு, பெண்களை நாடிப் போனார்கள்.

திடீரென்று நெஞ்சுவலி ஏற்பட்டது. சொல்லிவைத்தாற்போல இருவருக்குமே ஒரே நேரத்தில் நெஞ்சுவலி ஏற்பட்டது.

உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். மருத்துவமனைக்கு சென்றடைய முன்னரே இருவரும் இறந்துவிட்டனர்.

மாரடைப்பே இந்த மரணங்களுக்கு காரணம் என்று கண்டுபிடிக்கப்பட்டது.

மருத்துவரின் ஆலோசனை இன்றி வயாக்ரா போன்ற செக்ஸ் மாத்திரைகளை பயன்படுத்துவது ஆபத்து.

# தஸ்லிமாவின் சுயசரிதை



சல்மான் ருஸ்டி போன்று சர்ச்சைக்குரிய முஸ்லிம் எழுத்தாளர் தஸ்லிமா நஸ்ரின்.

இவர் எழுதிய 'லஜ்ஜா' என்ற நூல் 22 மொழிகளில் வெளிவந்துள்ளது. இந்த நூலுக்கு முஸ்லிம் சமுகத்திடம் பலத்த எதிர்ப்பு கிளம்பியதால், தஸ்லிமா நஸ்ரின் வங்கதேசத்தில் இருந்து வெளியேற்றப்பட்டார். வசைபாடப்பட்டார்.

எதிர்ப்புக்களைக் கண்டு அவர் தளர்ந்து போகவில்லை. தனது சுயசரிதையை சூடாக எழுதி முடித்துள்ளார்.

தனது குடும்பத்தில் தனக்கு நேர்ந்த செக்ஸ் கொடுமைகளை தஸ்லிமா துணிந்து எழுதியிருக்கிறார்.

பண்பாட்டு போர்வையில் மறைந்து கொண்டு பக்கத்து வீட்டுப் பெண் மற்றும் வீட்டுப் பணிப்பெண் ஆகியோருடன் காம வேட்டை நடத்திய தனது டாக்டர் தந்தையின் நடவடிக்கைகளையும் வெளிச்சமாக்கியுள்ளார்.

தன்னுடைய மாமா முறையான உறவினரால் தனக்கு நேர இருந்த பாலியல் வக்கிரங்களையும் தஸ்லிமா புட்டு வைத்திருக்கிறார்.

"என்னால் பொய்களை எழுத முடியாது. முகமூடி அணிந்து கொண்டிருக்கும் உறவினர்களது கௌரவத்திற்கு நான் பொறுப்பேற்க முடியாது" என்று கூறியுள்ளார் தஸ்லிமா.

தஸ்லிமாவின் சுயசரிதையைப் ஃபிரான்ஸ் சினிமா நிறுவனம் ஒன்று படமாக்கப்போகிறது.

# படமும் நிஜமும்



பாாவதி

'வாலி' என்றொரு படம் சமீபத்தில் வெளியானது. அப் படத்தில் தம்பியின் மனைவிமீது ஆசைப்படும் அண்ணனின் கொடுமைகள் இடம்பெற்றிருந்தன.

அதே பாணியில் தனது அண்ணனின் மனைவிமேல் ஆசைப்பட்டு, அதற்கு அண்ணன் மனைவி உடன்பட மறுத்ததால் கொலையே செய்துள்ளான் கமல்ஷா என்பவன். அண்ணன் பெயர் ரவிஷா.

இச் சம்பவம் இந்தியாவில் புதுவை மாநிலத்தில் நடந்துள்ளது. கொலையான பெண்ணின் பெயர் பார்வதி. இது பற்றி ஏற்கனவே பல செய்திகள் வந்துவிட்டன. சமீபத்திய செய்தியின்படி 'தன் தம்பிக்காக தன் மனைவியின் நடத்தையில் குறைகூறவும் துணிந்துள்ளார் இறந்த பெண்ணின் கணவர்.

கணவர்மீது கொண்ட அன்பால் அவரது தம்பியின் தவறான ஆசைக்கு இணங்க மறுத்து பலியானார் பார்வதி. ஆனால் அவரது கணவரும், தாயாரும் கொலைகாரனான கமல்ஷாவை காப்பாற்றப் பாடுபடுகின்றனர்.

புதுவையில் உள்ள அரவிந்தர் ஆசிரமமும் இந்தக் கொலையை மறைக்க துணைபோயுள்ளது.

இந்த ஆசிரமத்திலும் பல செக்ஸ் கொடுமைகள் நடந்துள்ளன. அண்ணன் மனைவியை கொலை செய்த கமல்ஷாவும் இந்த ஆசிரமத்தின் உறுப்பினர்தான்.

தனது அண்ணனும், அண்ணியும் சந்தோசமாக இருப்பதை கதவுத் துவாரம் வழியாக கண்டு களிக்கும் வக்கிர புத்தி கொண்டவன் கமல்ஷா.

தனது மைத்துனர் பற்றி பார்வதி தன் கணவரிடம் பலமுறை புகார் செய்வதும், அவர் கண்டு கொள்ளவில்லையாம்.

ஏனெனில் பார்வதியின் கணவருக்கும் பல பெண்களுடன் தொடர்பு இருந்தது. அதனால் தம்பியின் திருவிளையாடல்களில் தலையிடாது இருந்திருக்கிறார்.

மாமியாரிடமும் முறையிட்டார் பார்வதி. 'என் மகனைப் பற்றி என்னிடமே கூறுகிறாயா?' என்று மிரட்டியுள்ளார்.

பொலிசாரும், அரசியல்வாதிகளும் கமல்ஷா குடும்பத்தின் பண பலத்தின் முன்பு மண்டியிட்டனர். கொலையை மறைக்க ஒரு கோடி ரூபாய் வரை பேரம் பேசப்பட்டது.

ஆனால் புதுவை மக்கள் தாமாக கிளர்ந்தெழுந்து போராடத் தொடங்கிவிட்டனர்.

அதன் பின்னரே விசாரணைகள் துரிதமாக நடந்து வருகின்றன. மனைவியை பறிகொடுத்த துயரமே இல்லாமல், தன் சகோதரனை காப்பாற்ற தலைகீழாக நிற்கிறார் பார்வதியின் கணவர்.



படிப்பகம்

www.padippakam.com



## எத்தனை பேர்?

பேய்கள் ஒன்று சேர்ந்து ஆட்டம்போடுவது போல் இப்படம் தென்படுகிறதல்லவா? மொத்தம் ஒன்பது பெண்களின் உருவங்கள் விகாரமாகக் காட்சி தருகின்றன.

உண்மையில் இதில் காட்சி தருவது ஒரே பெண்தான். உருண்டை வடிவுடைய பூகோள உருண்டையை ஒரே தட்டை வடிவம் கொண்டதாகப் படம் பிடிக்க விசேட கமரா ஒன்று இருக்கிறது. அந்தக் கமராமூலம் இப்படம் எடுக்கப்பட்டது.

சுழலும் ஒரு மேசையின் மீது ஒரு பெண்ணை நிறுத்தி மேசையைச் சுழலவிட்டு, ஒளிப்பதிவுக் கண்ணாடியில் ஒரு நுணுக்க முறையினைக் கையாண்டு இத்தோற்றத்தை படப்பிடிப்பாளர் கையாண்டிருக்கிறார்.

தற்போது கம்பியூட்டர் தொழில்நுட்பத்தில் பல சாகசங்களை செய்ய முடியும். ஆனால் இப்புகைப்படம் எடுக்கப்பட்டது எப்போது தெரியுமா? 1940 இல்.


## டயரோ டயர்?



குட்டியாக இருப்பதுதான் வழக்கமாக வாகனங்களுக்கு பயன்படுத்தும் டயர். அருகில் மகா பெரிதாக இருப்பது உலக சாதனை டயர்.

இதன் விட்டம் மட்டும் 3.91 மீட்டர். இதனை காட்சிக்காக வைக்கவில்லை. பெரிய்ய்ய ட்ரக்குகளுக்கு இந்த மாதிரி டயர்களைத்தான் பொருத்தி பயன்படுத்துகிறார்கள். 360 தொன் எடைவரை ஏற்றிச் செல்லும் பெரிய ட்ரக்குகளுக்கு இதுதான் சளைக்காது தாக்குப் பிடிக்குமாம். ஜப்பான் டோக்கியோவில் இந்த பெரிய்ய்ய டயர்கள் விற்பனைக்கு உண்டு.

## சாதனை ரயில்




'இரும்புக் குதிரை' என்று பட்டப் பெயர் சூட்டப்பட்ட நீராவியால் இயங்கும் இரயில் இயந்திரங்கள் உலகெங்கும் அரசோச்சிய சகாப்தம் முடிந்துவிட்டது.

டீசலாலும், மின்சக்தியாலும் இயங்கும் இரயில் இயந்திரங்களே இன்று எங்கும் வியாபித்து விட்டன. இருந்த போதிலும் எமது நாட்டில் 'புகையிரதம்' என்ற சொல்லே இன்றுவரை நவீன இரயில் வண்டிகளுக்கும் (உத்தியோக தோரணையில் கூட) நிலைத்துவிட்டது.

படத்தில் காணப்படும் புகைவண்டி இயந்திரம் ஆக 16 அங்குல உயரம் மட்டுமே உடையது. இதனை அமெரிக்கா-கலிஃபோர்னியாவைச் சேர்ந்த ஒல்லி ஜோன்ஸ்ரன உருவாக்கி, அதற்கேற்ற இரயில் பாதையையும் அமைத்து, தானே அதன் மேலிருந்து ஓடவைத்து மகிழ்ந்தார்.

இந்த இரயில் இயந்திரத்தில், பெரிய இரயில் இயந்திரத்திலுள்ள அத்தனை அம்சங்களும் இருந்தன. உலகிலேயே மிகச்சிறிய இந்த புகையிரதத்தை 1952இல் தயாரித்து ஓடிப்பார்த்தார். எப்படித் தாங்கியதோ?

## தலைகள்



இரண்டு தலை உள்ள குழந்தைகள் படம் பார்த்திருப்பீர்கள். முரசில் இதே பக்கத்தில் வெளியானது.

இங்கு நீங்கள் காண்பது மனிதத் தலைகளல்ல. அதையும் தாண்டி பயங்கரமானது. பாம்பின் தலைகள்.

அமெரிக்க கலிபோர்னியாவில் இந்த இரட்டைத்தலைப் பாம்பு பிறந்துள்ளது. 'ரேட்ச்' என்று செல்லமாக பெயர் வைத்திருக்கிறார்கள்.

## முத்திரை



உலகிலேயே சிறந்த சிரிப்பு நடிகர் சார்லி சாப்ளின். தற்போதும் அவரது படங்கள் இரசிக்கப்பட்டு வருகின்றன. புன்னகை மன்னனில் கமலஹாசனும் சார்லி சாப்ளினாக நடிக்கிறார்.

தற்போது அமெரிக்காவில் சார்லி சாப்ளினுக்கு தபால் தலை வெளியிடப்பட்டுள்ளது. உலகில் வேறெந்த சிரிப்பு நடிகரும் பெறாத கௌரவம் இது. தபால் தலைக்கு அருகில் நிற்பவர் யார் தெரியுமா? சார்லி சாப்ளினின் மகன். வயது 73. நகைச்சுவை நடிப்பில் முத்திரை பதித்தவருக்கு முத்திரை வெளியீடு! பொருத்தம்தானே!

## மறக்க முடியுமா?



எமது பிள்ளைகளின் படிப்படியான வளர்ச்சியைப் படம் பிடித்துச் சேர்த்து வைக்கும் பழக்கமுடையவர்கள் இருக்கவே செய்கிறார்கள். ஆனால் இப்படங்களில் உள்ளதுபோல சிறு பிள்ளை வளர்ந்து வயதான பருவம் வரையிலான ஒரு தொகுப்பினைப் பதிவு செய்திருப்பவர்கள் மிக அரிதுதான்.

தனது மகள் சிறு குழந்தையாகத் தத்தித் தத்தி நடக்கும் காலம் தொடக்கம் தொடர்ந்து 33 ஆண்டுகள் வரை, ஒவ்வொரு கோடைகாலத்தின் போதும் மகளுடன் படங்களைப் பிடித்துச் சேகரித்து வைத்திருக்கிறார் இந்தக் கனவான் சாட்விக்ஸ். இதில் இன்னொரு விசேஷம் என்ன தெரியுமா? தொடர்ந்து 33 ஆண்டுகளும் குறிப்பிட்ட கடற்கரையைப் பின்னணியாக வைத்தே படம் எடுத்தார். காலம்மாற கடற்கரையின் தோற்றம் மாறிக்கொண்டிருப்பதைக்கூட காணமுடிகிறது பாருங்கள்.

மகளுக்கு ஒரு வயதாக இருக்கும்போதும் 33 வயதான போதும் ஒவ்வொரு படமாக எடுத்துச் சேகரித்து வைத்துள்ளார் சாட்விக்ஸ். மகள் மரியானின் வளர்ச்சியைக் காட்டும் 33 படங்களில் 5 படங்கள் மட்டும்தான் இங்கு காணப்படுகின்றன. நீங்களும் இவ்வாறு முயலலாம்.

## காற்றை அலசும்



உள்ளங்கை அளவே உள்ள இந்த சிறிய கருவி எதற்கு பயன்படுகிறது தெரியுமா?

உங்கள் வீட்டிலோ அல்லது வேறு எப்பகுதியிலோ ஒரு இடத்தில் காற்று மாசுபட்டிருந்தால் இது கண்டுபிடித்துவிடும்.

அஸ்மா நோயாளர்கள் போன்றோருக்கு அசுத்தக் காற்றை விட்டு தப்பியிருக்க இது உதவியாக இருக்கும்.

காற்றில் உள்ள காபனீர் ஒட்சைடு வாயுவின் அளவைக் கொண்டே காற்றில் உள்ள மாசைக் கண்டுபிடிக்கிறது இந்தக் கருவி.

தகவல் பெட்டி









www.padippakam.com

## சூர்யாவின் வழியல்

சூர்யாவும், ஜோதிகாவும் இணைந்து நடித்துள்ள படம் 'பூவெல்லாம் கேட்டுப்பார்' இப்படம் வெளியாகிவிட்டது. சுமாராகப் போய்க்கொண்டிருக்கிறது.

இதன் பின்னர் 'உயிரிலே கலந்தது' படத்தில் நடிக்க சூர்யாவை ஒப்பந்தம் செய்தனர். "கதாநாயகி முடிவு பண்ணியாச்சா?" என்று கேட்டார் சூர்யா.

"இன்னமும் இல்லை" என்றார் தயாரிப்பாளர். மறுநாள் தன் நண்பரான நடிகர் அருண்குமாருடன் படக் கம்பனிக்கு சென்றார் சூர்யா.

"சூர்யாவும் ஜோதிகாவும் நடித்த 'பூவெல்லாம் கேட்டுப்பார்' நன்றாக வந்திருக்கிறது. இப் படத்திலும் ஜோதிகாவையே போடுங்கள்" என்று அருண்குமார் கூறியிருக்கிறார்.

"சிபாரிசு செய்யுமளவுக்கு இருக்கிறது என்றால்..." என்று தயாரிப்பாளர் ஒருமாதிரியாகச் சிரிக்க..

"அய்யய்யோ... அப்படி ஒன்றுமில்லை. ஜோதிகாவின் அக்கா (நக்மா) என்னிடம் கேட்டார்கள். அதுதான்...." என்று அசடுவழிந்தாராம் சூர்யா. அதனை ஆமோதித்தாராம் அருண் குமார்.

## திரையுலக மறுபக்கம் 116

### 'கவி' நடிகையின் சேவை

### குமார நடிகரின் சங்கடம்

தமிழ்நாட்டிலிருந்து **மயன்**

தன் பெயரில் 'கவி'யை வைத்திருக்கும் நடிகை அவர். அண்மையில் மதுரையில் நட்சத்திர விழாவுக்கு சென்றிருந்தார்.

மதுரையில் உள்ள முக்கியமான அரசியல்வாதிக்கு இந்த நடிகைமீது நீண்ட நாட்களாக ஆசை இருந்தது.

'கவி' நடிகை நடித்த படங்களைப் பார்த்து ஜொள்ளு விட்டுக் கொண்டிருந்தவர். அந்தப் பிரமுகர் நினைத்தால் நடிகையை எப்போதோ அடைந்திருக்கலாம். அந்தளவுக்கு முயற்சி செய்யவில்லை.

தன் கோட்டைக்கே நடிகை வந்துவிட்டதை அறிந்ததும், ஆசை பொங்க அழைப்பு விடுத்தார்.

நடிகையால் மறுக்கவா முடியும்? அழைப்பை ஏற்றார். பிரமுகருக்கு விருந்து கொடுத்தார். நடிகை தன் திறமையெல்லாம் காட்டியதால் பிரமுகர் திக்குமுக்காடிப் போனார்.

தனது நெருங்கிய பிரமுகர்களையும் கவ்வி[illegible] மாறு கூறினார். நடிகையும் மதுரையில் ஒருவா[...] தங்கியிருந்து தன்னால் முடிந்தளவுக்கு 'சேவை' செய்தார்.

இந்த விடயம் மதுரையில் கசிந்துவிட்டதா[...] பரவலாக எங்கும் பேசப்பட்டது.

ஒருவாரம் வரை 'கவி' நடிகையை சக்கையா[...] பிழிந்துவிட்டு அனுப்பி வைத்தனர். சன்மானம் [...]வுமே கொடுத்து அனுப்பவில்லையாம். நடி[...] கடுப்பில் இருக்கிறார்.

♠♣♠♣

### குமுறல்

சுந்தரமான இயக்குநர் 'ரம்ப' நடிகையுட[...] நட்பு கொண்டிருப்பது தெரிந்த சங்கதி. இயக்குநா[...] உத்தியோகபூர்வ காதலியான 'பூ' நடிகை தடுத்[...] இயக்குநர் விடுவதாயில்லை.

தற்போது சுந்தரமான இயக்குநரின் படத்[...] நடிகை நடித்துவருகிறார்.

நடிப்பு சொல்லிக் கொடுப்பதுபோல நடிகை[...] கட்டித் தழுவி தொட்டு விளையாடுகிறாராம் இயக்கு[...]

'பூ' நடிகையை 'ரம்ப' நடிகை அக்கா என்றுதா[...] அழைக்கிறார். 'அக்காவுக்கே இப்படித் துரோ[...] செய்யலாமா?' என்று பூ நடிகை குமுறுகிறாரா[...]

'பூ' நடிகையை எக்கட்டத்திலும் கைவிடமாட்டே[...] என்று சுந்தரமான இயக்குநர் சத்தியம் செ[...] கொடுத்துள்ளாராம்.

"அதனால்தான் 'ரம்ப' நடிகையுட[...] காதலர் கும்மாளம் கொட்டுவதைப்[...] நேரடி நடவடிக்கையில் இறங்கா[...] இருக்கிறாராம் 'பூ' நடிகை.

–★–

### தந்தையின் நிபந்தனை

குமார ந[...] கருக்கும், மு[...] னாள் பே[...]



விஜயகாந்த்-ராதிகா சௌத்ரி
படம்: கண்ணுபடப் போகுதய்யா

## காதோடு சொல்லுகிறோம்

இளம் நடிகையை மணக்கப்போகும் 'குமார' நாயகனுக்கு அடிக்கடி மிரட்டல்கள் வருகிறதாம். ஹீர நடிகைதான் ஆட்களை வைத்து மிரட்டுவதாக சந்தேகம். தமிழக அரசிடம் முறையிட்டு துப்பாக்கி பெற்றிருக்கிறார் நடிகர்.

சினிமாவிலும் நடித்தபடி தொலைக்காட்சியிலும் நடித்து வருபவர் வினோதமான நான்கெழுத்து நடிகை. இவரை ஒரு படத்தில் நடிக்க ஒரு இலட்சம் முற்பணமாக கொடுத்து ஒப்பந்தம் செய்தனர். மூன்று நாட்களுக்குப் பின்னர் முற்பணத்தை திருப்பிக் கொடுத்துவிட்டாராம். ஏனாம்? படம் தயாரிப்பதாக கூறியது கப்சாவாம். நல்ல நடிகையாகப் பார்த்து ஒப்பந்தம் செய்துவிட்டு, படம் எடுப்பதாக போக்கு காட்டி வேறுவிதமாக பயன்படுத்தி விடுவார்களாம். இதனை அறிந்ததும்தான் பணத்தை திருப்பிக்கொடுத்தார் நடிகை.

சுவாச நடிகை சுயசரிதை எழுதி வருகிறாராம். அதில் மனம் திறந்து பல உண்மைகளைக் கொட்டப்போகிறாராம். 'குமார' ஆசை நாயகனுக்காகவே அதில் பல பக்கங்களை எழுதிவைத்துள்ளாராம்.

கார்க்கில் போராட்ட நிதிக்காக மதுரையில் நடந்த கலைநிகழ்ச்சியில் 'ரன்' நடிகை கலந்துகொள்ளவில்லை. காரணம் என்ன தெரியுமோ? அதற்கும் பணம் கேட்டாராம். இதனால் ஏனைய நடிகர், நடிகைகள் அவரைத் திட்டித் தீர்த்தனராம். நடிகையோ மும்பாயில் கட்டிவரும் மாளிகைக்கு பணம் போதவில்லை என்கிறாராம்.

முன்னொரு காலத்தில் கறுப்பு காந்தமான வெற்றி காந்த நடிகரும், ரயில் நடிகையும் ஈருடல் ஓருயிராய் இருந்தனர். திருமணம் என்ற கட்டத்திற்கு வந்து பிரிந்தனர். சமீபத்தில் இருவரும் சந்தித்த பின்னர் நெருக்கம் ஏற்பட்டுள்ளதாம். நடிகையின் வெளிநாட்டு கணவர் தாய்நாடான அமெரிக்கா வாபஸாகிவிட்டது தெரிந்ததே.

## தொடர் தோல்வி

சரத்குமாரின் 'ராஜூல்' தான்', 'அருவன்' இரண்டும் பிரமாண்டமான படங்கள். இரண்டுமே தோல்வி கண்டுள்ளன. இந்த அதிர்ச்சியில் வருத்தமடைந்துள்ளார் சரத்குமார். இதனால் கே.எஸ்.ரவிக்குமாரின் இயக்கத்தில் நடிக்கப்போகிறார். முன்பும் சரத் மார்க்கெட் டல்லானபோது ரவிக்குமாரின் 'நாட்டாமை' கைகொடுத்து தூக்கிவிட்டது. 'நட்புக்காக'வும் நன்றாக ஓடியது. அதனால் ரவிக்குமார் படத்தையே மறுபடி நம்பியிருக்கிறார் சரத்.

## புதிய வெளியீடுகள்

ஆகஸ்ட் 6ம் திகதி பல புதிய படங்கள் தமிழ்நாட்டில் வெளியாகியுள்ளன. விபரம் வருமாறு: 'மலபார் போலீஸ்' (சத்யராஜ்-குஷ்பு), 'நீ வருவாய் என' (பார்த்திபன்-அஜித்குமார்), 'ரோஜாவனம்' (கார்த்திக்-லைலா), 'பூவெல்லாம் கேட்டுப்பார்' (சூர்யா-ஜோதிகா), 'கனவே கலையாதே' (முரளி-சிம்ரன்)

## மி னி சி னி

- 'டைம்' படத்தில் கதாநாயகியாக அறிமுகமாகும் ராதிகா சௌத்ரி. அந்தப் படம் வெளிவருவதற்குள் விஜயகாந்துடன் 'கண்ணுபடப் போகுதய்யா' படத்திலும் சத்யராஜுடன் 'அடிமைகள்' படத்திலும் நடித்து வருகிறார்.
- 'அவதாரம்', 'தேவதை' போன்ற படங்களை இயக்கிய நாஸர் மீண்டும் ஒரு படத்தை இயக்கப் போகிறார். 'மாயன்' என்று பெயரிடப்பட்டுள்ள இப்படத்தில் பிரசாந்த் நாயகனாக நடிக்கிறார்.
- 'வர்ணப்பகிட்டு' என்ற மலையாளப் படத்தில் ஜோடியாக நடித்த மோகன்லாலும் மீனாவும் 'ஒலிம்பியன் அந்தோனி ஆடம்' என்ற மலையாளப் படத்தில் மறுபடி இணைந்து நடிக்கிறார்கள்.
- 'படையப்பா' படத்தில் ரம்யா கிருஷ்ணனை நீலாம்பரி வேடத்தில் வில்லியாக அசத்த வைத்த கே.எஸ். ரவிக்குமார், அடுத்து இயக்க விருக்கும் புதிய படத்தில் ரம்யா கிருஷ்ணனை கதாநாயகியாக நடிக்கவைக்கவுள்ளார்.
- பிரகாஷ்ராஜ் தெலுங்கில் தற்போது பரபரப்பாகப் பேசப்படுவதால், அவர் தமிழில் வில்லனாக நடித்த 'தினமும் என்னைக் கவனி' தெலுங்கில் 'கிரிமினல் 786' என்ற பெயரில் மொழி மாற்றப்பட்டு வெளியாகவுள்ளது.
- 'சந்தித்தவேளை' படத்தில் கார்த்திக்கிற்கு ஜோடிகளாக இஷாவும் சிம்ரானும் நடிக்கவிருந்தனர். இப்போது சிம்ரான் நீக்கப்பட்டிருப்பதால் சிம்ரான் நடிக்கவிருந்த வேடத்தில் இஷாவும், இஷா நடிக்கவிருந்த வேடத்தில் கௌசல்யாவும் நடிக்கின்றனர்.
- சூர்யாவை வைத்து 'சந்திப்போமா' படத்தை இயக்கிய இந்திரகுமார் தற்போது 'அன்புடன்' என்ற படத்தை இயக்குகிறார். அருண்குமார் கதாநாயகனாக நடிக்கிறார்.
- இந்திய-பாகிஸ்தான் எல்லைப் போரை மையமாக வைத்து கதை ஒன்றைத் தயார் செய்து அதை 'அசோகச் சக்கரம்' என்ற பெயரில் படமாக்கத் திட்டமிட்டுள்ளார் அர்ஜுன்.
- கே. பாக்யராஜின் 'சுந்தரகாண்டம்' படத்தில் நடித்த சிந்துஜா. இவரது தங்கை ரூபிகா 'தாலாட்டும் பூங்காற்றே' என்ற படத்தின் மூலம் கதாநாயகியாக அறிமுகமாகிறார்.
- ஜெயராம்-ரமேஷ்அரவிந்த்- வடிவேலு நடிக்க தமிழில் தயாராகும் படத்தின் பெயர் 'பேட் பாய்ஸ்'. இதே பெயரில் தற்போது இந்தியிலும் ஒரு படம் தயாராகி வருகின்றது.

## கவர்ச்சி தரிசனம்

கஸ்தூரி கவர்ச்சி மழை பொழிந்து வருவது படங்களில் மட்டுமல்ல, பகிரங்கத்திலும்தான்.

சென்னையில் நடைபெற்ற திரைப்படவிழா ஒன்றுக்கு தொடைகள் தெரிய அரைக் காற்சட்டைபோட்டுக் கொண்டு வந்திருந்தார்.

திரைப்பட விழாவுக்கு வந்தவர்கள் பலர் கஸ்தூரியையே பார்த்து ஜொள்ளு விட்டனராம். அதற்காகத்தானே அப்படி ஆஜராகியிருந்தார்.



"நினைத்தால் போதும் பாடுவேன்
அணைத்தால் கையில் ஆடுவேன்
சலங்கை துள்ளும் ஓசையில்
கலங்கும் கண்ணை மாற்றுவேன்"

சரத்குமார்-விஜயசாந்தி
படம்: ராஜஸ்தான்

www.padippakam.com

நடிகைக்கும் இடையே மலர்ந்த நட்பு காதலாகிவிட்டது. தற்போது நடிகை தரப்பு மூலம் இது பகிரங்கமாகியும் விட்டது.

அதற்கு முன்னர் நடந்த சங்கதிகள் பல சுவாரசியமானவை.

படப்பிடிப்பில்தான் இருவரும் நெருக்கமானார்கள். படப்பிடிப்புக்கு தந்தையுடன்தான் செல்லுவார் நடிகை.

தன் மகளுக்கும், குமார நடிகருக்கும் இடையே நெருக்கம் ஏற்படுவதைக் கவனித்தார் தந்தை.

நடிகரின் மார்க்கெட் உச்சத்தில் இருக்கிறது. கோடிருபாய் ஊதியமாக பெறுகிறார். அனைத்தையும் கணக்குப்போட்டுப் பார்த்த தந்தை, மகளுக்கும், குமார நடிகருக்கும் இடையே நெருக்கம் ஏற்படுவதை மனதார விரும்பினார்.

படப்பிடிப்புக்கு மகளுடன் வருவதை நிறுத்திவிட்டார். தான் இருந்தால் இருவரும் நெருங்கிப்பழக சங்கடப்படுவார்கள் என்று ஒதுங்கிக்கொண்டார்.

### நழுவல்

அதன்பின்னர் குமார நடிகரும் 'ஷா' நடிகையும் மனம் விரும்பியதுபோல பழகினார்கள்.

நடிகையை தன் வீட்டுக்கு அழைத்தார் நடிகர். நடிகையோ நழுவினார். நடிகரின் விருப்பப்படி ஒன்று கலந்துவிட்டால் நடிகருக்கு திகட்டிவிடலாம். அதனால் நடிகரின் ஆசைக்கு தூபமிட்டு காதலை கெட்டிப்படுத்தினார்.

திருமணத்தின் பின்னர்தான் மற்றதெல்லாம் என்று கண்டிப்பாக கூறிவிட்டார் நடிகை.

இதற்கிடையே 'ஹீர' நடிகையுடனான உறவை ஊர் அறிய துண்டித்தால்தான் தன் மகளுடன் நடிகர் தொடர்ந்து நட்பாக இருக்கலாம் என்று நிபந்தனை போட்டார் தந்தை.

'ஷா' நடிகையின் இனிக்கும் இளமையில் மயங்கிய 'குமார' நடிகர் ஹீர நடிகைக்கு பகிரங்கமாக விடை கொடுத்த பின்னணி இதுதான்.

தமது காதலை சற்றுத் தாமதித்து வெளியிடலாம் என்றுதான் குமார நடிகர் விரும்பினார்.

ஆனால் 'ஷா' நடிகையின் தந்தை கில்லாடி. நடிகரின் மனம் மாறிவிட்டால் என்ன செய்வது என்று யோசித்தார். அதனால் நடிகர் மதி மயங்கிக் கிடக்கும்போதே விஷயத்தை பத்திரிகைகளுக்கு தெரியப்படுத்த விரும்பினார்.

### நாடகம்

யார் மூலமோ தகவல் கசிந்தது போலவும், அதனை வைத்து, பத்திரிகையாளர்கள் தன்னிடம் கேள்வி கேட்டது போன்றும், தவிர்க்க முடியாமல் தான் உண்மையைக் கூறியது போன்றும் நாடகமாடி, தான் நினைத்ததை சாதித்துவிட்டார்.

தன் மகளையும் பேட்டி கொடுக்க வைத்தார். இதனைப் பார்த்து 'குமார' நடிகர் கதிகலங்கிப் போனாலும், மறுக்கவும் முடியாதே. அதனால் மௌனமாக இருந்து விட்டார்.

'அடுத்த வருடமே திருமணம் என்பதால், இத்தனை அவசரப்பட்டு அறிவித்திருக்க வேண்டுமா?' என்று நடிகையிடம் கேட்டாராம். 'நான் என்னசெய்வது? அப்பா சொன்னபடி செய்தேன்!' என்றாராம் நடிகை.

எதிர்கால மனைவி என்பது உறுதியானதால் இப்போதிருந்தே நடிகரின் வருமானத்திலும் நடிகையின் தந்தை கைவைக்க உத்தேசித்துள்ளாராம்.

## பிரபு தேவா–அப்பாஸ் மறுபடி சேருகிறார்கள்

ரஜினி, கமல் போன்றோரின் படங்களுக்கு கதை வசனம் எழுதியவர் பஞ்சு அருணாசலம். இவர் கவியரசு கண்ணதாசனின் சகோதரர்.

எளிமையாக கதை வசனம் எழுதுபவர் என்று பெயர் பெற்றவர் பஞ்சு அருணாசலம். ரஜினி, பிரபு நடித்த 'குரு-சிஷ்யன்', கமலின் 'சகலகலா வல்லவன்'போன்ற பெரு வெற்றிப் படங்களும் இவரது கதை வசனத்தில் செதுக்கப்பட்டவைதான்.


நீண்ட இடைவெளிக்குப் பின்னர் பஞ்சு அருணாசலம் கதை வசனம் எழுதும் படம், 'கற்பகச்சோலை' இப்படத்தில் பிரபுதேவாவும், அப்பாசும் நடிக்கின்றனர். கதாநாயகியாக ரோஜாவும், கவுசல்யாவும் நடிக்கின்றனர்.

'பயணங்கள் முடிவதில்லை', 'வைதேகி காத்திருந்தாள்' 'ராஜாதிராஜா' போன்ற படங்களை இயக்கிய வெற்றி இயக்குநர் ஆர்.சுந்தர்ராஜன். இயக்குவதை நிறுத்திவிட்டு நடித்துக் கொண்டிருந்தார். இவரும் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் இப்படத்தை இயக்குகிறார். இசை:இளையராஜா.

வி.ஐ.பி. படத்தில் பிரபுதேவா, அப்பாஸ் இணைந்து நடித்திருந்தனர். தன் முக்கியத்துவத்தை அப்படத்தில் குறைத்து விட்டதாக குறைபட்டார் அப்பாஸ். இனிமேல் இரண்டு நாயகர்கள் படங்களில் நடிக்கமாட்டேன் என்றும் கூறினார். இப்போது மறுபடியும் பிரபுதேவாவுடன் இணைகிறார்.



விக்னேஷ்-மந்த்ரா
படம்: புதுக்குடித்தனம்




படம்: மானசீகக் காதல்

*சினிமா விமர்சனம்*

நமது விமர்சனக் குழு 30/100

## ஒட்டாத முகம்

**படம் :** காதலர் தினம்
**நடிப்பு:** ராகுல், சோனாலி பிந்த்ரே, நாசர் சின்னி ஜெயந்த், பெரியார் தாசன், கவுண்டமணி.
**இசை:** ஏ.ஆர்.ரகுமான்
**இயக்கம்:** கதிர்.

**கதை:** ஏழை மாணவனான ராகுல் சென்னையில் இருந்து மும்பாய் செல்கிறார். ராமச்சந்திரா கல்லூரியின் தலைவரான நாசர் அவருக்கு தன் கல்லூரியில் இடமளிக்கிறார். ஒரு நண்பரைப் போல, ராகுலுடன் பழகி அன்பு காட்டுகிறார்.

இண்டர்நெட்டில் ராகுலுக்கும், சோனாலிக்கும் காதல் மலர்கிறது. பின்னர் நேரிலும் பார்க்கின்றனர். நாசரின் மகள்தான் சோனாலி என்று தெரியாது அவரைக் காதலிக்கிறார் ராகுல். உண்மை தெரிந்ததும் நாசருக்காக தன் காதலை தியாகம் செய்ய, நாசர் அதனை அறிந்து காதலரை சேர்த்து வைக்க முயல, அதற்கிடையே சோனாலி விஷம் குடிக்க... முடிவை வெண்திரையில் காண்க.

இண்டர் நெட் காதலை இலகுவாக புரியும்படி காண்பித்துள்ளார் இயக்குநர். கதாநாயக்ன் ராகுலின் முகம் தமிழ்ப் படத்திற்கு ஒட்டாத முகமாக உள்ளது. சோனாலி காட்சிக்கு காட்சி கண்களுக்கு ஈதமளிக்கிறார்.

காதலர் தினத்தில் அதிக புள்ளிகள் பெறுவது ஒளிப்பதிவாளர் ஸ்ரீராம்தான். கமராவால் கவிதை எழுதியிருக்கிறார். அப்படியொரு நேர்த்தியான படப்பிடிப்பு. கதாநாயகியின் பாத்திரப் பெயர் ரோஜா. அதற்காக ரோஜாக்களை விதம் விதமாக படம் எடுத்து விழிகளை வியப்பில் ஆழ்த்தியுள்ளார்.

பாடல்கள் அனைத்துமே ரகுமான் முத்திரையில் பிரபலமான பாடல்கள். 'ஓ மரியா' பாடலுக்கு மட்டும் ரம்பா வந்து கவர்ச்சி விருந்து படைத்து விட்டுப் போகிறார்.

கவுண்டமணி கத்துகிறார். அவருக்கு தோதாக சின்னிஜெயந்த் புதுமை எதுவும் இல்லை. ஒரு தடவை பார்க்கலாம். சுமார் ரகம்.

**முகப்பில்** பிரசாந்த்-ப்ரீத்தி
படம்: ஹலோ

## காலி செய்

நடிகை மும்தாஜ் சென்னை வடபழனியில் ஒரு விடுதியில் தங்கியிருந்தார்.

அவரை சந்திக்க வருபவர்களைப் பார்த்து நிர்வாகம் சங்கடப்பட்டதாம். 'தயவு செய்து அறையைக் காலி செய்யுங்கள்' என்று கூறிவிட்டனராம்.

இப்போது தன் நடவடிக்கைகளுக்கு இடையூறு இல்லாத விடுதியாக தேடிக் கொண்டிருக்கிறார்.

## காட்சி மாற்றம்

'காதலர் தினம்' படத்தின் இறுதிக் காட்சியை படத்தை வெளியிட்ட பின்னர் மாற்றியுள்ளனர்.

கதாநாயகன் ராகுல் தன்னை விரும்பவில்லை என்று நினைத்து, இன்னொருவரை மணக்க இருந்த மணமேடையிலேயே விஷம் அருந்தி மயக்கமாகிறார் சோனாலி.

கதாநாயகன் ராகுல், 'என் ரோஜா ஆஸ்பத்திரியில் உயிருக்காக போராடிக் கொண்டிருக்கிறாள். அவள் உயிர் பிழைக்க பிரார்த்தியுங்கள்' என்று மணிவண்ணனுக்கு கடிதம் எழுதுவதுடன் படம் முடிவடையும்.

ஆனால் அதற்கு ரசிகர்களிடம் வரவேற்பு இல்லாததால், காதலனும், காதலியும் திருமணம் செய்வதுபோல காட்சி எடுத்து சேர்த்துள்ளார்கள்.

ஆனால் நாம் வீடியோவில் பார்க்கும்போது இந்த புதிய காட்சியை காணமுடியாது.

## ரோஜாவுக்கு சிபாரிசு

'சுயம்வரம்' படத்தில் தனக்கு ஜோடியாக ரோஜாவைப் போடுமாறு பிரபுதேவா சிபாரிசு செய்ததை தயாரிப்பாளரே கூறியிருந்தார். ரோஜாமீது பிரபுதேவாவுக்கு ஒரு பிடிப்பு.


இந்தப் பிடிப்பு அதிகமாகியே வருகிறது. 'கற்பகச் சோலை' படத்திலும் தனது ஜோடியாக ரோஜாவைத்தான் சிபாரிசு செய்திருக்கிறார் பிரபுதேவா.

ஏற்கனவே கார்த்திக்கும் ரோஜாவில் தனிப்பிரியம் கொண்டிருந்தார். தனது படங்களில், தொடர்ந்து இடம் கொடுத்தார்.

ரோஜாவின் திறமையால் கதாநாயகர்கள் அவரை விரும்புகின்றனர். அதனால் கடன்களை அடைக்குமளவுக்கு சம்பாதித்து விட்டாராம்.

ராஜஸ்தான் படத்தோல்வியால் ரோஜாவின் காதலர் செல்வமணியும் கடனில் மூழ்கிவிட்டார். அதனால் ரோஜாவின் பாதையில் [illegible]

www.padippakam.com



## ஆடை இழந்த மேனியர்

இராணுவ ஆட்சியை எதிர்த்தவர்களுக்கு கிடைத்த தண்டனை இது. ஆடைகளைக் களைந்து, இரு கைகளையும் பின்புறமாகக் கட்டி நடுவீதியில் இருக்கவைத்தனர். ஆனாலும் அங்குகூட கோவணத்தோடு நிற்கவைக்கவில்லை. மேலாடையை மட்டும்தான் கழற்ற வைத்தனர். தாய்லாந்தில் நடைபெற்ற கிளர்ச்சியின்போது நிகழ்ந்த அடக்குமுறைக் காட்சி இது. இந்த ஒடுக்குமுறை நீடிக்கவில்லை. இறுதியில் இராணுவ ஆட்சி ஆட்டம் கண்டது! போராட்டம் வென்றது.

## தேவதை சிறகுதரும் நாளொன்று வரவில்லையா?

ஒழுங்குபடுத்த முடியாதவாறு
உனது வாழ்வின்
ஒவ்வொரு அத்தியாயமும்
சீர் குலைந்து போனதா?
-0-
எந்தத் தேசத்தில்-நீ
தனித்துப் போனாய்?
இதுவன்று-
உனக்குரிய வாழ்க்கை:
இதுவன்று-
உனக்காக நான்
கேட்டு வந்த பிரார்த்தனை!
-0-
அலை கடலால்
சிறையாக்கப்பட்ட
உனது தாய் மண்ணிற்கு
வந்தடைய
எந்த தேவதையாவது-தனது
பட்டுச் சிறகினைத்
தந்திடுமெனத்
தவமிருக்கிறாயா?
-0-
ராசாவாக-நீ
வாழ்ந்து விட்டுப் போன
உனதுயிர்த் தேசத்தையும்
உனது ஆத்மாவின்
உச்ச ஆனந்தங்களெலலாம்
ஓடி ஓய்ந்த பூமியையும்
திரும்பவும்
எந்நாளில் தரிசிப்பாய்?
-0-
வசந்தம் பறிபோனதையும்
வாழ்வு திசை மாறியதையும்
நினைக்கும் போதெலலாம்
நெஞ்சு கதறியழுவதற்கு
ஆறுதல் கூற
உனக்கும் தெரியவில்லை,
எனக்கும் தெரியவில்லை!
-0-
இங்கு அன்பும் பாசமும்
உனைத் தேடித் தேடி
ஆர்ப்பரித்ததே:
உணர்வுகள் துடிதுடித்த
அந்த வேளையில்
எங்கே போயிருந்தாய்?
நினைவுகள்
வந்தடைய முடியாத
நீள் தூரத்துக்கப்பால்
நீ வாழுகின்ற போது
அவற்றை எங்ஙனம் அறிவாய்!
-0-
ஐரோப்பா-அது
உன்னைச் சிறைப்படுத்தி
உனதுள்ளத்தை
அணுவணுவாக
அடிமைப்படுத்திய
தேசமன்றோ!
அந்தத் தேசம் மீது
அத்தனை அபிமானமும்
உனக்கெப்படி வந்தது?
-0-
நேற்றைய கதைகளையே
மறுபடியும் சொல்லாதே!
நாளைய நம்பிக்கைகளை
என்மீது சமத்தாதே!
இப்போது உனைக்
காண வேண்டும்!
ஒரே ஒரு கணம்
எனது கண்ணெதிரே
வந்து போக மாட்டாயா?
-0-
தினமும் இங்கே
பாழடைந்த குளிர்ந்த இரவில்
தெய்வம் உனை என்றும்
காத்தருளும் என்ற
நம்பிக்கையோடு
நித்திரையாகிறேன்!
-0-

பஹீமா ஜஹான்-
தெமடகொல்ல, மெல்சிரிபுர.

## தேர்தல் வேதங்கள்

ஒரே தேசம் ஒரே மக்கள்'
என்று கோஷம் போடுவோம்!
உரிமையென்று பேசுவோரை
புதையலாக்கி மூடுவோம்!
***
அருக்குப தேசமெனில்
உலுக்கியுலுக்கிக் கொட்டுவோம்!
உனக்குமெனக்கும் இல்லையென்று
உன் மனதுள் தட்டுவோம்!
***
வாக்குறுதி ஆயிரங்கள்
வானைமுட்டக் கூறுவோம்!
வாக்குப்போட்ட மனிதங்களின்
வாய்க்கரிசி போடுவோம்!
***
கூட்டணிகள் சேர்ந்துரிமை(க்)
குரலெடுத்துக் கூவுவோம்!
கேட்டதொகை கிடைக்குமெனில்
தாயை விலை பேசுவோம்!
***
இனவொடுக்கல் கொடுமையென்று
உலகமெலாம் சொல்லுவோம்!
நமது வீட்டில் சண்டை வந்தால்
தம்பியையும் கொல்லுவோம்!
***
உண்ணும்வரை "சிவன் சிவனோ"
என்று பேசிப் புகழுவோம்!
உண்ட பின்பு "இவன் எவனோ"
என்று கையைக் கழுவுவோம்!
***
சாந்தி சமா தானமென்று
சந்திக்கூத்து ஆடுவோம்!
சாமியையும் கொன்றுவிட்டு
சந்நிதிக்குள் பாடுவோம்!
***
நீர்கொழும்பு தருமலிங்கம்.

## இதய வரங்கள்

தனிமைக் கிளைகளில்
இரு குயில்கள்.....

கூவும் அதன் ஓசைகளை
அன்று நான் காதுகளில்
வாங்கிக் கொள்ளவில்லை.

காதலுக்காய் ஏங்கிய
என் கன்னிக் குயிலுக்கு

காற்று இங்கு காவல்காரன்:
மலர்கள் அதற்கு ஊதுகுழல்.

நான் தனிமையைக் கடக்கவே
தாவ நினைக்கிறேன்!

காதல் என் இதயத்துக்குள்
கூடு கட்டும்போது,
கன்னிக் குயிலைக் காணவே
ஆசைப்படுகின்றேன்!

அதனால் இன்று மனவாசல்
எங்கும் காதலின் குரல்களே
கேட்டொலிக்கின்றன.

என் குயில் கிளைகளில்
இருந்து மீண்டும்
கூவும்போது-என் மன
வாசலில் கோலம் போடுவேன்
கூடுகள் கட்டுவேன்.

உதவி செய்துதர அன்று
பல குயில்கள் வரலாம்!

உவைஸ்கனி.

## தேன் கிண்ணம்

## புன்னகை



சத்தம்
உணர்ச்சியின்
வெளிப்பாடாய்,
மொழி
தேவைகளின்
புரிந்துணர்வாய்.
-0-
என் தமிழில்கூட
தகராறுதான்!
'ழ'கர 'ல'கரங்கள்
குதம்புவது!
-0-
ஆங்கிலம்
சொல்லவே வேண்டாம்
அரச உரசலாகி...
......
எப்படி உன்,
இயல்பான ஒரு
புன்னகையால் மட்டுமே
முடிகிறது
மொழிகளின் தேவையின்றி
மௌனத்தால்
எதையுமே
புரிய வைக்க?

இணுவை உத்திரன்

## இந்தவாரம் உங்கள் பலன்

ஜோதிடர் 'கர்னா'

22.08.99 முதல் 28.08.99வரை

**மேடம்:**
கிரக சமஸ்தானம் நன்றாக உள்ளதால் நிம்மதி நிலவும். எடுத்த விடயங்கள் ஓரளவு நன்றாக அமையும். பயண அலைச்சல் உண்டு. பண வரவும் நன்றாக இருக்கும். அத்துடன் குடும்ப உறவினா வழியில் உதவியும் ஒத்துழைப்பும் காணப்படும். அச்சுவினி நட்சத்திரருக்கும் நன்மைகள் கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், சனி
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண் : 02
அதிஷ்ட திகதிகள் : 22, 25

**இடபம்:**
பணநிலை சிக்கலைக்கொடுக்கும். எதிலும் திருப்திக்குறைவு காணப்படும். அலைச்சலும் சிறுசிறு நோய் துன்பங்களுக்கும் இடமுண்டு. பயிர் உற்பத்தி தொழில்நிலை நன்றாக அமையும். வார இறுதியில் உறவினர்களால் பண வசதிகள் ஏறபடும். மிருகசீரிட, கார்த்திகை நட்சத்திரர் வசதிகளைப் பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, ஞாயிறு
அதிஷ்ட நிறம் : இளநீலம்; எண் : 08
அதிஷ்ட திகதிகள் : 24, 26

**மிதுனம்:**
பயணங்களும் செய்தொழில் ஊக்கமும் காணபபடும். மனதில் நிம்மதி கிடைக்கும். உறவினர், நண்பர்கள் உதவி செய்வார்கள். தனுசு இராசிக்காரரால் பல நன்மைகள் கிடைக்கும். கல்வி, தொழில் சீர்சிறப்பாக அமையும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், சனி
அதிஷ்ட நிறம் : பச்சை; எண்: 09
அதிஷ்ட திகதிகள் : 24, 27

**கடகம்:**
பய உணர்வும் மன உளைச்சலும் காணப்படும். அத்துடன் நோய் துன்பங்கள் ஏற்படும். புதிய திட்டங்கள் தாமதமடையும். பல்வேறுபட்ட வழிகளில் வார இறுதியில் பற்பல அனுகூலங்கள் அமையும். பரீட்சைகள், கல்வி வசதிகள் ஓரளவு கைகொடுக்கும். ஆயிலிய நட்சத்திரப் பெண்களுக்கு பலவாய்ப்புக்கள் உள்ளன.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, புதன்
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண : 04
அதிஷ்ட திகதிகள் : 22, 27

**சிம்மம்:**
விடாமுயற்சியும் கருமங்களில் வெற்றியும் அமையும். உறவினர்களைச் சந்திக்கும் வாய்ப்பும் காணப்படும். அத்துடன் பலரின் ஒத்துழைப்புக்கள், உதவிகள் என்பன கிட்டும். பல திட்டங்கள் வெற்றியைக் கொடுக்கும். மகர, பூர நட்சத்திரருக்கு சிறப்புள்ள காலம்.
அதிஷ்ட நாட்கள் : ஞாயிறு, வெள்ளி
அதிஷ்ட நிறம் : றோஸ்; எண் : 01
அதிஷ்ட திகதிகள் : 23, 28

**கன்னி:**
மனதில் உற்சாகம் பிறக்கும். நல்ல விடயங்கள் சில நடைபெறும். காதல் கைகூடும். புதிய முயற்சிகள், வசதிவாய்ப்புக்கள் சீராக அமையும். அத்துடன் தொழில் தடைகள் விலகும்.
அதிஷ்ட நாட்கள் : வியாழன், சனி
அதிஷ்ட நிறம் : இளம்பச்சை: எண்: 06
அதிஷ்ட திகதிகள்: 24, 27

**துலாம்:**
திருமண விடயங்கள் கலந்தாலோசிக்கப்படும். மனதில் மகிழ்ச்சி ஏற்படும். எடுத்த விடயங்கள் கைகூடும். உறவினர்களது உதவிகள் கிடைக்கும். பொருளாதார-பண வசதிகள் ஏற்படும். சிம்ம இராசியினரால் பல உதவிகள் கிடைக்கும். சுவாதி நட்சத்திரர் யோகங்களைப் பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், புதன்
அதிஷ்ட நிறம்: இளமஞ்சள்; எண்: 03
அதிஷ்ட திகதிகள் : 24, 28

**விருட்சிகம்:**
உறவினர்களது உதவி கிட்டும். விடாமுயற்சி பலன் தரும். அத்தோடு, பல்வேறுபட்ட கஷ்டங்கள், கவலைகள் குறையும். பரீட்சைகள் சிறப்பாக காணப்படும். நண்பர்களது உதவி தேடிக் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். கேட்டை, அனுஷ நட்சத்திரம் கொண்டவர்கள் பலநன்மைகளை அடைவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : வியாழன், வெள்ளி
அதிஷ்ட நிறம் : இளஞ்சிவப்பு; எண் : 01
அதிஷ்ட திகதிகள் : 23, 24


**தனுசு:**
உடலில் நோய் துன்பங்கள் ஏற்படும். தொழில் வசதிகள் ஏறபடும். மனதில் சிக்கல்கள் குறையும். சகோதரர்களின் அரவணைப்புக்கிட்டும். தொழில் நன்றாக அமையும். மூல, உத்திராடக்காரர்களுக்கு நன்மைகள் உண்டு.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்
அதிஷ்ட நிறம் : நீலம்; எண் : 06
அதிஷ்ட திகதிகள் : 24, 27

**மகரம்:**
பல சிக்கல்கள் தோன்றக்கூடும். பலவிடயங்கள் தாமதித்தாலும் வார நடுப்பகுதியில் சீரடையும். நோய் துன்பங்கள் குறைவடையும். தூரதேச நன்மைகளுக்கு இடமுண்டு. கல்வி நிலை சாதகமாக அமையும். உத்திராட, அவிட்டக் காரர்களுக்கு பண வசதிகள் ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண் : 05
அதிஷ்ட திகதிகள் : 25, 26

**கும்பம்:**
தூர இடத்துப்பயண வசதிகள் கிட்டும். உறவினர்களது, நண்பர்களது உதவிகள் நன்மையாக அமையும். நோய், பிணிகள் ஏறபடும். குடும்பத்தில் பிரச்சனைகள் காணப்படும். எதிலும் கவனம் தேவை.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வியாழன்
அதிஷ்ட நிறம் : சாம்பல் வர்ணம்; எண்: 09
அதிஷ்ட திகதிகள் : 23, 27

**மீனம்:**
பல பிரச்சனைகள் குறையும். நிம்மதி காணப்படும். ஒத்துழைப்பு உதவிகள் கிடைக்கும். பணம்-பொருள் வந்து சேரும். காரிய சித்தி காணப்படும். மனதில் துணிவு ஏற்படும். சகோதரர்களை நண்பர்களைச் சந்திக்கும் வாய்ப்புகள் உத்திரட்டாதி, ரேவதி நட்சத்திரருக்கு உண்டு.
அதிஷ்ட நாட்கள் : புதன் சனி
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண் : 03
அதிஷ்ட திகதிகள் : 24, 28

## நில்-கவனி-முன்னேறு



- காலையில் 15 நிமிடங்கள் முன்னதாகவே எழுந்திருங்கள்.
- நீங்கள் விரும்புகிற அல்லது உங்களுக்குப் பிடித்தமான காரியங்களில் ஒன்றை ஒவ்வொரு நாளிலும் செய்து முடியுங்கள்.
- நாளைக் காலை உணவு மற்றும் அணிந்து கொள்ள வேண்டிய உடைகளை இன்றிரவே தீர்மானித்து விடுங்கள்.
- பொய் சொல்ல வேண்டிய அவசியமாயிருக்கிற வேலையையோ, செயலையோ தவிர்த்து விடுங்கள்.
- யாரையேனும் சந்திக்கக் காத்திருக்கும் நேரங்களில் படிப்பதற்கென்று பயனுள்ள புத்தகங்களை வைத்திருங்கள்.
- உங்கள் கார் மற்றும் பைக் ஆகியவற்றுக்கான மாற்றுச் சாவியை தயாரித்து வைத்துக் கொள்ளுங்கள்.
- உங்கள் ஆயுள் பாதுகாப்புத் தவணை, வீட்டின் மின்சார கட்டணத் திகதி, கிரடிட் கார்டின் தவணைத் திகதி, வாகனங்களை அடுத்து சர்வீஸ் செய்ய வேண்டிய நாள் போன்றவற்றை உங்கள் டைரியில் குறித்து வைத்துக் கொண்டு தவறாமல் செய்துவிடுங்கள்.
- உங்களை கவலைக்குள்ளாக்காத நண்பர்களுடன் மகிழ்ந்திருங்கள்.
- மற்றவர்களைப் புண்படுத்தும் படியான பேச்சுக்களை முற்றிலும் தவிருங்கள்.
- உங்களால் முடியாத காரியத்தை, முடியாது என்று சொல்லித் தவிர்த்து விடுங்கள்.
- காலையிலோ, மாலையிலோ ஏன்-இரவு உணவுக்குப் பின்புகூட நேரம் கிடைக்கிற போது சிறிது தூரம் காலார நடந்து வாருங்கள்.
- இரவு படுத்த பிறகு, உறக்கத்திற்கு முன்பு அன்றைய நிகழ்ச்சிகளை மெதுவாய் மனதில் ஓட விடுங்கள். உங்களை சங்கடத்துக்குள்ளாக்கிய நிகழ்ச்சி எதுவும் இருப்பின் அதற்கான காரணத்தை ஆராய்ந்து, அத்தகைய நிகழ்வு மீண்டும் ஒருமுறை நிகழாத வண்ணம் நடந்து கொள்ளுங்கள்.
- நேரத்திற்கு சரியாக உணவருந்துங்கள். உடல் ஆரோக்கியத்தில் அக்கறை எடுத்துக் கொள்ளுங்கள்.


படிப்பகம்

www.padippakam.com

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## குழந்தைகளுடன் பேசுங்கள்!



குழந்தைகளுடன் தாய்மார்கள் பேசுவது எப்போதும் ஒரு பக்கப் பேச்சுத்தான். அம்மாதான் பேசுவது வழக்கம். குழந்தை பேசாது. நவீன அறிவியல் ஆய்வு ஒன்றின்படி இப்படிப் பேசுவது குழந்தையின் அறிவை வளர்க்கிறது எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஒன்பது மாதத்தில் இருந்து தினமும் அரைமணி நேரம் குழந்தையுடன் பேசினால் போதும். குழந்தை வகுப்பில் பாடங்களில் அதிக புள்ளிகளைப் பெறும் என்கிறது ஆய்வு.

ரீ.வி. அல்லது வீடியோ முன் நேரத்தைச் செலவிடுவதைவிட குழந்தைகளுடன் 'குவாலிடி டைம்' எனப்படும் இந்த நேரம் மிக்க முக்கியத்துவம் வாய்ந்தது என்கின்றனர் விஞ்ஞானிகள்.

டாக்டர் சல்லி வார்ட் என்னும் பெண்மணி குழந்தை அபிவிருத்தி நிபுணர். ஏழு வருட காலம் ஆராய்ச்சி செய்தார் இவர். பெற்றோர் குழந்தைகளுடன் எப்படிப் பேசுகின்றனர் என்பதற்கும் குழந்தையின் அறிவு வளர்ச்சிக்கும் நேரடித் தொடர்பு இருப்பதை இவரது ஆய்வு உறுதிப்படுத்துகிறது.

இங்கிலாந்தின் மான்செஸ்டரில் 140 குழந்தைகளைத் தேர்ந்தெடுத்து ஒன்பது மாதம் முதல் ஏழு வயது வரை அவர்களது வளர்ச்சியினைக் கண்காணித்தார் இவர். எப்படிக் குழந்தைகளுடன் பேசுவது என்று உரிய ஆலோசனைகளைப் பெற்றோருக்கு வழங்கினார்.

ரீ.வி. மற்றும் இதர தொந்தரவுகள் இல்லாமல் குழந்தைகளுடன் தினமும் செலவிடுதல் 'இன்டர் வென்ஷன் டைம்' எனக் கூறப்படுகிறது. குழந்தைகளின் ஒன்பதாவது மாதத்திலிருந்து பேச ஆலோசனை வழங்கப்பட்டது.

ஏழு வருடம் கழித்து குழந்தைகளை அறிவு வளர்ச்சி சோதனைக்கு உட்படுத்திய போது முடிவுகள் பிரமிப்பை அளித்தன.

15 மாதங்களுக்கு முந்தியே மற்ற சாதாரண குழந்தைகளைவிட அறிவு வளர்ச்சி பெற்று விடுகின்றன இந்தக் குழந்தைகள். குழந்தைகளால் பேசமுடியாவிட்டாலும் நீங்கள் பேசுங்கள் என்கிறார் இந்த விஞ்ஞானி.

பி.பி.சி.யின் 'நாளை உலகம் இன்றைய இரவில்' என்ற இவரது தொலைக் காட்சி நிகழ்ச்சி அங்கு அனைவரையும் வெகுவாகக் கவர்ந்தது.

## சமையலறைச் சமாச்சாரம்

* கோவா வேகும் போது ஒரு நெடி வரும். அதனால் சிலருக்கு கோவா சாப்பிடும் ஆசையே போய் விடும். அந்த வாடையைப் போக்க கோவா வேகும்போது அதில் சிறிய துண்டு இஞ்சியைப் போட்டால் வாசனையாகவும் சுவையாகவும் இருக்கும்.
* வாழைக்காய், வாழைப்பூ போன்றவற்றை நறுக்குவதற்கு முன் கையில் சிறிது நல்லெண்ணெய் தடவிக் கொண்டால் கையில் கறை ஏற்படுவதைத் தவிர்க்கலாம்.
* சுடு தண்ணீர்ப் போத்தலில் ஏற்படும் துர்நாற்றத்தைப் போக்க சிறிது வினிகர் போட்டுக் கழுவ வேண்டும். மேலும் எப்போது சுடுதண்ணீர்ப் போத்தலைக் கழுவினாலும் சிறிது சீனி போட்டு அலம்பினால் பளிச்சென்று இருப்பதோடு நாற்றமடிக்கா மலும் இருக்கும்.
* தேங்காய் எண்ணெயில் சுத்தமான உப்பைப் போட்டு வைத்தால் எண்ணெய் நீண்ட நாள் கெடாமலும் காறல் இல்லாமலும் உருக்கும்.
* காய்ந்துபோன பாண் துண்டுகளை இட்லி பானையில் ஆவியில் பேக வைத்தால் புதியதுபோல ஆகிவிடும்.

## உண்ணும்போது உகந்த முறைகள்



சாப்பிடும்போது கவனிக்க வேண்டிய விஷயங்கள்:

வயிற்றின் பாதி இடம் உணவுக்காகவும் கால் பகுதி இடம் தண்ணீருக்காகவும் கால் பகுதி இடம் வாயுவுக்காகவும் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்கிறது மருத்துவ சாஸ்திரம்.

அஜீரணத்தை உருவாக்கும் உணவுகளைச் சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும். இட்லி, எண்ணெய புரட்டாத ரொட்டி போன்றவை விரைவில் ஜீரணமாகும். மிளகாய், புளி, கடுகு போன்றவற்றை மிகக் குறைந்த அளவே உணவில் சேர்க்க வேண்டும்.

ஒவ்வொருவரும் அவரவரது உடலின் ஜீரண சக்தியைப் புரிந்து அதற்குத் தக்கபடியான உணவைத் தேர்ந்தெடுத்து உண்ண வேண்டும். 'இன்னும் கொஞ்சம் சாப்பிடுவோம் என்று எண்ணாமல் தேவைக்கு மட்டும் சாப்பிடவேண்டும்.

* உணவு ஜீரணமாகும் முன்பு மீண்டும் உணவு சாப்பிடக்கூடாது.
* குறிப்பிட்ட நேரத்தில் சாப்பிட வேண்டும்.
* பசி எடுத்தால் மட்டுமே சாப்பிட வேண்டும்.
* கோபத்துடன் இருக்கும் போது சாப்பிடக் கூடாது. அப்படிச் சாப்பிட்டால் அஜீரணம் தோன்றும். டென்ஷனாக இருக்கும்போது சாப்பிட்டால் புளிப்பு தொல்லை ஏற்படும்.
* பால், மீன், மோர், வாழைப்பழம் போன்றவற்றை ஒன்றாகச் சாப்பிடக்கூடாது.
* குளித்த பின்பு சாப்பிடுங்கள். சாப்பிட்ட பின்பு குளிக்காதீர்கள்.
* கொதிக்க வைத்து ஆறிய நீரை மறுநாள் பயன்படுத்தக்கூடாது.
* மிக மிக வேகமாகவும், மிகமிக நிதானமாகவும் சாப்பிடக்கூடாது.
* உணவில் அதிகம் நெய் சேர்க்கக்கூடாது.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்.

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் ,தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** GH

பெயர்:........................

முகவரி:........................

................................

தொழில்:........................

கையொப்பம்:......................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 28-08-1999

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-4772, கொழும்பு.


வழங்குவது **புவனா** 04

# மோனிக்கா என் மோனிக்கா

பெற்றோரின் விவாகரத்தால் மோனிக்கா மனம் உடைந்து போனாள். அவளால் நிம்மதியாக தூங்க முடியவில்லை. உடல் எடையைக் குறைப்பதிலும் முன்னர் போல கவனம் செலுத்த முடியவில்லை.

அவளது கவலைகளை மறக்கவைப்பதற்கான முயற்சியில் அவளது தோழிகள் ஈடுபட்டனர்.



மோனிக்கா

மோனிககாவுககு இலககியததில ஈடுபாடு அதிகம் இருந்தது.

நல்ல கவிதைகளை இரசித்து படிப்பாள். நல்ல கதைகளை ஆழ்ந்து படிப்பாள். கவிதைகளில், கதைகளில் உள்ள சோகம் அவளையும் பாதிக்கும். கவிதையோடு சேர்ந்து கிளர்ச்சியடைந்திருக்கிறாள். கதையில் சோகம் பொங்கும் கதாபாத்திரத்தோடு சேர்ந்து அவளும் அழுதிருக்கிறாள்.

கவிதைகளை முதலில் வாசிக்கவும் பின்னர் நேசிக்கவும் கற்றுக்கொண்டவளுக்கு தானே கவிதை எழுதினால் என்னவென்று ஆர்வம் கிளர்ந்தது.

அவளும் எழுதினாள். 'மோனிக்கா கவிதை எழுதிவிட்டாள்' என்று தனக்குத் தானே சொல்லி, தனக்குள் தானே பெருமைப்பட்டுக் கொண்டாள்.

தனது கவிதையை தோழிகளிடம் காண்பித்தாள். அவர்களுக்கு கவிதையை வாசிக்கத் தெரிந்ததே தவிர, காதலுடன் நேசிக்கத் தெரியவில்லை. மோனிக்காவுக்கோ உற்சாகப்படுத்த யாருமில்லாத சோகம் துளைத்தது.

அப்போதுதான் அவன் தானாக தேடி வந்து, அருவியான வார்த்தைகளால் மோனிக்காவைப் பாராட்டினான்.

அவன் பெயர் அடம் டேல். சக மாணவன். மோனிக்காவின் கவிதைகளை அவளது தோழி காண்பித்திருக்கிறாள். வியந்தவன், கவிதை வரைந்தவளை நேரில் கண்டு பாராட்டி

## முதலாவது ஏமாற்றம்

விட்டான்.

அவனது அருவி வார்த்தைகளில் மோனிக்கா சில்லென்று நனைந்து போனாள்.

அதன் பின்னர் அடம் டேலும் மோனிக்காவும் அடிக்கடி சந்தித்தனர். அடிக்கடி சந்தித்த போது, கவிதைக்கு அப்பால் காதலும் விதையானது.

தன் நண்பிகளையும் அவர்களது காதலர்களையும் ஒன்றாகக் கண்டு மோனிக்கா பொறாமைப்பட்ட அதே மரத்தடியில் அடம் டேல் மோனிக்காவை இழுத்து அவளது அழகான உதடுகளில் முத்தமிட்டான்.

இது அவளுக்கு முதல் அனுபவமல்ல. நாடக ஆசிரியரின் மூலமாக ஏற்கனவே மோனிக்கா முத்த அனுபவத்தைப் பெற்றிருந்தாள்.

ஆனாலும் அடம் டேலின் முத்தத்தில் ஒரு வேகம் இருந்தது. அதீத சூடு இருந்தது. அவன் கைகளில் அவளது தேக வளைவுகளை ஆராயும் அவசரம் இருந்தது.

மோனிக்காவுக்கு அடம் டேல் கதாநாயகனாகத் தெரிந்தான். அதுவரை சேர்த்து வைத்திருந்த காதலையெல்லாம் அவன்மீது கொட்டினாள்.

பரிசுப் பொருட்கள் வாங்கிக் கொடுத்தாள். அவனைப் பற்றியே கவிதை எழுதிக் கொடுத்தாள்.

'உனக்காகத் தருவதற்கு உயிர் மட்டுமே இருக்கிறது. ஏற்கனவேதான் என் மனதை காணிக்கையாக்கிவிட்டேனே! எப்போது என் உயிரை தரவேண்டும்?' என்றெல்லாம் கவிதை செதுக்கி அவன் கைகளில் கொடுத்தாள்.

'கவிதையைக் கையிலே கொடு, உன் காதலை வாயிலே கொடு' என்பான். திகட்டத் திகட்ட அவன் கேட்கிறானே என்பதற்காக தன் இதழ்களை அவன் உதடுகளிடம் ஒப்படைத்து தவித்திருக்கிறாள்.

அவன் கேட்டிருந்தால் தன்னை முழுமையாகவே அவனிடம் கொடுத்திருப்பாள். அதற்கான நேரம் வரவில்லை. அதனால் முத்தத்தோடும், தழுவல்களோடும், தடவல்களோடும் அவர்கள் நெருக்கம் தொடர்ந்தது.

அடம் டேலுக்கு அதற்கு மேல் செல்லும் எண்ணம் இருந்தது. அதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்க நினைத்திருந்தான். அப்படி நினைத்திருந்தபோதுதான் அவனது சுயரூபம் அம்பலமானது.

அடம் டேல் மோனிக்காவிடம் தன்னை ஒரு கவிதைகளது இரசிகனாகக் கூறியது பொய்!

அடம் டேல் மோனிக்காவிடம் பேசிய இலக்கிய வார்த்தைகளும் பொய்.

மோனிக்கா மீது கண்வைத்திருந்த அடம் டேல் அவளை நெருங்கவும், அவளைத் தன் இஷ்டப்படி வளைக்கவும் அவளது கவிதைகளை பயன்படுத்திக் கொண்டான்.

அடம் டேல் ஒரு வஞ்சகன். அடம் டேல் ஒரு பொய்யன். அடம் டேல் பெண்களை விளையாட்டுப் பொருளாகக் கருதும் சபலஸ்தன்.

பல மாணவிகளை அதற்கு முன்பும் பதம் பார்த்திருக்கிறான். மோனிக்காவை முழுதும் அறிந்த பின்னர், அவளில் மூழ்கி எழுந்த பின்னர் கழற்றிவிடத்தான் நினைத்திருந்தான்.

அதற்குள் மோனிக்காவே அவனது லீலையை தன் கண்களால் கண்டுவிட்டாள்.

### தோழியும்....

மோனிக்காவுக்கு இயற்கையை இரசிப்பதும் பிடிக்கும். இயற்கைக் காட்சிகள் அவள் மனதை மயக்கும்.

பொதுப் பூங்கா ஒன்றுக்கு இயற்கைக் காட்சிகளை இரசிக்கச் சென்ற போதுதான் மோனிக்கா அக் காட்சியைக் கான நேர்ந்தது.

பூங்காவின் அடர்த்தியான பகுதி ஒன்றின் பின்னால் இருந்து கேட்ட கிளு கிளுப்பான சிரிப்பொலிதான் மோனிக்காவை அங்கு நோக்கவைத்தது.

அங்கே அவளது கதாநாயகனும் இன்னொருத்தியும் கட்டித்தழுவிக் கொண்டிருந்தனர். அவனது விஷமம் தாளாமல் அவள் தான் கிளர்ச்சியூட்டத் தக்கதாக சிரித்துக் கொண்டிருந்தாள்.

அந்த இன்னொருத்தியும் வேறு யாருமல்ல. மோனிக்காவிடம் இருந்து அவளது கவிதைகளை அடம் டேலுக்குக் காண்பித்தாளே மோனிக்காவின் தோழி. அவள் தான், அவளேதான் அடம் டேலுடன் உரசிக் கொண்டிருந்தாள்.

மோனிக்காவுக்கு தன் கண்களை நம்பமுடியவில்லை. அவளுக்கு அழுகையாக வந்தது. வேறு யாராவது அடம் டேலைப் பற்றியோ, தன் தோழி பற்றியோ இப்படிக் கூறியிருந்தால் நிச்சயமாக நம்பியிருக்க மாட்டாள்.

மோனிக்கா வீட்டுக்கு ஓடினாள். கட்டிலில் குப்புறக் கவிழ்ந்து சோகம் தீரும்வரை அழுது தீர்த்தாள்.

தன் நம்பிக்கை, தன் முதற்காதல் இப்படி சொற்ப ஆயுளோடு சுக்கு நூறாகும் என்று அவள் நினைத்தே பார்த்ததில்லை.

'அடம் டேல் நம்பிக்கைத் துரோகியா? அல்லது அவனை தகுதிக்கு மீறி நம்பிய நான் தான் ஏமாளியா?!' என்று மனதுக்குள் கேள்விகளால் குட்டி யுத்தமே மூண்டுவிட்டது.

தனது தோழியை நினைக்கவும் வெறுப்பாக இருந்தது. 'எனது காதலனையே கொள்ளையடித்துவிட்டாளே பாவி' என்று கோபமாக இருந்தது.

இரண்டு மூன்று நாட்கள் பள்ளிக்கூடப் பக்கமே செல்லப் பிடிக்கவில்லை. வீட்டுக்குள்ளே கிடந்தாள்.

மூன்று நாட்களின் பின்னர் அதே தோழி



முதற் காதலன் அடம் டேலுடன்

அவளைத் தேடி வீட்டுக்கே வந்துவிட்டாள்.

மோனிக்காவால் உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசமுடியவில்லை. நெத்தியில் அடித்ததுபோல கேட்டே விட்டாள்,

"நீ எனக்கு தோழியா? என் காதலனுடன் கும்மாளம் அடிக்கும் நீ ஒரு துரோகி!" என்று இரைந்து கத்திவிட்டாள்.

தனது தோழி திகைத்துப் போவாள்



மோனிக்காவின் தாயார்

என்றுதான் மோனிககா நினைத்தாள். அதற்கு மாறாக அவள் எவ்வித பதட்டமும் இல்லாமல் கூறிய வார்த்தைகள் மோனிக்காவின் பாதையை மாற்றும் வார்த்தைகளாகின.

"நியாயமாகப் பார்த்தால் உன்மீதுதான் நான் பாய்ந்திருக்க வேண்டும். ஏன் தெரியுமா? உன்னோடு பழகுவதற்கு முன்பே, நானும் அவரும் நெருக்கமாக இருக்கிறோம். அடம் டேலுடன் நான் பழகுவது அவனைக் காதலிப்பதற்காக அல்ல. அவன் விஷயகாரன். அதனால்தான்!" என்று குறும்பாகக் கண் சிமிட்டினாள்.

மோனிக்காவுக்கு இது எதிர்பாராத செய்திதான். தோழி மேலும் கூறினாள்:

"ஆண்களை அளவுக்கு மீறி நம்பாதே! நம்பினால் நீ மூக்கை சிந்திக்கொண்டு ஒரு மூலைக்குள் முறிந்து கிடக்க வேண்டியதுதான்!"

மோனிக்காவுக்கு தோழி புகட்டிய உத்தி புத்தியில் ஏறியது.

அதனைப் பயன்படுத்தவும் ஒரு சந்தர்ப்பம் விரைவில் வாய்த்தது. (வருவாள்)

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

### மல்வத்தை வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | க. பாக்யமுத்து,<br>33, அம்பாறை வீதி, மல்வத்தை. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.



படிப்பகம்

www.padippakam.com





**சக்தி தனக்கே கருவியாக்கு-அது**
**சஞ்சலங்கள் தீர்ந்தொருமை கூடும்-மனம்**
**சக்தி தனக்கே கருவியாக்கு-அது**
**சாத்துவிகத் தன்மையினைச் சூடும்.**
**-சுப்பிரமணிய பாரதியார்.**

## பாப்பா முரசு சிறுகதை

# நரியின் நட்பு!

ஒரு காட்டில் வாழ்ந்த நரி ஒன்று மற்ற மிருகங்களுக்கு மத்தியில் கௌரவத்துடன் வாழ வேண்டும் என்று விரும்பியது. எனவே காட்டின் ராஜாவான சிங்கத்துடன் நட்புக்கொண்டால் தன் அந்தஸ்து உயர்ந்துவிடும் என்று நினைத்தது.

உடனே சிங்கத்திடம் சென்று, "நாம் இருவரும் நண்பர்களாக இருப்போமே!" என வேண்டிக் கொண்டது.

அதற்கு சிங்கம், "உன்னுடன் நட்புக் கொள்வதனால் எனக்கு என்ன நன்மை ஏற்படும்?" என்று கேட்டது.

"சிங்கமே! நான் சரியான தந்திரசாலி. பெரிய பெரிய மிருகங்களை எல்லாம் தந்திரமாகப் பேசி உம்மிடம் அழைத்து வருவேன். பிறகு நீர் அவற்றை அடித்துக் கொன்றுவிடும். கொல்லப்பட்ட விலங்குகளை நாம் பங்கிட்டுக் கொள்வோம்!" என்று நரி சொன்னது.

சிங்கமும் அதற்கு ஒப்புக்கொண்டது.

முதலில் சிறிய மிருகங்களை நரி தந்திரமாகப் பேசி அழைத்து வர சிங்கம் அவற்றை அடித்துக் கொன்றது. இறுதியில் இரண்டு மிருகங்களும் அவற்றை உண்டு பசியாறின.

மற்ற மிருகங்களுக்கு மத்தியில் கௌரவமாக வாழ நினைத்து சிங்கத்துடன் நட்புக்கொண்ட நரியை மற்ற மிருகங்கள் வெறுக்க ஆரம்பித்தன.

ஒருநாள் நரி, மான் ஒன்றை அழைத்து வர சிங்கம் அதை அடித்துக் கொன்றது. அன்று அந்த மானைத் தவிர அவற்றிற்கு வேறொரு மிருகங்களும் அகப்படவில்லை.

நரிக்குப் பசியெடுக்கத் தொடங்க, அது சிங்கத்தைப் பார்த்து,

"சிங்கராஜாவே! இன்று வேறொன்றும் எமக்குக் கிடைக்காது போலிருக்கிறது. எனவே கிடைத்திருக்கும் இந்த மானைப் பங்கு போட்டுக்கொள்வோமா?" என்று கேட்டது.

இதைக் கேட்ட சிங்கத்திற்குக் கோபம் வந்தது.

"இந்த மானே எனக்குப் போதாது. அதில் நீ வேறு பங்கு கேட்கிறாயா? நான் ஏன் உனக்குத் தரவேண்டும்?" என்று கேட்டது சிங்கம்.

"கிடைக்கும் பிராணிகளை நாம் இருவரும் பங்குபோட்டுக்கொள்ளலாம் என்று தானே ஒப்பந்தம் பேசினோம். இப்போது இப்படிப் பேசுகிறீரே?" என்று திகைப்புடன் கேட்டது நரி.

"என்னோடு நட்பாக இருந்தால் உனக்குப் பெருமை என்று நினைத்துத்தானே என்னுடன் சேர்ந்தாய். எனவே நான் சொல்வதைத்தான் நீ கேட்க வேண்டும். இல்லாவிட்டால் உன்னையும் அடித்துக் கொன்றுவிடுவேன்!" என்று மிரட்டியது சிங்கம்.

நரிக்கு அப்போதுதான் சிங்கத்தின் குணம் விளங்கியது. இதனுடன் நட்பாக இருப்பதற்காக மற்ற மிருகங்களை எல்லாம் இதற்குப் பிடித்துக்கொடுத்தது எவ்வளவு கூடாத செயல் என்று கவலைப்பட்டது.

அப்போதே சிங்கத்தை விட்டு நரி ஓடிப்போய், மற்ற மிருகங்களிடம் மன்னிப்புக் கேட்டு அவைகளுடன் சேர்ந்து வாழ்ந்தது.



# அதிசயம் - ஆனால் உண்மை!


➡ சிறுத்தைத் தவளை எனப்படும் ஒருவகைத் தவளை தண்ணீரில் இருந்து தாவிக்குதித்து மேலே பறக்கும் பறவைகளைக் கொல்லும்.





⬅ ஹங்கேரி நாட்டு வேட்டை நாய்கள் ஆடுகள் மற்றும் பசுக்களின் முதுகின் மீது ஏறி அமர்ந்து அவற்றை வழி நடத்தும்.

➡ சிலந்தி நண்டு எனப்படும் ஒருவகை நண்டு தனது உடலில் உள்ள வளையங்களில் கடற்பாசிகளைத் தொங்கவிட்டு அவற்றின் இடையே ஒளிந்து கொண்டிருக்கும்.



# பாம்புக் குன்று

இறந்தவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் சிலர் அவர்களுக்கு சமாதி எழுப்புவார்கள். வேறு சிலர் பூங்கா, மாடம் போன்றவைகளை அமைத்துள்ளார்கள்.



இந்த வகையில் அமெரிக்காவின் ஒஹியோ மாநிலத்தைச் சேர்ந்த அடேனா என்ற வட அமெரிக்கப் பழங்குடியினர், பாம்பு வடிவில் மயானத்தை அமைத்தனர். இறந்தவர்களை அடக்கம் செய்வதற்காக பல்வேறு விலங்குகளின் உருவங்களில் இவர்கள் மயானங்களை அமைப்பார்கள்.

கி.பி.700ல் இவர்கள் 4 கிலோமீட்டர் பரப்பளவுள்ள பாம்பு ஒன்று படுத்திருப்பதைப் போன்று மயானம் ஒன்றை அமைத்தனர். 'ஹில்ஸ்போரோ' என்ற குன்றின் மீது அமைந்திருக்கும் இந்த இடம் பாம்புக்குன்று என்றே அழைக்கப்படுகின்றது.

# மாறுகண்

மாறுகண் உள்ளவர்களைப் பார்த்திருப்பீர்கள். சாதாரணமாக ஒரு பொருளைப் பார்க்கும்போது இரண்டு கண்களின் கருவிழிகளும் அந்தப் பொருளைப் பார்க்கும். ஆனால் மாறுகண் உள்ளவர்கள் ஒரு பொருளைப் பார்க்கும்போது ஒரு கண்ணின் கருவிழி வேறு இடத்தையும், மற்றக் கண்ணின் கருவிழி குறிப்பிட்ட பொருளைப் பார்க்கும்.

இந்த மாறுகண் குறைபாடு இருவகைப்படும். ஒன்று கண்ணை இழுத்துப் பிடிக்கும் தசையின் பலவீனத்தால் வருவது. மற்றது வலது, இடது கண்களின் பார்வைத் தரத்தில் வித்தியாசமாகி மாறுபட்ட வலுவால் ஏற்படுவது.

மாறுகண் குறைபாட்டை அறுவைச் சிகிச்சை மூலம் சரியாக்க முடியும். மாறுகண் இருப்பவர்களுக்கு அதிஷ்டம் வரும் என்பதெல்லாம் பொய்யான தகவல்கள்.



# நிலவில் நடந்தவர்கள்

சந்திரனில் முதன்முதலாக 1969ம் ஆண்டு நடந்தவர் அமெரிக்காவைச் சேர்ந்த நீல் ஆம்ஸ்ட்ரோங், அதற்குப் பின் 11பேர் நிலவிற்குச் சென்று திரும்பியுள்ளனர்.

நிலவில் நடந்த 12 பேர் பற்றிய விபரம் வருமாறு:

| வீரரின் பெயர் | வயது | விண்கலத்தின் பெயர் | சென்ற ஆண்டு |
|---|---|---|---|
| 1. நீல் ஆம்ஸ்ட்ரோங் | 68 | அப்பலோ-11 | 1969 |
| 2. பஸ் அல்ட்ரீன் | 69 | அப்பலோ-11 | 1969 |
| 3. சார்ள்ஸ் பீட் கன்ராட் | 69 | அப்பலோ-12 | 1969 |
| 4. அலன் பீயன் | 67 | அப்பலோ-14 | 1971 |
| 5. அலன் ஷீபேட் | 74 | அப்பலோ-14 | 1971 |
| 6. எட்காம் மிட்செல் | 68 | அப்பலோ-14 | 1971 |
| 7. டேவிட் ஸ்கொட் | 67 | அப்பலோ-15 | 1971 |
| 8. ஜேம்ஸ் இர்வின் | 61 | அப்பலோ-15 | 1971 |
| 9. ஜோன் யங் | 68 | அப்பலோ-16 | 1972 |
| 10. சார்ள்ஸ் ட்யூக் | 63 | அப்பலோ-16 | 1972 |
| 11. யூஜின் சொர்னன் | 65 | அப்பலோ-17 | 1972 |
| 12. ஹரிஸன் ஜக் ஸ்மித் | 64 | அப்பலோ-17 | 1972 |

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **28.08.1999.**

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 310**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 308

**பரிசுக்குரியவர்:**
ஃபாத்திமா நிஷ்மா நஜீம்,
ஒக்ஸ்ஃபோட் சர்வதேச பாடசாலை, பலாங்கொடை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| எம். சிபாயா, மெதடிஸ் பெண்கள் கல்லூரி, திருகோணமலை. | வே. வெங்கட் றமணன், இந்து கல்லூரி, பம்பலப்பிட்டி. |
| பே. தினேஸ்குமார், கோளாவில் மகா வித்தியாலயம், அக்கரைப்பற்று. | ஸ்ரீஸ்கந்தராஜா வினோதன், இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி, திருகோணமலை. |
| சிறில்யா சிறீஸ்கந்தராஜா, சைவ மங்கையர் வித்தியாலயம், வெள்ளவத்தை. | எஸ். ஸஃப்ரான் முகமட், ஸாஹிரா தேசிய கல்லூரி, மாவனல்லை. |
| பி. நிஷாந்தினி, பாக்கியம் தேசிய கல்லூரி, மாத்தளை. | பாத்திமா நுஸ்ஹா நஹீம், சாந்த தோமியர் பெண்கள் பாடசாலை, மாத்தளை. |
| ஜே. ஜென்சி லிதியான், கனிஷ்ட பாலிகா கன்வென்ட், நாவலப்பிட்டி. | செல்வன் ஆறுமுகம் அருண், சென் ஜோன்ஸ் பொஸ்கோ கல்லூரி, ஹட்டன். |

# விடுகதைகளும் விடையும்

இங்கே ஐந்து விடுகதைகள் உள்ளன. ஆனால் அவை எல்லாவற்றிற்கும் ஒரே விடைதான். எங்கே கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

1. உள்ளே மரப்பூட்டு, வெளியே நார்ப்பூட்டு.
   அது என்ன?
2. ஒரு சாண் குள்ளனுக்கு, அரைச்சாண் குடுமி.
   அவன் யார்?
3. திறக்க முடியும், மூட முடியாது.
   அது என்ன?
4. ஊசி நுழையாத கிணற்றிலே ஒரு படி தண்ணீர்.
   அது என்ன?
5. கடவுளுக்கு வேண்டியவன், சிதறினாலும் சிறப்புத்தான்.
   அவன் யார்?

விடை: தேங்காய்

# பரபரப்பான விமான நிலையங்கள்

உலகிலேயே மிகவும் பரபரப்பான முதல் 10 விமான நிலையங்களும் அங்கு ஒரு வருடத்தில் வந்து போகும் பயணிகளின் தொகையும் வருமாறு:

| விமான நிலையம் | பயணிகள் தொகை (வருடத்திற்கு) |
|---|---|
| 1. சிக்காக்கோ | 67,253,000 |
| 2. அட்லான்டா | 57,735,000 |
| 3. டல்லாஸ் | 56,491,000 |
| 4. ஹீத்ரோ லண்டன் | 54,491,000 |
| 5. லொஸ் ஏஞ்சல்ஸ் | 53,909,000 |
| 6. டோக்கியோ | 45,823,000 |
| 7. ஃபிராங்ஃபேர்ட் | 38,180,000 |
| 8. சான்ஃபிரான்ஸிஸ்கோ | 36,236,000 |
| 9. மியாமி | 33,236,000 |
| 10. டென்வர் | 31,037,000 |



# திரவ மொழி

மான் இனங்களில் கறுப்பு மான், கலைமான் போன்றவற்றின் கால்களில் விசேஷ நறுமணம் சுரக்கும் சுரப்பிகள் உள்ளன.

இவை நடந்து செல்லும்போது கால்களில் உள்ள சுரப்பிகளில் இருந்து நறுமணத் திரவம் சுரந்து காலடித் தடத்தில் படுகிறது.

இந்த நறுமணத்தை வைத்து அதன் தோழமை விலங்குகள் இந்த இன விலங்குகள் போகும் பாதையைச் சுலபமாகக் கண்டு பிடித்து விடுகின்றன.

# முதல் குண்டு

முதன் முதலாக 1849ம் ஆண்டில் கைவெடிகுண்டு வீசப்பட்டது. இத்தாலிக்கும் ஒஸ்ரியாவுக்குமிடையே அப்போது சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்தது. சண்டையின் போது இத்தாலி நாட்டுப் படையினர் மீது ஒஸ்ரிய படைவீரர்கள் கைவெடிகுண்டுகளை வீசினா். அதன் பின் முதலாவது உலகப்போரில் ஏராளமான கைவெடிகுண்டுகள் பயன் படுத்தப்பட்டன.

# ஏன் தெரியுமா?

பத்திரிகைகள், புத்தகங்கள் மற்றும் தொலைக் காட்சிகளில் விளம்பரங்களுக்காகக் கடிகாரத்தைக் காட்டுவார்கள். இந்தக் கடிகாரங்களில் எல்லாம் நேரம் 10.10 எனக் காட்டும்படி வைத்திருப்பார்கள்.

ஏன் இப்படி வைக்கிறார்கள் என்று தெரியுமா? இதற்கு இரண்டு காரணங்கள் சொல்கின்றார்கள். ஒன்று அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோன் எஃப். கெனடி சுட்டுக்கொல்லப்பட்ட நேரம் என்று.

இரண்டாவது, ஜப்பானின் ஹிரோஷிமா நகர்மீது அமெரிக்க அணுகுண்டு வீசிய நேரம் அது என்றும் சொல்லப்படுகிறது. இப்போது தெரிந்ததா உங்களுக்கு.



www.padippakam.com

# கை விலங்கு 17 சிக்கிய மின்னல்

## கிரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்

**இதுவரை**
பாக்கியத்தின் மகள் வர்ணாவின் நாய் பிங்கிக்கு 'டிஸ்டெம்பர்' எனப்படும் கொடிய நோய் வருகிறது. அதனைக் காப்பாற்றவே முடியாது என்று டாக்டர்கள் கைவிரிக்கின்றனர். ஆனால் அந்த நாய் அதிசயமாக உயிர் பிழைக்கிறது.
இதேவேளை, சொர்ணம், நீலமேகம் தம்பதியின் மகள் பூவிழி கொலையாகிறாள். **இனி...**

கட்சி அலுவலகம் அடுத்த அரைமணிநேரத்தில் பொலிஸ் நடவடிக்கைகளால் அமளிப்பட்டது. மிதுன் உடலைச் சுற்றி ஃப்பாரன்ஸிக் பரவியிருந்தது.

இன்ஸ்பெக்டர் பலராமன் வியர்த்து வழிந்துகொண்டு அஸிஸ்டண்ட் கமிஷனருக்கு முன்பாய் நின்றிருக்க அவர் கேட்டுக் கொண்டிருந்தார்.

"பலராமன்...! நீங்க எதுக்காக மிதுனைப் பார்க்க வந்தீங்க..?"

"ஒரு என்கொய்ரி விஷயமா ஸார்."

"என்ன என்கொய்ரி...?"

"க்யூப் கன்சல்டன்ஸியில் வேலை பார்த்த பூவிழிங்கிற பெண் கொலை செய்யப்பட்டது சம்பந்தமா மிதுனை விசாரிக்க வந்தேன் ஸார். மிதுனை விசாரணை பண்ணிட்டு இருக்கும்போதே ஒரு கட்சித் தொண்டர் வந்து, 'அண்ணே! உங்களுக்குப் ஃபோன் வந்திருக்கு லைன்ல தலைவர் இருக்கார்ன்னு நினைக்கிறேன்னு' சொன்னதும் மிதுன் எந்திரிச்சு போனான். ஃபோன் பேசப்போன ஆள் பதினைஞ்சு நிமிஷமா வராமே போகவே நான் ரூமுக்கு வந்து பார்த்தப்ப மிதுன் இரத்த வெள்ளத்துல செத்துக் கிடந்தான்."

"ஃபோன் வந்திருக்குன்னு சொன்ன ஆள் யாரு...?"

பலராமன் திரும்பி சுவரோரமாய் உட்கார்த்தி வைக்கப்பட்டிருந்த ஒரு கெச்சலான நபரை கையசைத்துக் கூப்பிட்டார்.

"எந்திரிச்சு வாய்யா இப்படி..."

கண்களில் பயத்தை நிரப்பிக்கொண்டு மார்புக்குக் குறுக்காய் கைகளைக் கட்டிக் கொண்டு ஓடி வந்து ஏ.சி.க்கு முன்பாய் நின்றான். அவர் தன் கையில் இருந்த லாட்டியை அவன் தோள் மேல் வைத்தபடி கேட்டார்.

"உம் பேர் என்ன...?"

"மாரியப்பன் ஸார்."

"உனக்கு இங்கே என்ன வேலை...?"

"நான் ஒரு கட்சித் தொண்டன் ஸார். அடிக்கடி இங்கே வந்து போயிட்டிருப்பேன்...! தொழில் கலாசி லேபர்."

"மிதுனுக்குப் ஃபோன் வந்திருக்குன்னு சொன்னது நீதானே...?"

"ஆமா...ஸார்..."

"ஃபோன்ல பேசினது யாரு...?"

"தலைவர் குரல் மாதிரி இருந்தது ஸார்."

"பேசறது யார்ன்னு நீ கேட்கலையா...?"

"கேக்கலை ஸார். தலைவரோட குரல் மாதிரி இருந்ததால அவராத்தான் இருக்கும்னு நினைச்சு... ரிஸீவரை படுக்க வெச்சுட்டு மிதுன் அண்ணனைக் கூப்பிடப் போனேன்."

"மிதுன் ஃபோன் பண்ணப் போகும்போது நீ கூடப் போகலையா...?"

"இல்ல ஸார்... நான் டீ குடிக்கிறதுக்காக எதிர்த்தாப்புல இருக்கிற பேக்கரிக்குப் போயிட்டேன்!"

"இதோ பார்...! உனக்குத் தெரியாமே இந்த கொலை நடந்திருக்க வாய்ப்பே இல்லை. மிதுனுக்கு நிஜமாவே ஃபோன் வந்ததா... இல்லை ஃபோன் வந்திருக்குன்னு சும்மாவாவது பொய் சொன்னியா...?"

மாரியப்பன் அப்படியே மண்டியிட்டு இரண்டு கைகளையும் உயரத் தூக்கிக் கும்பிட்டான்.

"ஸார்... நான் புள்ளக்குட்டிக்காரன்! ஒரு வம்பு தும்புக்கும் போகாத ஆளு. ஏதோ இந்தக் கட்சி மேல இருக்கிற அபிமானத்தால இங்கே வாரத்துக்கு ரெண்டு தடவை மூணு தடவை வந்துட்டுப் போயிட்டிருப்பேன்..! வீணா என்னை சந்தேகப்பட்டு லாக்கப்புக்கு கொண்டு போயிடாதீங்க ஸார். எம் பொண்டாட்டி மான மரியாதைக்குப் பயப்படறவ. கழுத்துக்கு கயித்தை மாட்டிக்குவா!"

"நீ பொலிஸ் லாக்கப்புக்கு போகக் கூடாதுன்னு நினைச்சியனா இப்ப நான் கேக்கிற கேள்விக்கு உண்மையான பதிலைச் சொல்லணும்..."

"கே...கேளுங்க ஸார்..."

"மிதுன் கொலை செய்யப்பட்டதுக்கு காரணம் முன் விரோதமா இல்லை உட்கட்சிப் பூசலா...?"

"எனக்குத் தெரியாது ஸார்..."

"லாக்கப்புக்குள்ளே போய் உட்கார்ந்தாத்தான் உனக்குத் தெரியும் போலிருக்கு..." அஸிஸ்டண்ட் கமிஷனர் கோபமான குரலில் சொல்ல மாரியப்பனின் தாடையை லாட்டியால் நிமிர்த்திய விநாடி-

ஃப்பாரன்ஸிக் நபர் ஒருவர் மெதுவாய் பக்கத்தில் வந்து நின்றார்.

"ஸார்..."

அவர் திரும்பினார்.

"எஸ்..."

"ஸார்...! கொலை நடந்த அறைக்குள் சீன் ஆஃப் க்ரைம் பார்த்துட்டிருக்கும்போது பீரோவுக்கு அடியில் இந்த இரத்தக்கறை படிஞ்ச வளையல் துண்டுகள் கிடைச்சுது," சொல்லிக்கொண்டே ஒரு சிறிய பாலீத்தின் கவர்க்குள் போட்டு வைத்திருந்த அந்த வளையல் துண்டுகளை எடுத்துக் காட்டினார் அவர்.



★★★

"வர்ணா...!"

பின்பக்கம் குரல் கேட்டு மொட்டை மாடிச்சுவரில் உட்கார்ந்திருந்த வர்ணா திரும்பிப் பார்த்தாள். அம்மாக்காரி பாக்கியம் நின்றிருந்தாள். கைப்பாத்திரத்தில் வடாம் மாவு.

"அம்மா..."

"என்னடி...! நானும் நேத்தைக்கு இருந்து பார்க்கிறேன். ஆளே ஒரு மாதிரி இருக்கே... உடம்புக்கு ஏதாவது முடியலையா..?"

"அதெல்லாம் ஒண்ணும் இல்லேம்மா. நான் நல்லாத்தான் இருக்கேன்..."

"நீ நல்லாயிருக்கிற இலட்சணம் தான்... உன்னோட மூஞ்சியிலேயே தெரியுதே...? கண்ணாடியில உன்னோட மூஞ்சியை நீ பார்த்துக்கறியா இல்லையா...?"

"அம்மா எனக்கு மனசு சரியில்லை."

"உனக்கு எதனால மனசு சரியில்லைன்னு எனக்குத் தெரியும். நெருப்புல வெந்த அந்தப் பார்கவியைப் பார்க்கப்போகாதேன்னு தலை தலையா அடிச்சுக்கிட்டேன். நீ கேட்கலை. போய்ப் பார்த்துட்டு வந்ததிலிருந்துதான் நீ இப்படி நோய்க் கோழி மாதிரி ஆயிட்டே..."

"அம்மா...! நேத்திக்கு நான் பார்கவியை பார்க்க போகாமே இருந்திருந்தா அவ செத்துப் போயிருப்பா."

பாக்கியம் மகளை வியப்பாய் பார்த்தாள்.

"நீ என்னடி சொல்றே...?"

"அம்மா...! ரெண்டு நாளைக்கு முன்னாடி பிங்கிக்கு டிஸ்டெம்பர் நோய் வந்து டாக்டர்கள் கிட்டே கொண்டு போனோம். டாக்டர்கள் என்ன சொன்னாங்க...?"

"நாம வீடு போய் சேர்றதுக்குள்ளே நாய் செத்துப் போயிடும்னு சொன்னாங்க..."

"அவங்க சொன்ன மாதிரி நாய் செத்ததா...?"

"இல்லை..."

"ஏன்...?"

"அதுக்கு ஆயுசு கெட்டி. அவ்வளவுதான். டாக்டர்களும் மனுஷங்கதானே... தெய்வங்கள் இல்லையே...?"

"சரி... இப்போ பார்கவி விஷயத்துக்கு வருவோம்... நேத்திக்கு நான் பார்கவியைப் பார்க்கப் போனபோது அவ உயிருக்குப் போராடிக்கிட்டு இருந்தா. பத்து நிமிஷத்துக்குள்ளே உயிர் போயிடும்னு டாக்டரும் சொன்னார். நான் பார்கவியோட கையைப் பிடிச்சுக்கிட்டு ரெண்டு மூணு நிமிஷம் பேசிட்டு இருந்தேன். அதுக்கப்புறம் டாக்டர் வந்து பார்த்துட்டு பார்கவியோட உயிர்க்கு இனி எந்த ஆபத்தும் கிடையாதுன்னு சொல்லிட்டார்."

பாக்கியம் புன்னகைத்தாள்.

"இப்ப...நீ...என்ன சொல்லவர்றே?"

"அம்மா...! பார்கவியை பரிசோதிச்ச டாக்டர் என்னைப் பார்த்து என்ன சொன்னார் தெரியுமா...? 'உன் கையில மந்திரக்கோல் ஏதாவது இருக்காம்மா! நீ பார்கவியைத் தொட்டு ரெண்டு நிமிஷம் பேசினதுமே அவ டையிங் ஸ்டேஜிலிருந்து மீண்டுட்டாளே'ன்னு சொன்னார்..."

பாக்கியம் சிரித்தாள்.

"அது உன்னோட கைராசியா இருக்கும். இந்த மாதிரி ராசி சிலபேர்க்குத்தான் இருக்கும்... அதை நினைச்சு நீ சந்தோஷப்படு..."

கீழே ஹாலில் ஃபோன் மணி அடிக்கும் சத்தம் கேட்டது. பாக்கியம் சொன்னாள்.

"ஃபோன்ல யாருன்னு பாரு. நான் வடாம் பிழிச்சுட்டு வர்றேன்...."

வர்ணா மாடிப்படிகளில் இறங்கி ஹாலுக்குள் நுழைந்து அலறிக்கொண்டிருந்த டெலிஃபோனைத் தொட்டு ரிஸீவரை எடுத்தாள்.

"ஹலோ..."

"பேசறது யாரு வர்ணாவா...?" ஒரு ஆண்குரல் கேட்டது.

"ஆமா...நீங்க யாரு...?"

"நான் டாக்டர் ரத்னவேல் பேசறேன்ம்மா. வெர்டினரி டாக்டர். உன்னோட நாய்க் குட்டியைக் கூட என்கிட்ட கொண்டு வந்தியே...?"

"மறக்க முடியுமா டாக்டர்...?"

"எப்படீம்மா இருக்கே...?"

"ஃபைன் டாக்டர்..."

"ஹௌ ஈஸ் பிங்கி...?"

"வெரி வெரி ஆக்டீவ். ஒரு நிமிஷம் கூட ஒரு இடத்துல நிக்காமே ஓடி விளையாடிக்கிட்டு இருக்கு டாக்டர்."

டாக்டர் சிரித்தார்.

"என்னைப் பொறுத்தவரைக்கும் அது ஒரு அதிசய நாய். பை...த...பை வர்ணா...இப்ப நீ ஃப்ரீயா?"

"என்ன விஷயம் டாக்டர்...?"

"உன்கிட்ட கொஞ்சம் பேசணும்... ஒரு அரைமணி நேரம் வந்துட்டு போக முடியுமா....?"

"எனிதிங் இம்பார்ட்மெண்ட் டாக்டர்?"

"இல்லாமே கூப்பிடுவேனா...?"

"அம்மாவையும் கூட்டிக்கிட்டு வரட்டுமா டாக்டர்?"

"வேண்டாம்...நீ மட்டும் தனியா வா."

"இப்பவே வரணுமா டாக்டர்?"

"உடனே...உடனே..."

(தொடர்ந்து வரும்)

---

# தர்ம யுத்தம் 02

**'சிறை', 'தர்மயுத்தம்' போன்ற வெற்றிப்படங்களை இயக்கியவர் ஆர்.சி.சக்தி. அவரது சூடும் சுவையும் கலந்த அனுபவங்கள் இங்கு தொடராகின்றன.**

எனது வேலை அவ்வளவு எளிதாக இல்லை. நான் சொல்லித் தந்த வசனங்கள் அவர் மனதில் பதியவே இல்லை. 'இப்படி ஒரு மரமண்டையா!' என்று எனக்குள் சலிப்பு. கோபத்தில் கடிந்து கொண்டாலும், கள்ளமில்லாத ஒரு சிரிப்பு தான் பதிலாகக் கிடைக்கும். அந்த அழகான சிரிப்பிற்குப் பின்னால் அந்தப் பெண்ணின் மனதில் நடந்து கொண்டிருந்த போராட்டம் என் கண்களுக்குப் புலப்படவில்லை.

"சக்தி எவ்வளவு கஷ்டப்பட்டு வசனம் சொல்லிக் கொடுக்குறாரு! நீ வசனத்தை கவனிக்காம, பல்ல, பல்ல காட்டிக்கிட்டிருக்கியே!" என்று படத்தின் இயக்குநர், திரு .பிரான்ஸிஸ் அவர்கள் சத்தம் போட்ட போதும், அந்தப்பெண் பல்லைத்தான் காட்டினாள். மனதைக் காட்டவில்லை.

நான் எதிரில் அமர்ந்து சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்த நேரங்களில், அவள் தன் இதயத்தின் உள்ளே வேறு ஒரு வாழ்வைத் தேடி அலைந்து கொண்டிருந்த உண்மை எனக்குத் தெரிய பல நாட்கள் ஆகிவிட்டன.

திடீரென்று ஒருநாள் அந்தப் பெண், "அண்ணா, எனக்கு சினிமாவிலே நடிக்கிறதுல இஷ்டம் இல்ல" என்றாள். நான் கஷ்டப்பட்டு சொல்லித் தந்த தமிழில், தடுமாற்றம் இல்லாமல், தெளிவாக அந்தப் பெண் பேசிய முதல் வார்த்தை இது.

நான் அதிர்ந்துபோனேன். "என்னம்மா இது...? எவ்வளவோ பேரு சினிமாவில நடிக்க ஏங்கிக்கிட்டு இருக்காங்க. உனக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைச்சிருக்கு. நீ என்னடான்னா இஷ்டம் இல்லை என்கிறியே! உனக்குப் பைத்தியமா?" என்றேன்.

மறுபடியும் அந்தப் பெண், "எனக்கு சினிமா வேண்டாண்ணா. நான் ஒரு சராசரிப் பொண்ணா வாழ்ந்து சாகணும்னு ஆசைப்படறேன். ஒரு நல்ல ஆம்பளைக்கு மனைவியாகி, அவனுடைய விருப்பு, வெறுப்புகளுக்கு என்னை விட்டுக் கொடுத்து, கஷ்ட, நஷ்டங்கள்ள பங்கெடுத்து, குழந்தைகள் பெத்துக்கிட்டு..."

இப்படி அவள் அடிமனதில் தேக்கி வைத்திருந்த ஆசைக் கனவுகள் விரிந்து கொண்டே போயின.

"ஒரு பணக்காரன்தான் எனக்குப் புருஷனா வரணும்னு நான் எதிர்பார்க்கல. ஏழையா இருந்தாலும் நல்லவனா, என் உடம்பை மட்டும் இல்லாம, மனசையும் நேசிக்கிறவனா இருந்தா போதும். டீக் கடையில் டேபிள் துடைக்கிற வேலை செய்யறவரா இருந்தாலும், அவர் கொண்டு வர்ற கொஞ்ச காசுல, என்னால சந்தோஷமா வாழமுடியும்."

அந்தப் பெண்ணுக்கு பேசக் கற்றுக் கொடுத்த நான், இப்போது பேச முடியாமல் நின்றேன். "ஏம்மா, இதை உங்க வீட்டுல சொல்லியிருக்கலாமே?" என்றேன்.



ஆர்.சி.சக்தி

"உங்கிட்ட சொல்ற நான், அவங்ககிட்ட சொல்லாமலா இருப்பேன். ஒருமுறை இல்ல, பலமுறை சொல்லிட்டேன். நான் எதிர்பார்க்கிற பதில் அவங்ககிட்டேயிருந்து கெடைக்கல. ரெண்டு தடவை தற்கொலைக்குக்கூட முயற்சி பண்ணினேன். நடக்கல. சாவுகூட என்னை ஏமாத்திடுச்சு. மரணம் கூட என் மன உணர்வுகளைப் புரிந்துகொள்ளத் தயாராக இல்லை. அப்புறம் எப்படி நான் மனுஷங்ககிட்ட எதிர்பார்க்க முடியும்.

என் குடும்பத்தை நெனைச்சாலும் எனக்குப் பாவமாத்தான் இருக்கு. விதியோட அவங்க வெளையாட்ற சீட்டாட்டத்துல அவங்க கையில் இருக்குற ஒரே துருப்புச் சீட்டு நான்தான். அதாவது என் வயசு, அழகு, இளமை. இதுவும் கைவிட்டுப் போயிருமோ என்கிற பயத்துல என்னைப் பாதுகாத்துட்டு இருக்காங்க!" என்றாள்.

எனக்கு எழுத்துத் திறமை இருப்பதாக அதுவரை நம்பிக்கொண்டிருந்தேன். அந்தப் பெண் தன் இதயத்தை எழுதிக் காட்டியபோது, 'நின்றேன், நின்றேன், நெடுமரம் போல் நின்றேன்' என்ற 'தங்கப் பதுமை' வசனம்தான் நினைவுக்கு வந்தது.

இந்த நெடுமரத்தையும் அசைத்த சம்பவம், வெகு விரைவிலேயே நடந்தது......

அந்தப் பெண்ணிற்கு நடனப் பயிற்சி கொடுப்பதற்கு ஏற்பாடானது. திரு. தங்கப்பன் மாஸ்டர்தான் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். அவரது உதவியாளராக அன்றிருந்த, இன்று பெரியதொரு நடன இயக்குநராக இருக்கின்ற, தாரா ஆடிக்காட்டுவார். அந்தப் பெண் ஆடக் கற்றுக்கொண்டார்.

தங்கப்பன் மாஸ்டரின் வீடு சென்னை தேனாம்பேட்டையில் இருந்தது. காலையில் கம்பெனி கார் போய் அவரை அழைத்து வரும். வரும் வழியில் அதே எல்டாம்ஸ் ரோட்டில் ஒரு சந்தில் குடியிருந்த அந்தப் புதுமுக நடிகையையும் ஏற்றி வருவார்கள். காலையிலிருந்து பகல் உணவு இடைவேளை வரை நடனப் பயிற்சி நடக்கும். மதியம் மாஸ்டர் சாப்பிடப் புறப்படும்போது, இந்தப் புதுமுக நடிகையும் சாப்பிட வீட்டிற்குச் செல்வார். மாஸ்டர் சாப்பிட்டுவிட்டு, கொஞ்ச நேரம் தூங்கிவிட்டு, 4 அல்லது 4.30 மணிக்குத் திரும்ப வரும்போது, அந்தப் பெண்ணையும் அழைத்து வருவார். இரவு 7 அல்லது 8 மணிவரை நடனப் பயிற்சி நடக்கும்.

ஒரு நாள் மதியம் வீட்டிற்குப் புறப்பட்ட மாஸ்டர், தன்னுடன் இந்தப் பெண்ணும் புறப்படுவதைப் பார்த்து, "நான் போயிட்டு நாலு மணிக்கு வர்றவரைக்கும், தாரா சும்மாதானே இருக்கு. அதனால நீ இங்கேயே இரு. நான் போய் இறங்கிக் கொண்டு, திரும்பி வரும்போது டிரைவர் நடராஜன்கிட்ட சொல்லி, உங்க வீட்டுல சாப்பாடு எடுத்துட்டு வரச் சொல்றேன். சாப்பிட்டுட்டு உடனே ரிகர்சல் பண்ணலாம் இல்லையா? எதுக்காக நான் வர்றவரைக்கும் காத்திருக்கணும்?" என்றார்.

அந்தப் பெண் ஏதோ சொல்லத் துடித்தார்; சொல்ல முடியாமல் தடுமாறினார். அதைக் கவனித்த மாஸ்டர், "உனக்கு வீட்டுச் சாப்பாடு வேணும், அவ்வளவுதானே? நானே நடராஜனைவிட்டு எடுத்துட்டு வரச் சொல்றேன். நீ இங்கேயே இரு" என்று காரில் ஏறிப் போய்விட்டார்.

எங்களுக்கெல்லாம் ஹோட்டலில் இருந்து சாப்பாடு வந்திருந்தது. என்றாலும், அந்தப் பெண்ணின் வீட்டிலிருந்து சாப்பாடு வந்துவிடட்டும்; எல்லாரும் சேர்ந்து சாப்பிடலாம் என்று காத்திருந்தோம்.

அந்தப் பெண்ணோ சோர்ந்து போய் ஓர் ஓரத்தில் உட்கார்ந்து சோகத்தில் ஆழ்ந்திருந்தாள். சிறிது நேரத்தில் டிரைவர் நடராஜன், மாஸ்டரை இறக்கிவிட்டுவிட்டு, அந்தப் பெண்ணின் வீட்டிலிருந்து சாப்பாடும் எடுத்து வந்தார்.

எல்லோருக்கும் திகைப்பாக இருந்தது. அவர் கையில் இருந்தது ஒரு அலுமினியச் சட்டி. அதைத்துணியால் சுற்றி, முடிச்சு போட்டு, அந்தத் துணியைத் தூக்கிப் பிடித்து வந்து கொண்டிருந்தார் நடராஜன்.

நாங்கள் அந்தப் பெண்ணை திரும்பிப் பார்த்தோம். அவரது முகம் இருண்டு காணப்பட்டது. "என்ன நடராஜன் இது?" என்று நாங்கள் எல்லோரும் கேட்டோம். "அந்தம்மா வீட்டுல போயி, 'உங்க பொண்ணு சாப்பிட வரல. அதனால சாப்பாடு எடுத்துட்டு வரச்சொன்னாங்க' என்று சொன்னேன். அவங்க வீட்டுல இதுதான் கொடுத்தாங்க." என்று கீழே வைத்தார்.

குழப்பத்தோடு தாரா அந்தத் துணியைப் பிரித்துப் பார்த்தார். அதிலே மூன்று கோதுமை ரொட்டி, ஒரு மண்டை வெல்லத் துண்டு. அந்தப் பெண் அழ ஆரம்பித்துவிட்டாள். தேம்பித் தேம்பி அழுத அவரை எப்படித் தேற்றுவது என்று தெரியாமல், மெதுவாகச் சமாதானப்படுத்தி, "இதுக்காக எல்லாம் வருத்தப்பப்படக்கூடாது. இதவிடப் பெரிய கஷ்டங்களெல்லாம் நாங்கள் அனுபவிச்சிருக்கோம். வாழ்க்கையில இதெல்லாம் சகஜம்மா. நீ எதுக்கு மத்தியானம் வீட்டுக்குப் போகணும். நமக்குத்தான் ஹோட்டலில் இருந்து சாப்பாடு வருதில்ல? எல்லாருமா சேர்ந்து சாப்பிடலாம்." என்று அவரது அழுகையை நிறுத்தி, சாப்பிட வைத்தோம்.

அன்று முதல், அந்தப் பெண்ணுக்கு மதியச் சாப்பாடு எங்களோடுதான்.

**இதுவும் ஒரு நடிகையின் கதைதான்**

(அனுபவங்கள் வரும்)

www.padippakam.com

தமிழ் நாட்டின் முற்போக்கு எழுத்தாளர் ஜெயகாந்தன். அவரது எழுத்துக்கள் உலகப் பிரசித்தமானவை. பலகோடி வாசக நெஞ்சங்களை வசீகரம் செய்தவை.

# 16 கோகிலா என்ன செய்து விட்டாள்?

## ஜெயகாந்தன்

**மு.க. சுருக்கம்**

அனந்தராமன் ஒரு பத்திரிகையாளன். அவனது மனைவி கோகிலா. இருவருக்கும் இடையே மன ஒற்றுமை நிலவவில்லை. இருவருக்கும் இடையேயும் மனஸ்தாபங்கள் ஏற்படுகின்றன. கோகிலாவின் பால்ய நண்பன் அவளை சந்திப்பதும் அனந்தராமனுக்கு பிடிக்கவில்லை. அவனது சந்தேகங்களால் கோகிலா வீட்டைவிட்டு வெளியேறுகிறாள். பின்னர் தற்செயலாக கடைத்தெருவில் சந்திக்கின்றனர். மறுபடி வீட்டுக்கு வருகிறாள் கோகிலா.

இனி...

"இது உங்களுடையதா? இது என்னுடைய கடிதம்" என்று கூறுகையில் அவள் கண்கள் மட்டுமே சிரித்துக் கொண்டிருந்தன.

"கடிதங்கள் எழுதியவர்களுக்கு உரியதல்ல. கவரின் மேலே பார். அது யாருக்கு உரியது என்று எழுதியிருக்கிறது..."

"என்ன, சின்னப் பிள்ளை மாதிரி பிடிவாதம்? அதை ஒண்ணும் நீங்க பார்க்க வேண்டாம்."

அவளது தோற்றமும் அவள் தன்னிடம் எடுத்துக் கொள்ளும் சுதந்திரமும் அவனுக்கு எரிச்சலையே தந்தன. எனினும் தனது பழைய சொரூபத்தைக் காட்டித்



தன்னைத்தானே தரங் குறைத்துக் கொள்ளக்கூடாது என்று பிரக்ஞையோடு அவளைச் சற்றே வெறித்து நோக்கினான்.

'இப்படி ஒரு தோற்றத்தில் இந்த மாதிரி ஒரு புன் சிரிப்புடன் தன்னிடம் இவ்வளவு சொந்தத்தோடு அவள் உறவாட வேண்டுமென்று அவன் எவ்வளவு காலம் காத்துக் கிடந்திருக்கிறான். இப்போது இந்த நிலையில் இது என்ன சாகஸம்!' என்று நினைக்கையில் பல காலம் அண்ணாந்து பார்த்து ஏங்கிக் கிடந்த ஒரு கந்தர்வக் கன்னியின் காதற் பார்வையாகத்தான் இருக்கட்டுமே அது வேண்டாமென்று மனத்தைத் தேற்றித் திடப்படுத்திக் கொண்டபின் அவளே வந்து காலடியில் விழுந்தாலும் அது சுயாபிமானம் மிக்க ஓர் ஆண் மகனுக்கு மேலும் பல மடங்கு துன்பத்தைத்தான் தரும். அப்படி ஒரு மகத்தான சோகத்தை அவன் இப்போது அனுபவித்துக் கொண்டிருந்தான்.

அவன் சொன்னான்:

"அந்தக் கடிதம் என்னைக் காப்பாற்றும். இப்போது நீ இருக்கிறாயே இப்படி ஒரு பொய்யான மனநிலையில் நீ அதை எழுதவில்லை என்று எனக்குத் தெரியும். ஒரு சரியான மனநிலையில் மிகவும் கறாராகச் சிந்தித்து உனக்கும் எனக்கும் இடையே கிடந்த ஒரு பொய்யான பிணைப்பை நீ பிசிறில்லாமல் அந்தக் கடிதத்தின் மூலம் கத்தரித்திருப்பாய் என்று எனக்குத் தெரியும். எனவேதான் அதைப் பிரிக்கவோ படிக்கவோ எனக்கு மனமில்லை. ஆனால் உன்பால் எனக்கிருக்கும் பலஹீனத்தையும் நான் உணர்ந்து பயப்படுகிறேன். உன்னைப் பிரிந்து எங்கோ வெகு தொலைவில் இருக்கும்போது அந்த பலஹீனம் என்னுள் வளர்ந்து என்னை ஆட்டிப் படைக்கும் அளவுக்குப் பலம் பெற்றுவிடலாம். அதன் விளைவாய் உனக்கும் எனக்கும் இடையே பொக்காகிப்போன அந்தப் பொய் உறவைப் புதுப்பித்துக் கொள்ள மானத்தை இழந்து ஓர் அற்பப் புழுவைப் போல் நான் உன்னிடம் ஊர்ந்துவர நேரலாம். அந்த மனநிலையில் இந்தக் கடிதத்தை நான் பிரித்துப் படிப்பேன். அப்போது அப்படிப்பட்ட வீழ்ச்சியிலிருந்து இந்தக் கடிதம் என்னைக் காப்பாற்றும். எனவே அந்தக் கடிதத்தைக் கொடுத்துவிடு!" என்று அவளை நோக்கிக் கையேந்தியவாறு அவன் கேட்டான். இதை அவனிடம் கொடுக்காமல் தவிர்ப்பது எப்படி என்று புரியாமல் அவள் திகைத்து நின்றிருந்தாள்.

இறுதியாகப் பிரிகின்ற நேரத்தில் அவளுக்குத் தான் அதை நினைவுபடுத்தக் கூடாது என்று ஒரு பண்பு கருதி அவன் தயங்கிய போதிலும் வேறு வழியின்றி நிர்தாட்சண்யமாக அவன் அதைச் சொல்ல நேர்ந்தது:

'நீ அடிக்கடி சொல்வாயே- 'உங்களை நான் வெறுக்கிறேன்' என்று- அது பொய்யில்லை என்றால் அந்தக் கடிதத்தைக் கொடுத்து விடு."

அவள் அவனருகே நெருங்கி வந்து அந்தக் கடிதத்தை அவன் முகத்தைக்கூட பார்க்காமல் அவன் கையில் கொடுத்து விட்டு அவனைக் கடந்து போனாள்.

அவன் சொன்னதுபோல்-அவன்மீது தனக்குள்ளவெறுப்பை ஸ்திரப்படுத்த வேண்டுமென்று அதை அவள் அவனிடம் தரவில்லை. அதற்கும் முன்பு அவன் அஞ்சுவதாகச் சொன்னானே ஒரு பலவீனம் குறித்து, அப்படி ஒரு பலவீனத்திற்கு அவனை ஆளாக்கி, மானத்தை இழந்த ஒரு அற்பப் புழுவைப்போல் தன்னருகே அவன் ஊர்ந்து வரத் தான் காரணமாகி விடக் கூடாது என்று அவளும் அஞ்சியதனாலேயே அவள் அந்தக் கடிதத்தை மீண்டும் அவனிடம் தந்தாளென்பதை அவன் புரிந்து கொள்ள முடியுமா, என்ன?

"வீடு பார்க்க வந்தப்பவே 'கொழந்தைகள் எத்தனை?'ன்னு கேட்டனே... எந்த நேரத்திலே கேட்டேனோ? இவள் ஒரு கொழந்தையைப் பெத்து என்கையிலே கொண்டு வந்து தரமாட்டாளான்னு பத்து வருஷமா என்னை ஏங்க வெச்சுட்டா...ம்.. அந்த ஊர் ராசிக்காகவாவது போன பத்தாவது மாசம் எனக்குக் கடிதாசி எழுதணும். எனக்கும் டெல்லி காசி எல்லாம் பார்க்கணும். ஓடிவந்துட மாட்டேனோ" என்று கோகிலாவின் கன்னத்தை வழித்துத் திருஷ்டி கழித்த ஏனோ கண்களில் கண்ணீர் கலங்கத் தனது ஆசையை ஆசிர்வாதமாக வழங்கிக் கொண்டிருந்தாள் வீட்டுக்கார அம்மாள்.

ஐந்தாறு நாட்களாகவே இப்படிப்பட்ட தர்மசங்கடங்களைத் தானும் அவளும் அந்தரங்கமாகச் சந்தித்து உணர்ச்சிது குழம்பி உடனே சமாளித்துச் சலிப்பெய்தியது போதாதென்று இந்த அம்மாளும் வேறு ஆரம்பித்துவிட்டாளா என்று மனத்துள் அலுத்துக் கொண்டே அதைக் காதில் வாங்காமல் மாடிப்படி ஏறிப் போனான் அனந்தராமன்.

சற்று நேரத்திற்கெல்லாம் கோகிலா கையில் வெற்றிலை, பாக்கு, பழம், தேங்காய். ஒரு பட்டு ரவிக்கைத் துண்டு சகிதம் நெற்றியில் வைக்கப்பட்ட அதிக பட்ச குங்குமம், விருந்து சாப்பிட்டு வெற்றிலை போட்ட களைப்பினால் முகமெல்லாம் அரும்பிய வியர்வையில் கரைந்து வழிய தன்னுள் எதை எதையோ எண்ணிச் சிரித்தவாறே முன் ஹாலில் பிரவேசித்தபோது உட்கார நாற்காலியோ கட்டிலோ ஏதுமில்லாமல் ஜன்னல் கட்டை மீது உட்கார்ந்திருக்கும் அவனைப் பார்த்தாள்.

அந்தக் கணம் அவனுக்கு வெளிப்படையாகவே கோபம் வந்தது. எல்லோரும் அவனைத் திட்டமிட்டு வதைப்பது போலிருந்தது அந்த அவளது தோற்றம். 'ஒரு வீட்டுக்குள்ளே நடக்கும் விருந்துக்கு வெறும் நாலு முழவேட்டியோடு நான் போகும்போது ஏதோ ஒப்புக்கு என்னோடு வருகின்ற உனக்கு மட்டும் இவ்வளவு அலங்காரமென்ன? இத்தனை காலமாய் வதைத்தது போதாதென்று இறுதியாய்ப் பிரிகின்ற இப்போது என்னை வதைத்து மகிழ உன் மனசு என்ன இரும்பாலானதா?' என்று ஒரு பார்வையால் அவளைக் கேட்டு விட்டு அவன் வெறுப்புடன் முகம் திருப்பி ஜன்னல் வழியே வெளியே பார்த்தான்.

அந்தப் பார்வையினாலேயோ அந்த முகம் திருப்பலினாலேயோ கொஞ்சம் கூடப் பாதிக்கப்படாதவளாய் மௌனத்தோடு அவள் உள்ளே போனாள்.

நேற்று இரவு அந்தக் கடிதத்தை அவனிடம் கொடுத்து விட்டு நடந்தபோது குடிகொண்ட மௌனம் அவளிடம் அவனைப் பொறுத்தவரையில் நிரந்தரமாகிவிட்டது. 'இனிமேல் அவர்கள் இருவரும் எப்போதுமே பேசிக் கொள்ள மாட்டார்கள்' என்று ஸ்திரம் கொண்ட மௌனம் அது; 'இனிமேல் அவர்களுக்குள் பேசிக்கொள்ள எதுவுமே இல்லை' என்று எல்லை கண்ட மௌனம் அது.

நேற்று இரவு முழுமையும் அவர்கள் இருவருமே விளக்கை அணைக்காமல் தமது அறைகளுக்கு உள்ளே அடைத்துக் தாழிட்ட கதவுகளுக்குப் பின்னால் உறங்க முடியாமல் மட்டுமல்ல: உட்காரவும் முடியாமல் உலவிக் கொண்டிருந்ததைக் கதவிடுக்கின் வழியே தெரிந்த வெளிச்சத்தில் படிந்து விலகிய நிழலுருவங்களை வெவ்வேறு சமயங்களில் கதவைத் திறந்து திறந்து பார்த்து, ஒருவரை ஒருவர் அணுக எண்ணி, வேண்டாமென்று தங்களைத் தாங்களே அவர்கள் கட்டுப்படுத்திக்கொண்ட போதெல்லாம்- ஏதாவது ஒரு சமயம் ஒரு விபத்து மாதிரி ஒரே சமயத்தில் அவர்கள் இருவரும் தத்துமது கதவுகளைத் திறந்து கொள்ள நேர்ந்திருந்தால் ஒரு வேளை அந்த மௌனம் கலைந்திருக்கும்.

அந்தக் கடைசி இரவில்தான் அவர்கள் இருவரும் ஒருவரைப் பற்றி ஒருவர் அநுதாபத்துடன் சிந்தித்தனர்.

'நான் மிகவும் அவசரப்பட்டுவிட்டேனோ' என்று அவள் ஒரு நூறு தடவைக்கு மேல் எண்ணி இருப்பாள். 'இந்தக் கடிதத்தை அவர் ஏன் படிக்கவில்லை? இந்த மூன்று நாட்களாக நீ எங்கிருந்தாய்?' என்று அவர் ஏன் என்னைக் கேட்கவில்லை' என்றெல்லாம் திரும்பத் திரும்ப எண்ணுகையில் இந்தப் பத்து வருஷமாகத் தன்னிடம் தன் கணவன் கேவலமாகவும் கொடுமையாகவும் நடந்து கொண்டதற்கெல்லாம் தான்தான் காரணமோ என்று அவள் சுயபரிசீலனை செய்து கொண்டாள். 'எவ்வளவு பெரிய மனிதனை எனது உறவு எவ்வளவு சிறுமைப்படுத்திவிட்டது. எனது பிரிவே, நான் அவரைப் பிரிந்து விட்டேன் என்ற உணர்த்துதலே அவரை எவ்வளவு நாகரிகப்படுத்தி இருக்கிறது' என்று இந்தச் சில நாட்களில் கௌரவமாக வாழ்ந்த அனுபவம் அவளை உணர வைத்தது.

(கோகிலா.... தொடரும்)

---

**தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர். 24**

# அரங்கம் அந்தரங்கம்

## கவியரசு கண்ணதாசன்

காம இச்சை உடையவர்கள் ஒரு பெண் தனக்குக் கிடைக்கும்போல் தோன்றினால், அவள் யாராக இருந்தாலும் ஆசை வைக்கிறார்கள்.

> இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!
>
> அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.
>
> இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. **ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!**
>
> நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.
>
> இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப் பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.
>
> —கண்ணதாசன்—

இடம் பாராது, நேரம் பாராது காமம் செயற்படும்.

அந்த இரவில் ரங்கநாயகி வீட்டில் என்ன நடந்ததோ, அதுதான் இங்கும் நடந்து கொண்டிருந்தது.

ஆனால் இங்கு நடந்த கதை வேறு.

அன்று மாலை கடமைகள் முடிந்ததும் தான் வருவதாகக் கற்பகத்துக்குக் கமலநாதன் டெலிஃபோன் செய்தார். அவளோ, 'ஓ! வாருங்கள்' என்று கூறி விட்டாள்.

கணவன் இல்லாதபோது தனக்கு டெலிஃபோன் செய்து வருவது பழக்கம் அல்லவே; எப்போதாவது மது வகைகள் வேண்டுமென்றால் டெலிஃபோன் செய்து கார் அனுப்புவார். 'இப்படி வருகிறேன்' என்று சொல்வதில்லையே!

அவர் அதுமட்டுமா சொன்னார்?

'குளித்து விட்டாயா?' என்றும் கேட்டார்.

மாலையில் குளித்து, மல்லிகைப்பூச் சூடிக் கணவனை எதிர்பார்ப்பவள் குடும்பப் பெண். வாடிக்கையை எதிர்பார்ப்பவள், விலைமகள்.

கற்பகம் எதிர்பார்க்கக் கணவன் ஊரில் இல்லை; அவள் விலைமகளும் அலல.

கமலநாதனும் நாராயணசாமியும் பழகிய முறையில் நியாயமாகக் கற்பகத்தைக் கமலநாதன் நினைக்கக் கூடாது.

அவருக்கு அவளிடம் ஆசை இருந்ததே தவிர கிடைக்கமுடியாத பொருள் என்ற எண்ணமும் கூடவே இருந்தது.

ஆனால் ராஜசேகரன் கொலை செய்யப்பட்டது நல்ல பிடிப்பாக அவருக்குக் கிடைத்துவிட்டது.

எவ்வளவோ பேருக்கு விருந்து கொடுத்தும் எச்சரிக்கையாக இருந்து வந்த கற்பகத்துக்கு, கமலநாதனின் டெலிஃபோன் ஒரு அபாய அறிகுறியாகவே இருந்தது.

ஊரிலே 'யோக்கியன்' என்று புகழ்பெற்ற கமலநாதன், லஞ்சம் வாங்கியிருக்கிறார்; உண்மைதான். ஆனால் அதைவிட ஒரு பெரிய குற்றத்தையல்லவா கற்பகம் செய்து இருக்கிறாள்!

ஏதாவது புது விசாரணை ஆரம்பித்து அவனை மாட்டி விடுவதென்றால் அது கமலநாதனால் இயலக்கூடிய காரியமே.

பொலிஸ்காரனின் நட்பும் கூடாது, பகையும்கூடாது; நட்பு பகையாகி விட்டால் அது எங்கே போய் முடியும் என்று சொல்லவும் முடியாது.

கற்பகம் பணம் சேர்ப்பதற்காகவே பல பேரோடு சகஜமாகப் பழகுகிறாளே தவிர, அது இவ்வளவு அவக்கேட்டில் முடியும் என்று அவள் எதிர்பார்த்ததில்லை.

ஆசை மனிதனைக் குற்றவாளியாக்குகிறது. குற்றத்திலிருந்து தப்பித்துக்கொள்ள அவமானப்பட நேரிடுகிறது.

வீட்டில் வேலை பார்த்த ராஜசேகரனே அவ்வளவு மோசமாக நடந்து கொண்டபோது, கமலநாதன் எப்படி நடந்து கொள்வார் என்பதை அவள் யூகிக்க முடியாதா?

தான் விருந்து பரிமாறும் போதெல்லாம் தன்னை ஆசையோடு பார்த்த கண்களை அவள் அறியமாட்டாளா?

அந்த இரவில் என்ன நடக்கப் போகிறதோ என்றே அவள் தடுமாறினாள்.

ஒரே தவறுக்கு இரண்டாம் பதிப்பு வெளியிட முடியாது.

ராஜசேகரனை தீர்த்துக் கட்டியதுபோல் கமலநாதனையும் செய்துவிட முடியாது. செய்தால் இனித் தப்பிக்கவும் முடியாது.

அதற்காக அவள் ஒரு திட்டம் தீட்டினாள்.

நாராயணசாமியிடம் வேலை பார்த்துக் கொண்டிருந்த குமாஸ்தா ஒருவர். பெயர் ராமமூர்த்தி. அவரது ஒரே மகள் கமலா. அவளது பதினாறாவது வயதிலேயே வேறொரு கோர்ட் குமாஸ்தாவுக்கு மணம் முடிக்கப்பட்டாள். 'பால் வடியும் முகம்' என்பார்களே!



அது அவளுக்கே பொருந்தும். மிக அழகாக இருப்பாள்.

கல்யாணம் முடிந்து கணவனோடு இரண்டு வருஷகாலம்தான் வாழ்ந்தாள். அவளது கணவன் ஏற்கனவே ஒரு ஆங்கிலோ இந்தியப் பெண்ணோடு தொடர்புள்ளவன். அதை மறைத்து வைத்துத்தான் அவளைக் கல்யாணம் செய்துகொண்டான். அவர்களுக்கு ஒரு ஆண்குழந்தையும் பிறந்தது.

இரண்டு வருடங்கள் கழித்துத் தனக்கு வெளிநாட்டில் வேலை கிடைத்திருப்பதாக அவன் பாஸ்போர்ட் வாங்கிக்கொண்டு புறப்பட்டான். அதற்குக்கூட நாராயணசாமிதான் உதவி செய்தார். போனவன் அந்த ஆங்கிலோ இந்தியப் பெண்ணையும் அழைத்துக்கொண்டு போயிருக்கிறான் என்பது தெரிய வந்தது.

வருடங்கள் ஐந்தாகியும் அவன் திரும்பவில்லை. இருக்கும்இடமும் தெரியவில்லை.

அந்தக் குடும்பத்துக்கும் கற்பகம்தான் மாதம் ஐநூறு ரூபாய் கொடுத்து வந்தாள்.

இப்போது கமலாவைப் பயன்படுத்திக் கொள்ளக் கற்பகம் விரும்பினாள்.

குமாஸ்தா ராமமூர்த்தியை அழைத்து, "உன் மாப்பிள்ளை போனவன் போனவன்தான். இனி அவன் வரப்போவதில்லை. உன் பேரன் கான்வெண்டில் படித்துக் கொண்டிருக்கிறான். அவனைப் பெரிய அளவுக்கு நான் படிக்க வைக்கிறேன். கமலாவை இங்கே அனுப்பு!" என்றாள்.

கற்பகத்திடம் ஒரு சுபாவம் உண்டு. விளைவுக்குப் பின்னால் அவள் விளக்கம் சொல்வதில்லை. முன்கூட்டியே சொல்லி விடுவாள்.

நம்பிக்கையுள்ள குமாஸ்தா ராமமூர்த்தியிடம் தன் நிலைமை முழுவதையும் விவரித்தாள். ஒரு இலட்சம் ரூபாய் அவர் கையில் கொடுத்தாள். 'கமலாவுக்கு எந்த ஆபத்தும் வராது.' என்று வாக்குறுதியளித்தாள்.

'மானம் போனால் பணம் மிஞ்ச வேண்டும். பணம் போனால் மானம் மிஞ்ச வேண்டும்- தலைமுறைக்குப் பணம் வந்துவிட்டது. பெண்ணுக்கோ வாழ்வில்லை.

பெரிய இடங்களே இப்படித்தான் இருக்கின்றன. இதில் என்ன தவறு?' என்று கருதிய ராமமூர்த்தி, பணத்தைப் பெற்றுக் கொண்டு வீட்டுக்குப் போய் மகளிடம் கூறினார்.

(அந்தரங்கம் வரும்)

www.padippakam.com

மானமுத சோலையிலே
மரவண்டமுது வாரது போல்
நின்றழுதேன் கண்ணே;
உன் நினைவு வந்த
நேரமெல்லாம்.....!

‘அன்றைய’ நாளை நினைக்கும் போதெல்லாம் உயிருக்குள் யாரோ தீயைக் கருக்கி விட்டாற் போல் ஒரு துடிப்பு, வேதனை.

ராசாத்தி அப்படிச் செய்வாள் என்று யார்தான் நினைத்தார்கள்? கடைசியாக அவள் அழுது, என் மடியில் விழுந்த கண்ணீர் துளியின் ஈரம், ஞாபகத்தை விட்டு இன்னும் உலரவில்லை.

ஐந்து வருடங்களுக்கு முன்பே, ராசாத்தியும் நானும் ஒருத்தரையொருத்தர் நேசிக்கத் தொடங்கிவிட்டோம். ஆனாலும், மனசுக்குள் கிடந்த காதலை இருவரும் சொல்லிக் கொண்டது மூன்று வருடங்களுக்கு முன்புதான். அதிலும் ராசாத்திதான் முந்திக் கொண்டாள். அவள்தான் காதலை முதலில்



யூயெல் மப்ராக்

# ராசாத்தி

சொன்னாள்.

வீட்டுக்குத் தெரியாமல்தான் காதலித்தோம். எனக்கென்றால் பிரச்சனைகளென்று பெரிதாக இல்லை. ஆனால், அவள் வீட்டுக்குத் தெரிந்தால், கொன்றே விடுவார்கள்.

ராசாத்தி வீட்டுக்கு இரண்டாவது பிள்ளை. கடைசிப் பிள்ளையும் அவள்தான். பள்ளிக்கூட நாட்களில்தான் முதன் முதலாக ராசாத்தியைக் காணக்கிடைத்தது. நன்றாக உடுப்பாள், பெரிதாக அலங்காரங்களில்லை. மனசுக்கு ஏனோ ராசாத்தியைப் பிடித்துவிட்டது. ராசாத்தி என்பதுகூட அவளுக்கு நான் வைத்த செல்லப் பெயர்தான். பார்த்துக் கொண்டேயிருக்கலாம் போல் அப்படி ஓர் அழகு என் ராசாத்தி!

‘அன்றைய’ தினத்துக்கு இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பாகவும் ராசாத்தி ஒரு கடிதம் எழுதியிருந்தாள். படித்ததும் அழுதுவிட்டேன். கடிதம் நனையும்வரை அழுதேன். அன்வர்தான் அன்று அருகிலிருந்தான்; அவன்தான் ஒருவாறு என்னைத் தேற்றினான். இல்லாவிட்டால், ராசாத்தியை நான் முந்தியிருக்கவும் கூடும்.

வீட்டில் திருமணத்துக்கு ஏற்பாடுகள் நடப்பதாகவும், தன்னால் எதிர்த்துப் பேச முடியவில்லை என்றும் வரிக்கு வரி அழுதிருந்தாள். எதிர்த்தால்: அடி, உதை, சித்திரவதை. அதற்காக இப்படியா ராசாத்தி?

“நான் இருக்கும் வரை கவலை வேண்டாம்” என்பாயே இதற்குத்தானா பெண்ணே?

நீயிருந்தபோது, திருட்டுச் சந்திப்புகளுக்கு இடையிலும்கூட. நான் அழுவதற்கு தோள் தருவாயே... பெரிய மனுஷி மாதிரி என் தலை அளைந்து ஆறுதல் சொல்வாயே...

இப்போது மட்டும் எங்கு போனாய் ராசாத்தி?

விழிகளிரண்டும் அழுகிப் போகும் வரையில் அழுகிறேனே... பாரு, ஆறுதல் கூற எனக்கென்று ஒரு சித்தெறும்பு கூட இல்லையே கண்மணி!

இறுதியாக வீட்டில், வற்புறுத்தலாக வேறு திருமணம் பேசி முடிக்கத் தீர்மானித்த போது; அழுது புலம்பி, எதிர்ப்புக் காட்டிய பின்னும்... விஷத்தைத் தவிர, அப்போ- உனக்கு வேறு வழிகள் தெரியவில்லையா ராசாத்தி?

வைத்தியர்கள் நிறையவே முயற்சி செய்தார்கள். முடியவேயில்லை!

என் ராசாத்தி இறந்து போய் விட்டாள்!!

இன்றுடன் ஒரு வருடம்; புதைத்த இடத்துக்கும் இதுவரை போகவில்லை. போகுமளவுக்கு வலிமை, என் மனதுக்கும் இல்லை. பார்த்தவர்கள்தான் அங்கு புல் முளைத்திருப்பதாகச் சொன்னார்கள்.

நேற்றிரவு கூட ராசாத்தி கனவில் வந்தாள். எப்போது வருவதெனக் கேட்டாள். முத்தமிட்டாள், கையசைத்தாள், தேம்பித் தேம்பி அழுதாள். பின்,மீண்டும் ஒரு தடவை ஞாபகமாய்க் கேட்டாள்: “எப்ப வருவீங்க?” ப்ளீஸ் நீங்களாவது சொல்லுங்கள்;!

என் ராசாத்தியை நான் சந்திப்பேனா?

---

அந்த நகரத்தில் உள்ள வீடுகள் அனைத்தும் அப்பிக் கிடந்த இருளில் உறங்கிக் கிடந்தன. பென்ஷனியர் பத்மநாபன் சாக்குக் கட்டிலில் நீட்டி நிமிர்ந்து மரக்கட்டை போல் கிடந்தார்.

தூங்கினால் துக்கம் கரைந்து விடும் என்ற அவர் நினைப்புப் பொய்யாகிப் போனது. ‘எப்போது யுத்தம் ஓய்ந்து மனிதன் நிம்மதியாய் வாழ்வது? ஒரு நாளைக்கு எத்தனை முறைதான் பயத்தில் சாவது? சிவசிவா இதுக்கொரு முடிவில்லையா?’ என்று தனக்குள் கதைபேசிய பத்மநாபன் பெரிதாய் வாய் திறந்து கொட்டாவி விட்டார்.

அவர் மனைவி அமராவதி வாடிய சருகாய் கற்பன் பாயில் சுருண்டு கிடந்தாள். வயசு ஐம்பதானாலும் எழுபதைத் தாண்டிய தோற்றம் அவளுக்கு. அவள் கட்டியிருந்த சேலையில் இருந்த கண்ணறைகள் இருளுக்குள் மூடிக்கிடந்தன.

பத்மநாபனுக்கும் அமராவதிக்கும் பத்தாண்டுகளுக்குப் பிறகு புத்திரனாய்ப் பிறந்தவன் சுகந்தன். சுவர் ஓரமாய்க் கிடந்த கட்டிலில் உறக்கத்தில் ஆழ்ந்து கிடந்தான் அவன். அவனுடைய ஏ.எல். நோட்சுகள் தலைமாட்டில் வாய்திறந்து கிடந்தன.

சுகந்தனுடைய தோற்றத்தை நினைத்ததும் பத்மநாபனின் மனம் பயத்தில் ஆடியது. அவனுடைய வளர்ச்சி அவருக்கு மகிழ்ச்சியைத் தரவில்லை. நாட்டு நடப்புகள் அவர் கண் முன் தோன்றியபோது, நாய்களின் ஓலம் அவர் காதில் நாராசமாய்க் கேட்டது. இது அவருக்கு படைகளின் நடமாட்டத்தை ஊர்ஜிதம் செய்தது.

பத்மநாபன் மெதுவாக எழுந்து “அமராவதி அமராவதி எழும்பு. ஆமி வாறாப்பில கிடக்கு!” அடித் தொண்டையில் இரகசியமாகக் குரல் கொடுத்தார். அவள் துடித்துப் பதைத்து எழும்பித் தலைமாட்டில் இருந்த குப்பி லாம்பைக் கொழுத்தினாள். மெல்லிய வெளிச்சம் அந்த அறை எங்கும் பரவியது. பத்மநாபன் அமராவதி இருவரின் பார்வையும் சுகந்தனில் மொய்த்தது. “ஐடென்ரிய எங்கப்பா வச்சியள்?” அமராவதி கேட்டாள். பத்மநாபனுக்குப் பகீரென்றது. தலையணைக் கடியில் துழாவினார்.

“ஐடென்ரியக் காணேல்லியே!” அவர் குரல் நடுங்கியது.

“என்னப்பா பென்ஷனெடுக்கப் போனியள் உங்கட சேட்டுப் பையிக்க பாருங்கவன்.”

பத்மநாபன் கொடியில் கிடந்த சேட்டுப் பையுள் கைவைத்தபோது ஐடென்ரி கிடைத்த மகிழ்ச்சி அவர் முகத்தில் பரவியது. சப்பாத்துக்களின் சத்தம் துல்லியமாகக் கேட்டு பத்மநாபனின் வாசலில் வந்து ஓய்ந்தது.

அமராவதியின் நெஞ்சு பட படத்தது. சுகந்தனைத் தட்டி எழுப்பினாள். அவன் நோட்சுகளைக் கையில் எடுத்துத் தூக்கக் கலக்கத்தில் எதையோ முணுமுணுத்தான்.

தடதடவென்று வாசல் கதவு சத்தமிட்டு நடுங்கியது. பத்மநாபன் தொண்டையைச் செருமிக்கொண்டு, கதவைத் திறந்தார். நாலைந்து படையினர் திமு திமுவென்று உள்ளே நுழைந்தார்கள். அந்தச் சிறிய வீட்டைப் பார்வையால் குடைந்தார்கள்.

சுகந்தனில் அவர்கள் கண்கள் நிலை குத்தியதைக் கண்ட அமராவதியும், பத்மநாபனும் பயத்தால் ஒருவரை ஒருவர் பரிதாபமாகப் பார்த்தார்கள்.

“இவண் யாரு?” கொச்சைத் தமிழில் ஒரு கேள்வி பிறந்தது.

“எங்கட மகன்!” பத்மநாபனின் நாக்குளறியது.

“எள்ளாரும் அந்தப் பக்கம் போங்க!” அதிகாரமாக ஆணையிட்டது படை.

# வைத்ததும் எடுத்ததும்...

பத்மநாபனும் அமராவதியும் சுகந்தனை அணைத்துக்கொண்டு ஒரு மூலையில் ஒதுங்கி நின்றனர். அவர்கள் இதயம் மிக வேகமாகத் துடித்தது.

அமராவதி வேண்டாத தெய்வமில்லை. சுகந்தனுக்கு எதுவும் நேர்ந்து விடக்கூடாது என்று கதிர்காமக் கந்தனுக்கு நேர்த்தியும் வைத்தாள். படையினர் முழு வீட்டையும் சல்லடை போட்டனர். பெட்டி சட்டி சீலை சட்டை அனைத்தையும் உருட்டிப் புரட்டினர். அலுமாரியில் அடுக்கியிருந்த உடுபுடவைகளும் அல்லோல கல்லோலப்பட்டன.

கடைசியில் பத்மநாபனின் மேசை லாச்சியை திறந்தது ஒரு பெரிசு. கையைவிட்டு எதையோ செய்தது. ஆணவத்துடன் கூச்சலிட்டது. சுகந்தனின் சேட்டைப் பிடித்து இழுத்து வந்து “லாச்சியினுள் பார்!” என்றது

அந்த லாச்சினுள் இரண்டு கிறனைட். அருகில் நின்ற ஒரு படை “இந்த கிறனைட் எப்பிடி வந்தது?” என்று உறுமினான். சுகந்தன் அதிர்ச்சியில் உறைந்து போனான்.

கிறனைட் பற்றி அறிந்தவன் சுகந்தன். ஆனால் அதை அவன் கண்டதில்லை. அவன் உடம்பு மழையில் நனைந்த கோழிக் குஞ்சாய் வெடவெடத்தது.

பத்மநாபன் துணிச்சலை வரவழைத்துக்கொண்டு லாச்சியைப் பார்த்தார். ஒரு சோடி கிறனைட்டுக்கள் அவரைப் பயமுறுத்தின. இது எப்பிடி வந்தது என்று படையினர் உரக்கக் கத்திக் கேட்டதையே பத்மநாபன் தனக்குள் கேட்டார். அமராவதி அவர்களிடம் கைகூப்பிக் கதறினாள்.

“ஐயா இது நாங்கள் வைக்கேல்ல. இது எப்பிடி லாச்சிக்க வந்ததெண்டு தெரியல்ல.”

“இவன் வச்சிருப்பான்!” சுகந்தனைச் சுட்டியது பெரிசு. “ஐயா அவன் படிக்கிற பிள்ள. இந்த மாதம் ஏ.எல். சோதின எழுதறான். இப்பிடியெல்லாம் செய்யமாட்டான்!” அமராவதி சொல்லிவிட்டு ஓவென்று அழுதாள்.



ரூபராணி

“நான் மாஸ்டராயிருந்து றிட்டயரானவன். மரியாதையான குடும்பம்!” பத்மநாபன் கண்களில் நீர் கசிந்தது.

“ஐயா லாச்சிக்க இது எப்பிடி வந்ததெண்டு எனக்குத் தெரியா. சத்தியமா நான் வைக்கேல்ல.” சுகந்தன் அந்தப் பெரிசின் காலைப் பிடித்து அழுதான்.

“எங்களுக்குத் தெரியா. விசாரணை செய்ய வேணும்!” சொல்லிவிட்டுச் சுகந்தனைத் தள்ளிக்கொண்டு போனார்கள்.

அமராவதி ஒப்பாரிவைத்து அழுது அப்படியே மயங்கிப்போனாள். பத்மநாபன் நடைப்பிணமாய் எழுந்து சென்று மேசை லாச்சியைப் பார்த்தார். அவர் காலையில் வைத்த பென்ஷன் காசு காணாமல் போயிருந்தது.

---

மாம்பூக்கள் ஒருவித வாசனையை வீசிக்கொண்டிருந்தன. காற்று மெல்ல தழுவலாக வீசியது. வசந்தகாலம் வாசனைகளைத் தேடிக் கொண்டிருந்தது.

சின்னக் குருவியொன்று இங்குமங்கும் பறந்து, பறந்து பதிந்தது கொப்பொன்றில். எதற்கு இப்படி அங்கலாய்க்கிறதென்று குறு, குறு வென்று பார்த்துக் கொண்டிருந்தது பூங்குயிலொன்று.

தன் மெல்லிய சொண்டால் மரநாரை யுரித்து சின்னச் சின்ன நாராக அலகில் கொழுவிய குருவி அங்குமிங்கும் திரும்பி சின்ன மணிக் கண்ணால் பார்த்தது.

# குயில்!



ஜெ.சூரியன்

‘குக்கூ.கூ.’வென்று மிக, மிக இனிமையாக குரலெடுத்துக் கூவியழைத்தது குயில். அருகே வந்த குருவி நட்புடன் சின்னஞ்சிறு இறக்கைகளை மேலெடுத்து விரித்து வாலை அசைத்து வணக்கமென ஜாடையில் சொன்னது.

“ஆமா. என்ன்தானப்படி ஓடியோடிப் பார்க்கிறாய்?” என்றது குயில் ஆவலாக.

“வந்து..வந்து என் மனைவி கர்ப்பமுண்டாகியிருக்கிறாள். பிரசவ நேரம். வீடொன்று வேணும். அதுக்குத்தான் இடம் பார்க்கிறேன்.” அலகிலிருந்த நார்த்தும்புகளை காலினிடையே வைத்துவிட்டு பெருமையுடன் சொன்னது குருவி.

“ஓ!” என்றது இளக்காரமாக குயில்.

“கூடு கட்டி நமக்கென்று ஓரிடம் தேடுவது உனக்கு இளப்பமா?” என்றது குருவி கோபம் துளிர்க்க.

“இல்லை வீணலைச்சல். பாடு, நோவு, எதுக்கு? நாமும் தலைமுறை தலைமுறையாக வாழுறம். சந்ததி பெருகவில்லையா? வாழவில்லையா? கூடு தேடுகிறமா?” என்றது குயில், ஏதோ சாதனை புரிந்துவிட்ட இறுமாப்பு வார்த்தையில் தவழ.

“வேண்டாம். அடுத்தவன் நெருப்பில் குளிர்காய எனக்கு விருப்பமில்லை. தனியாக எமக்கு, எமக்கேயென்றொரு சிறு இடமிருந்தாலும் போதும். வாழும்வரை சுதந்திரமாக வாழ்வதுதான் பெருமை. இனிமை. பாதுகாப்பு எல்லாம்!” என்றபடி காலிடையே வைத்திருந்த தும்புகளைக் கொத்தியது. மறுவிநாடி ஜிவ் வென்று உச்சிக் கிளையை நாடிப் போனது.

சில நாட்கள் கழிந்தன.

“கூ...கூ..கூ...” என்று ஒற்றைக் குயிலின் கூவல் கேட்டது. அதன் சோகம் குருவியின் காதுகளில் விழுந்தது. பூக்களில் தேனெடுக்க முயன்று கொண்டிருந்ததை நிறுத்திவிட்டு குயிலினருகில் வந்தமர்ந்தது.

திரும்பிய குயிலின் விழிகளில் சோகம் விரவியிருந்தது. பார்க்க பாவமென்றிருந்தது. “ஏன்? என்ன நடந்தது?” என்றது குருவி இரக்கத்துடன்.

“என்னவென்று சொல்ல, நமது முன்னோர்கள் மற்றவர்களின் தயவில் வாழ்ந்து பழக்கப்பட்டுப் போனதில் நாமும் அதையே கடைப்பிடித்ததால் நமக்கென்று சொந்த வீடமைக்கத் தெரியாதவர்களாக தோன்றிவிட்டோம். அதுவே சாபமாக நிலைத்துப் போனது. அதன் பலன் அதோபார்!” என்றது வேதனையுடன். சற்றுத் தள்ளியிருந்த பலாமரத்திலிருந்த காகத்தின் கூட்டில் பெருத்த கலாட்டா நடந்து கொண்டிருந்தது தெரிந்தது.

“கா.கா”வென்று கரகரத்த குரலொலிகளுக்கிடையே ஈனஸ்வரத்திலொரு குரல் “கூ.கூ.” வென்று குரல் கொடுத்தது. குருவிக்குப் புரிந்தது. குயிலின் குஞ்சு அங்கே அடைகாக்கப்பட்டு, குரலெடுக்கும்போது கண்டுபிடிக்கப்பட்டதும் தண்டனை கிடைக்கிறது. இனச்சண்டைதான் அது என்பதும் புரிந்தது.

“இதுக்குத்தான் நமக்கென்று ஓர் இடம். அது சின்னதாக இருந்தாலும் நம்முடையதென்கிற உணர்வு தரும் தெம்பு எவருக்கும் பயமின்றி, அடிமையின்றி சுதந்திரமாக வாழவைக்கும். அதற்கு இனியாவது முயன்று பார்.” என்ற வண்ணம் குருவி தேனெடுக்கப் பறந்து போனது.

அதை ஏக்கமாகப் பார்த்துக் கொண்டிருந்தது குயில்

---

தபாற்காரனின் வருகையில்; ஏக்கம் தேங்கிய அந்தக் கண்களிரண்டில் எதிர்பார்ப்புப் படர்ந்தது. அந்தக் கண்களுக்குரியவள் ராசாத்தி எனும் வயோதிப மாது.

வாய்க்கும் வயிற்றுக்கும் போராடும் ஒரு வறுமைக் குடும்பத்தின் அம்மா ஸ்தானத்தில் பல வருடங்கள் அலைக்கழித்து, விதவையாகி, இருந்த ஒரேயொரு மகனும் எங்கோ

# சுமை



கனி

ஓடிப்போய்விட, இந்த வயோதிப மடத்துக்கு சமையற்காரியாக வந்து சேர்ந்தாள் ராசாத்தி.

அவள் இந்த மடத்துக்குள் நுழைந்த முதல்நாள் வயது முதிர்ந்த குழந்தைகளைக் கண்டாள். குழந்தைகளைச் சுமந்து அவர்களுக்கே சுமையாகிப் போன தாய்மாரைக் கண்டாள். உறவினர்களால் ஒதுக்கித் தள்ளப்பட்ட அநாதைகளைக் கண்டாள். யாருமில்லாமல் தவித்து ஓர் அரவணைப்புக்குள் வந்துவிட்ட ஆறுதல் குடியிருக்கும் சில அமைதியான முகங்களைக் கண்டாள்.

இந்த மடத்துக்குள்தான் எத்தனை வேறுபாடுகள். முகவரி ஒன்றானாலும் உள்ளடக்கம் வேறு வேறாய் கலந்து சேர்ந்த காகிதங்களாய் அந்த வயோதிபர்கள்.

ராசாத்தி இங்கு வந்து சேர்ந்த பத்து வருடத்துக்குள் எத்தனையோ வயோதிபர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். பலர் இந்த உலகத்தின் கணக்கிலிருந்து கழிக்கப்பட்டார்கள். காலம் ராசாத்தியையும் முதுமைக்குள் தள்ளியது. அந்த மடத்துக்குப் புதிதாய் வந்து சேர்ந்த ஒருவர் மூலம் ராசாத்தியின் மகன் வசதியாக வாழ்வதாக அறிந்து, அவளுடைய மனம் ஆனந்த மழையில் நனைந்தது.

முகவரியைத் தெரிந்துகொண்டு அஞ்சலிட்டிருந்தாள் மகனுக்கு.

தன்னை மரணம் அழைப்பதற்கிடையில் மகனைக் கண்டுவிட வேண்டுமென்று அந்த வயோதிப மனம் தவியாய்த் தவித்தது.

மகனிடமிருந்து கடிதம் வந்திருக்கிறதென்று மடத்தின் சேவகி ஒருவர் ராசாத்திக்குப் படித்துக் காட்டினாள்.

‘அம்மா! நான் ஒரு பணக்காரப் பெண்ணை மணந்துகொண்டு வசதியாக வாழ்வது உண்மைதான். ஆனால் நான் வயோதிப மடத்துக்கு உங்களைப் பார்க்க வருவதோ, அம்மா என்று என் மனைவிக்கு உங்களை அறிமுகப்படுத்துவதோ முடியாத காரியம். அவற்றை என் மனைவி விரும்பமாட்டாள்....’

இந்த வாக்கியங்களுக்குப் பின்னர் சேவகி படித்துக் காட்டிய எந்த வாக்கியமும் ராசாத்தியின் காதுகளில் விழவில்லை. பிள்ளைப் பாசத்தின் சுமை அந்த முதுமைத் தாயை அழுத்தத் தொடங்க கண்கள் மெல்ல மூடிக்கொள்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com

# இலக்கிய நயம்

# மாலை வதை

தருவது ரசிகன்



சுவாசம்
நின்றுவிடலாம்! -உன்
சகவாசம்
நின்று போகுமோ?

காதல் என்பதன்
மறுபெயர்
சோகம் தானா?

காதலித்த நாள் முதல்
கவலையில்தானடி
காலூன்றி நிற்கிறேன்!

நீ வருவாயா என
கவலை!

வந்துவிட்டாய் எனில்,
செல்லப்போகிறாயே
என்று சோகம்!

நீ புன்னகைக்கும்போது
இந்தப் புன்னகையை
இன்னும் சில மணிநேரத்தில்
கண்காணாது போகுமே
என்று கவலை!

நீ பேசும் போதும்
எனக்குள் வீசும் சோகம்!

உன் உதடுகள்
உதிர்க்கும் சொற்களும்
நீ விடைபெறும்போது
ஒளிந்து கொள்ளுமே
என்றுதான் சோகம்!

விடை பெறும்போது
எடை சொல்ல முடியாத
இதய பாரம்!

உன் உருவம்
மறையும்வரை
கண்கள் இமைக்காது!

மறுபடி எப்போது
உன் திருவடி
என் திசை வரும்?

காத்திருக்கும்
ஒவ்வொரு மணித்துளியிலும்
இதயத்திலிருந்து
சோகம் சொட்டும்!

ஆமாம்! கண்மணி
காதலின்
மறுபெயர் சோகம்தான்!

கண்ணுக்குள்
பொத்தி வைத்து,
நெஞ்சுக்குள்
நிறுத்தி வைத்து,
மண்ணுக்குள் போகும்வரை
மறவாது இருப்பதுவே
காதல்!

மண்ணுக்குள் போகும்வரை
கண்ணுக்குள் ஈரம்
காதலில் சகஜம்!

சுவாசிக்கும் வரை
நேசிக்கப்படும்
வாசகம் காதல்!

சுவாசமாய் எனக்குள்
இருப்பவளே நீதான்!

உயிருக்குள் உயிராக
உயிர்வாழும் உயிரே!
துயருக்குள் துரும்பாக
தூக்கி ஏன் எறிந்தாய்?

உன் இதழ்கள்
கொடுத்த கப்பம்
முத்தம்!

உன் ஸ்பரிசம்
கொடுத்த கப்பம்
சொர்க்கம்!

கப்பம் கட்டமறுத்து
தப்பித்தா போனாய்?

நீ இல்லாத தினங்களில்
நான் தீக்குளிக்கிறேன்!

நீ வராத நாட்களில்
நான் தீய்ந்து போகிறேன்!

கண்களால் என்னை
கௌரவித்தாய்!

கனிமிதழ்களால் என்னை
கசிய வைத்தாய்!

தேன் சொரியும்
செவ்விதழ் உண்டு
நான் சரிந்தேனடி
சொர்க்கத்தின்மீது!

பக்கத்தில் நீயிருந்தால்
திக்கெல்லாம் தித்திக்கும்!

வெட்கத்தில் நீ சிவக்க
மோகத்தில் நான் வீழ்வேன்.

மஞ்சமே களமாகும்
நெஞ்சமே களிப்பாகும்!

வஞ்சமும் இல்லை-அன்புக்கு
பஞ்சமும் இல்லை!
கோல மயிலே நீதானே
கொஞ்சும் குழந்தை எனக்கு!

கொஞ்சிய உதடுகளை
வஞ்சியே ஏன் மறந்தாய்?

தாங்கிய நெஞ்சத்தை
தவிக்க ஏன் வைத்தாய்?

உன் பாரம் தாங்காது
மஞ்சமும் அழுகிறது!

உன் பாதம் தாங்காது
மண்ணும் அழுகிறது!

உன் முகம் காணாது
மொட்டும் அவிழாதிருக்கிறது!

உன் வரவு இல்லையானால்
உறவெல்லாம் கசக்கிறது.
சுற்றமெல்லாம் சோர்கிறது!

வற்றாத நதிபோல
முற்றாத வான்போல
எல்லையில்லா அன்புக்கு
நான் மட்டும் தொல்லையோ?

குற்றமென்ன சொல்லிவிடு
குற்றுயிராய் கிடக்கிறேன்!
மூச்சு நிற்பதற்கு முன்னர்
வீச்சாய் வந்து கூறிவிடு!

மாலைப் பொழுதெல்லாம்
உன் வரவால்
கோலப் பொழுதாயின!

நிலா வருவதற்கு முன்பே
நீ உலா வருவதை
என் கண்கள்
விழாவாகக் கொண்டாடின!

சூரியனைக் கண்டுதான்
செந்தாமரை மலரும்!

உன் முகத்தாமரை
சூரியன் போனபின்னர்தான்
என் முன்னால் மலரும்!

உன் சூரியன்
நான்தானே!
என்று கர்வப்பட்டிருக்கிறேன்!

அதே மாலை
இன்று எரிக்கிறது!

மேய்ப்பனின் புல்லாங்குழல்
மாய்ப்பது போல ஒலிக்கிறது!

பறவைகளின் குரல்கள்
பறையொலியாய் கேட்கிறது!

பொழுது மயங்கும்
மாலையில்
ஊரும் மயங்கும்!

ஊரும் மயங்கும்
மாலையில்
நாமும் மயங்கினோம்!

இப்போது
ஒற்றைக் குயிலாக
நான் மட்டும்!

அச்சாணி இல்லாத
தேராக
நான் மட்டும்!

நீரில்லாத
ஆறாக
நான் மட்டும்!

நீறில்லாத
நெற்றியாக
நான் மட்டும்!

கனியில்லாத
மரமாக
நான் மட்டும்!

தனித்திருக்கும்
என்னை
தாவிவரும்-இந்த
மாலைப்பொழுதும்
வாட்டி வதைக்கிறது!

நேற்று வந்த
அதே மாலைப்பொழுதுதான்!
ஆனால் நேற்றிருந்தது
நானல்ல-நாம்!
இன்றிருப்பதோ
நீயில்லாத 'நான்' மட்டும்!

அதுதான்-அதனால்தான்
அறிவை மயக்கும் மாலை
ஆளையும் வதைக்கிறது!
ஆட்டியும் படைக்கிறது!

"பதி மருண்டு பைதல் உழக்கும்
-மதி மருண்டு
மாலை படர்தரும் போழ்து"

அதிகாரம்: 123 குறள்: 1229

# சிந்தியா பதில்கள்

➾ அரசாங்கத்தின் அதிகாரப் பரவலாக்கல் முயற்சியை ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகள் வரவேற்றுள்ளன என்று செய்தி போடுகிறார்கள்? எங்கே முயற்சி நடக்கிறது?

ஆர். பேரின்பநாதன், கொழும்பு-09.

முயற்சி நடப்பதாக உலகை நம்பவைத்துள்ளது அரசாங்கம்! அதனை ஆதாரத்தோடு மறுக்க வேண்டிய தமிழ்க் கட்சிகள் மௌனமாக இருக்கின்றன!

➾ சிந்தியா! இடைக்கால நிர்வாக சபை ஒன்று வடக்கு-கிழக்கில் வரப்போவதாக கூறப்படுகிறதே உண்மையா?

பி. திருச்சந்திரன், தெகிவளை.

வடக்கு-கிழக்கு இணைப்பை அங்கீகரிக்கக்கூடாது என்பதாலும், அங்கு படை ஆளுமைக்கு இடையூறு நேரக்கூடாது என்பதாலுமே அங்கு மாகாணசபைத் தேர்தலையே அரசு நடத்தவில்லை. இப்படி இருக்க அதிகாரமுள்ள சபை ஒன்றை ஒருபோதும் அரசாங்கம் அங்கு அமைக்காது! வேண்டுமானால் முன்னர் அமைச்சர் அஷ்ரப் தலைமையில் நியமித்தது போல அதிகாரமில்லாத குழு ஒன்றை நிறுவி வேடிக்கை காட்டலாம்.

➾ போரின் கொடுமையை புத்திஜீவிகள் உணர்கிறார்களில்லை என்று நீதியமைச்சர் கூறியுள்ளாரே?

எம். பெரோஸ், மட்டக்களப்பு.

பேராசிரியர் பீரிஸ் அவர்களும் ஒரு புத்திஜீவி என்பதுதான் எனது தாழ்மையான எண்ணம்!

➾ 'அலைபாயுதே' மாதவனின் அட்டகாசமான படங்கள் தமிழக சினிமா இதழ்களில்கூட இன்று வரை வெளியாகவில்லை. முரசில் மட்டும் எப்படி?

இ. காந்தன், வவுனியா.

அதுதான் முரசு! கமலின் 'அவ்வை சண்முகி' படம்கூட முரசில்தான் முதலில் வெளியானது. அதுபற்றி கமல் விசாரணையே நடத்தியிருந்தார்.

➾ இந்திய சுதந்திர தினத்துக்கு வந்துள்ள படங்களில் உங்களைக் கவர்ந்த படம் எது?

கோ. அன்பரசி, கொழும்பு-15.

'அமர்க்களம்', 'கண்ணோடு காண்பதெல்லாம்', 'நீ வருவாய் என' ஆகிய படங்கள் வந்துள்ளன. இங்கு வீடியோ கொப்பிகள் வந்து சேர்ந்ததும் பார்த்துவிட்டு கூறுகிறேன்.

➾ தலை முடியை பிய்க்கக்கூடிய தமாஷ் ஒன்று கூறுங்களேன்?

செல்வி இ. ரஞ்சிதா, காரைதீவு.

'லொஜிக்' என்றால் என்னவென்று ஆசிரியர் மாணவர்களுக்கு விளக்கிக் கொண்டிருந்தார்.

"Aயும் Bயும் Cயும் சமம். அதனால் Aயும் Cயும் சமம் புரிகிறதா?" என்று கேட்டார்.

உடனே ஒரு மாணவனை எழுந்திருக்கச் சொன்னார் ஆசிரியர். "நீ ஓர் உதாரணம் கூறு பார்க்கலாம்!" என்றார்.

உடனே அந்த மாணவன் கூறினான்: "நான் உங்களை விரும்புகிறேன். நீங்கள் உங்கள் மகளை விரும்புகிறீர்கள். அதனால் நான் உங்கள் மகளையும் விரும்புகிறேன்."

ஆசிரியர் முகத்தில் ஈயாடவில்லை.

➾ எல்லை இல்லாதது எது?

எம். முஹமட், கற்பிட்டி.

ஆசை!

"தூங்கி எழுந்திருக்கும்போது ஆளுக்கு ஒரு கோடி ரூபாய் கிடைத்தால் என்ன செய்வீர்கள்?" என்று மூன்று நண்பர்களிடம் கேட்டார்கள்.

"நான் உலகம் சுற்றிப் பார்ப்பேன்!" என்றான் ஒருவன். "நான் பெரிய வீடும் காரும் வாங்குவேன்!" என்றான் இன்னொருவன். மூன்றாவது நண்பன் சொன்னான், "நான் தூங்கப் போய்விடுவேன்!"

"என்ன மீண்டும் தூங்கப் போவாயா? ஏனப்பா?" என்று கேட்டனர்.

அவன் சொன்னான்: "எழுந்திருக்கும் போது இன்னொரு கோடி ரூபாய் கிடைக்குமே!"

➾ சிந்தியா! வடக்கு-கிழக்கில் தேர்தலை நடத்தக் கோருவது உயிர் பலிகளுக்கு இடமளிக்கும். அதனை அரசு விரும்பாது என்று கூறியுள்ளாரே அமைச்சர் அலவி?

மா. கோடீஸ்வரன், மட்டக்களப்பு.

தமது கூட்டாளிகளான தமிழ்க் கட்சிகளைப் பொறுப்பில்லாத கட்சிகள் என்று கூறிவிட்டாரே! அதுசரி, அடுத்த பாராளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் என்பவற்றை வடக்கு-கிழக்கில் நடத்தத்தானே போகிறார்கள். அப்போது இந்த நியாயம் பொருந்தாதே!

➾ பாரதிராஜாவின் 'தாஜ்மஹால்' எப்போது திரைக்கு வரும்?

கு. வித்யா, பதுளை.

ஷாஜகான் தாஜ்மஹாலைக் கட்டுவித்தான். பாரதிராஜா தானே கட்டிக் கொண்டிருக்கிறார். தீபாவளிக்கு வரக் கூடும்!



'தாஜ்மஹால்' படத்தில் மனோஜ்-ரியா சென்

➾ முரளிதரனை கிரிக்கெட் அணித் துணைத்தலைவராக நியமித்தால் அவரது திறமை குறைந்துவிடும் என்று தமிழ்ப் பத்திரிகையின் விளையாட்டு விமர்சகர் ஒருவர் கூறியிருக்கிறாரே?

எஸ். சுந்தர், கண்டி.

யார் அந்த வித்தகர்? அப்படியானால் சனத் ஜெயசூர்யாவை கப்டனாக நியமித்தால் துடுப்பாட்டம் பாதிக்கப்படுமே. ஏன் நியமித்தார்கள்? தவிர, ஷேன் வோர்ன்தான் அவுஸ்திரேலிய அணி துணைத் தலைவர். உலகக் கோப்பைப் போட்டியில் தூள் கிளப்பியதும் அவர்தான்! எம்மில் சிலர் இருக்கிறார்கள், பேரினவாத புறக்கணிப்புக்களுக்கு இவர்களே நியாயம் கூறுவார்கள்!



➾ சோனியாவா? வாஜ்பேயா? யார் அடுத்த பிரதமர்?

பி. சதீஸ்குமார், மாத்தளை.

வாஜ்பேயிதான்! சமீபத்தில் எங்கோ படித்த சுவையான ஒப்பீடலை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன்.

வாஜ்பேயி சிறந்த பேச்சாளர். சோனியா எழுதிக் கொடுப்பதை வாசிப்பவர். அதனை குறிப்பிடும் வகையில் பின்வருமாறு கூறியிருந்தார்கள்:

'வாஜ்பேயி லீடர்
சோனியா ரீடர்.'

➾ இங்கிதம் தெரியாத ஆட்களை என்ன செய்யலாம்?

ஆ. வாசுகி, நீர்கொழும்பு.

பெர்ணாட்ஷா என்ன செய்திருக்கிறார் பாருங்கள்:

பிரபல நகைச்சுவை நடிகர் ஒருவர் பெர்ணாட்ஷாவைப் பார்க்க வந்திருந்தார். பேசிவிட்டு புறப்படும்போது, எதிரே மேசையில் ஒரு சிறிய பெட்டியில் சிகரெட்டுக்கள் இருப்பதைப் பார்த்தார். பெர்ணாட்ஷாவிடம் திரும்பி:

"வீட்டுக்குச் செல்லும் வழியில் புகைத்துக்கொண்டே செல்லுவேன். கொஞ்சம் சிகரெட் எடுத்துக் கொள்ளவா?" என்று கேட்டார். பெர்ணாட்ஷா சரியென்று தலையசைத்தார்

உடனே அந்த நண்பர் சுமார் பத்து சிகரெட்டுக்களை எடுத்துக்கொண்டு கிளம்பினார்.

அப்போது பெர்ணாட்ஷா கூறினார், "உங்கள் வீடு பக்கத்து ஊரில் இருப்பதாக கூறினீர்கள். ஆனால் போகும் வழியில் பிடிப்பதற்காக என்று நீங்கள் அள்ளிய சிகரெட்டுக்களைப் பார்த்தால் உங்கள் வீடு பக்கத்து நாட்டில் இருப்பதாகத் தோன்றுகிறதே!"

★ விஜய்யின் 'நெஞ்சினிலே' வெற்றியா?

ஆ. விஜய்தாசன், கல்கிசை.

தோல்விப்படம்! சென்னையில் ஒரே ஒரு திரையரங்கில் மட்டும் தொடர்ச்சியாக 50 நாட்களைத் தொட்டிருக்கிறது! அடுத்து வரும் 'மின்சாரக் கண்ணா' உங்கள் எதிர்பார்ப்பை ஈடுசெய்யும்!

➾ சச்சின் டெண்டுல்கர் மீண்டும் கப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். இந்திய அணி தூள் கிளப்புமா?

பூ. ராகவன், திருமலை.

கிளப்பாது! இந்திய அணி நிமிர்வதற்கு கப்டன் மாற்றம் மட்டும் போதாது!

ஸ்போர்ட்ஸ்

## பாகிஸ்தான் விளையாட சம்மதம்

வருகின்ற அக்டோபர் மாதம் ஷார்ஜாவில் நடைபெறவிருக்கும் முத்தரப்புப் போட்டியில் பாகிஸ்தான், மேற்கிந்தியத் தீவுகள், இலங்கை ஆகிய அணிகள் விளையாடுகின்றன.

ஆனால் கடந்த மாதம் பாகிஸ்தான் ஒரு தடாலடி முடிவை அறிவித்தது. பாகிஸ்தான் அணி கலந்துகொள்ள வேண்டுமானால் அதிக தொகை தரவேண்டும். இல்லாவிட்டால் பாகிஸ்தான் கலந்து கொள்ளாது என்றும் அறிவித்தது.

இதுவரை ஷார்ஜா போட்டிகளில் கலந்து கொள்ள பாகிஸ்தான் அணி 2.25 இலட்சம் டொலர் (நம் நாட்டு மதிப்பில் ஒரு கோடியே 57 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா) பெற்று வந்தது. இம்முறை மேலும் ஒரு இலட்சம் டொலர் (70 இலட்சம் ரூபாய்) தர வேண்டும் என்று பாகிஸ்தான் கேட்டிருந்தது.

ஷார்ஜாவில் இந்தியா, பாகிஸ்தான் அணிகள் பங்கேற்றால்தான் பார்வையாளர்கள் கூட்டம் கூடும். பாகிஸ்தானும் இல்லாவிட்டால் பார்வையாளர்கள் திரும்பிக்கூட பார்க்க மாட்டார்கள் என்ற பயத்தால் பாகிஸதானின் கோரிக்கை ஏற்கப்பட்டுள்ளது.

இதையடுத்து பாகிஸ்தான் ஷார்ஜா போட்டிகளில் விளையாடும் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் நிர்வாகி கூறியுள்ளார்.

## ராமன் ஓய்வு



இந்திய அணியின் முன்னாள் வீரர் டபிள்யூ. வி.ராமன் முதல் தர போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். 34 வயதான தமிழக வீரரான வூக்கரி வெங்கட்ராமன் சிறந்த துடுப்பாட்ட வீரர் மட்டுமன்றி இடதுகைப்பந்து வீச்சாளருமாவார்.

இவர் இந்திய அணிக்காக 11 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 448 ஓட்டங்களை எடுத்தவர். 58 ஓவர்கள் பந்து வீசி 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தியவர். 27 ஒரு நாள் போட்டிகளில் விளையாடி 616 ஓட்டங்களை எடுத்துள்ளார். தென்னாபிரிக்காவுக்கு எதிராக எடுத்த 113 ஓட்டங்கள் தான் இவரது அதிகபட்ச ஓட்டம்.

இந்தியாவின் முதல் தர போட்டிகளில் ஒன்றான ரஞ்சி கிரிக்கெட் போட்டிகளில் தமிழக அணிக்காக 66 போட்டிகளில் கலந்து கொண்டு 3984 ஓட்டங்களைக் குவித்துள்ளார். ஒரு பருவ காலத்தில் ஒரு முச்சதமும் (313), 2 இரட்டைச் சதங்களும் அடித்த ஒரே வீரர் சாதனையும் படைத்தவர் ராமன்.

## புதிய பயிற்சியாளர்

உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டிக்குப் பின்னர் பாகிஸ்தான் அணி தோல்வியடைந்ததைத் தொடர்ந்து அணியில் பல மாற்றங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

அதன்படி உலகக்கோப்பைப் போட்டியில் பங்குபற்றிய பாகிஸ்தான் அணிக்கு பயிற்சியாளராக நியமிக்கப்பட்டிருந்த முஷ்டாக் அஹமட் நீக்கப்பட்டுள்ளார். இவர் பாகிஸ்தான் அணிக்கு இரு தடவைகள் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டு இரண்டு தடவைகளும் பதவியிலிருந்து நீக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இவருக்குப் பதிலாக தற்போது புதிய பயிற்சியாளராக முன்னாள் வீரர் வாஸிம் ராஜா நியமிக்கப்பட்டுள்ளார். புதிய பயிற்சியாளரான வாஸிம் ராஜா, பாகிஸ்தான் அணியின் முன்னாள் கப்டனும், தற்போதைய தேர்வுக்குழு உறுப்பினருமான ரமீஸ் ராஜாவின் மூத்த சகோதரர் ஆவார்.

## விருது பெறும் வீரர்கள்

இந்திய மத்திய அரசால் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு வருடா வருடம் வழங்கப்படும் முக்கிய விருது 'அர்ஜுனா விருது'. இம்முறை விருது பெறும் வீரர்களின் பெயர்ப்பட்டியல் அண்மையில் வெளியிடப்பட்டது. அதில் ராகுல் ட்ராவிட், நயான் மொங்கியா ஆகிய இரு கிரிக்கெட் வீரர்களுக்கும் இநத விருது வழங்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக சிறந்த வீரராக இந்திய அணியில் மிளிரும் ராகுல் ட்ராவிட் இந்த வருடத்தில் ஒருநாள் போட்டிகளில் 1000க்கும் அதிகமான ஓட்டங்களைக் குவித்து முதலாவது வீரராக இருக்கிறார்.



படிப்பகம்

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி

## புதிய ஆகமம் 14

ஆண்டவரால் தமக்கு அளிக்கப்பட்ட பணியினையே தொடர்ந்து புரிந்து கொண்டிருந்த இயேசு பிரானால் தம்மை உலகுக்கு ஈன்றளித்த அன்னையைப் போய்ப் பார்ப்பதற்கும் அவகாசம் கிடைக்கவில்லை. தனது மகனைக் காண வேண்டும் என்ற அவாவினால் உந்தப்பட்ட அன்னை மரியாளும் சகோதரர்களும் சில



அவற்றை விழுங்கி விட்டன. வேறு சில விதைகள் மிகுதியாக மண் இல்லாப் பாறைப் பகுதிகளில் விழுந்தன. அங்கே மண் ஆழமாக இல்லாததால் அவை விரைவில் முளைத்தன; ஆனால் கதிரவன் மேலே எழ, அவை காய்ந்து, வேரில்லாமையால் கருகிப் போயின. மற்றும் சில விதைகள் முட்செடிகளின் இடையே விழுந்தன. முட்செடிகள் வளர்ந்து அவற்றை நெருக்கிவிட்டன. ஆனால் இன்னும் சில விதைகள் நல்ல நிலத்தில் விழுந்தன. அவற்றுள் சில நூறு மடங்காகவும் சில அறுபது மடங்காகவும் சில முப்பது மடங்காகவும் விளைச்சலைக் கொடுத்தன. கேட்கச் செவியுள்ளோர் கேட்கட்டும்," என்றார்.

இவ்வாறு மிகவும் எளிமையான கதைகளின் மூலம் மக்களுக்கு விளக்கம் அளித்துக் கொண்டிருந்த இயேசு பிரானிடம் அவருடைய சீடர்களில் ஒருவர், "போதகர் பெருமானே! தாங்கள் உவமைகளைக் கூறி ஏன் விளக்கம் தரவேண்டும்?" என்று வினவினார்.

இதற்கு விடை பகரும் பொருட்டு இயேசுபிரான் தெரிவித்த கருத்துக்கள்:

ஏனெனில் அவை காண்கின்றன. உங்கள் காதுகளும் பேறுபெற்றவை; ஏனெனில் அவை கேட்கின்றன. நான் உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்; பல இறைவாக்கினர்களும் நேர்மையாளர்களும் நீங்கள் காண்பவற்றைக் காண ஆவல் கொண்டிருந்தார்கள். ஆனால், அவர்கள் காணவில்லை. நீங்கள் கேட்பவற்றைக் கேட்க விரும்பினார்கள்; ஆனால் அவர்கள் கேட்கவில்லை.

### உவமையின் விளக்கம்

"எனவே விதைப்பவர் உவமையைப் பற்றிக் கேளுங்கள்: வழியோரம் விதைக்கப்பட்ட விதைகளுக்கு ஒப்பானோர் இறையாட்சியைக் குறித்த இறைவார்த்தையைக் கேட்டும் புரிந்து கொள்ளமாட்டார்கள். அவர்கள் உள்ளத்தில் விதைக்கப்பட்ட விதைகளைத் தீயோன் கைப்பற்றிச் செல்லுவான். பாறைப் பகுதிகளில் விதைக்கப்பட்ட விதைகளுக்கு ஒப்பானோர் இறைவார்த்தையைக் கேட்டவுடன் அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வார்கள். ஆனால், அவர்கள் வேரற்றவர்கள். எனவே அவர்கள் சிறிது காலமே நிலைத்திருப்பார்கள்; இறைவார்த்தையின் பொருட்டு வேதனையோ இன்னலோ நேர்ந்த உடனே தடுமாற்றம் அடை

# விதைகளும் களைகளும்


உறவினரும், இயேசுபிரான் தங்கியிருந்த விடுதியின் முன்புறம் வந்து சேர்ந்தனர். தாயாரும் சகோதரர்களும் அவரைப் பார்க்க வந்திருப்பதாக இயேசு பெருமானிடம் ஒரு சீடர் வந்து சொன்னார்.

அப்போதும் இயேசுபெருமானிடம் அருளுரைகளைக் கேட்பதற்காகப் பலர் சூழ்ந்

### உவமையின் விளக்கம்

"விண்ணரசின் மறைபொருளை அறிய உங்களுக்குக் கொடுத்து வைத்திருக்கிறது; அவர்களுக்கோ கொடுத்து வைக்கவில்லை. உள்ளவருக்குக் கொடுக்கப்படும். அவர் நிறை

வார்கள். முட்செடிகளுக்கு இடையில் விழுந்த விதைகளுக்கு ஒப்பானோர் இறைவார்த்தையைக் கேட்டும் உலகக் கவலையும் செல்வ மாயையும் அவ்வார்த்தையை நெருக்கிவிடுவதால் பயன் அளிக்க மாட்டார்கள். நல்ல நிலத்தில் விதைக்கப்பட்ட விதைகளுக்கு ஒப்பானோர் இறை வார்த்தையைக் கேட்டுப் புரிந்து கொள்வார்கள். இவர்களுள் சிலர் நூறு மடங்காகவும், சிலர் அறுபது மடங்காகவும் சிலர் முப்பது மடங்காகவும் பயன் அளிப்பர்."



### களைகள் பற்றிய உவமை

இயேசு அவர்களுக்கு எடுத்துரைத்த வேறு ஓர் உவமை: "விண்ணரசைப் பின்வரும் நிகழ்ச்சிக்கு ஒப்பிடலாம். ஒருவர் தம் வயலில் நல்ல விதைகளை விதைத்தார். அவருடைய ஆட்கள் தூங்கும்போது அவருடைய பகைவன் வந்து கோதுமைகளுக்கிடையே களைகளை விதைத்துவிட்டுப் போய் விட்டான். பயிர் வளர்ந்து

திருந்தனர். இத்தனை நாட்களுக்குப் பின்னர் தன்னை ஈன்றெடுத்த தாயார் வந்திருப்பதை அறிந்தும்கூட இயேசுபெருமான் பதற்றம் அடையவில்லை. அவர் சுற்றம் சூழல், சுகம்-துக்கம், உறவு ஆகியவற்றையெல்லாம் முற்றும் துறந்தவராக மாறியிருந்தார். திரண்டிருந்த மக்களைப் பார்த்து, "என் தாயார் யார்? சகோதரர்கள் யார்? இதோ இவர்களே என் தாயும் சகோதரர்களும். விண்ணகத்திலுள்ள என் தந்தையின் திருவுள்ளத்தை நிறைவேற்றுபவரே என் சகோதரரும் சகோதரியுமாவார்!" என்று தனது சீடர்களைச் சுட்டிக் காட்டினார். தன் தாய், சகோதரர்களைத் தன் போதனைகளைக் கேட்க வந்தவர்களைப் போலவே அவர் கணித்தார்.

அன்று மாலைப் பொழுதில் கடற்கரையோரமாகப் பல்லாயிரக் கணக்கில் மக்கள் திரண்டிருந்தார்கள். அவர்களிடம் உரையாடுவதற்காக அங்கு சென்றார்.

### விதைகளின் விளைச்சல்

அம்மக்கள் மத்தியில் பல உண்மைகளை உவமைக் கதைகளைக் கூறி விளக்கினார்.

"விதைப்பவர் ஒருவர் விதைக்கச் சென்றார். அவர் விதைக்கும்பொழுது சில விதைகள் வழியோரம் விழுந்தன. பறவைகள் வந்து

வாகப் பெறுவார். மாறாக, இல்லாதவரிடமிருந்து உள்ளதும் எடுக்கப்படும். அவர்கள் கண்டும் காண்பதில்லை; கேட்டும் கேட்பதில்லை; புரிந்து கொள்வதுமில்லை. இதனால்தான் நான் அவர்களோடு உவமைகள் வாயிலாகப் பேசுகிறேன். இவ்வாறு ஏசாயாவின் பின்வரும் இறைவாக்கு அவர்களிடம் நிறைவேறுகிறது:

'நீங்கள் உங்கள் காதால்
தொடர்ந்து கேட்டும்
கருத்தில் கொள்வதில்லை.
உங்கள் கண்களால் பார்த்துக்
கொண்டேயிருந்தும்
உணர்வதில்லை.
இம்மக்களின் நெஞ்சம்
கொழுத்துப் போய்விட்டது;
காதும் மந்தமாகிவிட்டது.
இவர்கள் தம் கண்களை
மூடிக்கொண்டார்கள்;
எனவே கண்ணால் காணாமலும்
காதால் கேளாமலும் உள்ளத்தால்
உணராமலும் மனம் மாறாமலும்
இருக்கின்றார்கள்.
நானும் அவர்களைக்
குணமாக்காமல் இருக்கிறேன்.'

உங்கள் கண்களோ பேறுபெற்றவை:

## இராஜகுமாரன்

கதிர் விட்டபோது களைகளும் காணப்பட்டன. நிலக்கிழாருடைய பணியாளர்கள் அவரிடம் வந்து, 'ஐயா, நீர் உமது வயலில் நல்ல விதைகளை அல்லவா விதைத்தீர்? அதில் களைகள் காணப்படுவது எப்படி?' என்று கேட்டார்கள். அதற்கு அவர், 'இது பகைவனுடைய வேலை' என்றார். உடனே பணியாளர்கள் அவரிடம், 'நாங்கள் போய் அவற்றைப் பறித்துக்கொண்டு வரலாமா? உன் விருப்பம் என்ன?' என்று கேட்டார்கள். அவர், 'வேண்டாம், களைகளைப் பறிக்கும்போது அவற்றோடு சேர்த்துக் கோதுமையையும் நீங்கள் பிடுங்கி விடக்கூடும். அறுவடைவரை இரண்டையும் வளர விடுங்கள். அறுவடை நேரத்தில் அறுவடை செய்வோரிடம், "முதலில் களைகளைப் பறித்துக் கொண்டு வந்து எரிப்பதற்கென கட்டுக்களாகக் கட்டுங்கள். கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேர்த்து வையுங்கள்," என்று கூறுவேன்' என்றார்.

### கடுகு விதை

இயேசு அவர்களுக்கு எடுத்துரைத்த வேறு ஓர் உவமை: "ஒருவர் கடுகு விதையை எடுத்துத் தம் வயலில் விதைத்தார். அவ்விதை எல்லா விதைகளையும் விடச் சிறியது. ஆனாலும், அது வளரும்போது மற்றெல்லாச் செடிகளையும் விடப் பெரியதாகும். வானத்துப் பறவைகள் அதன் கிளைகளில் வந்து தங்கும் அளவுக்குப் பெரிய மரமாகும். விண்ணரசு இக் கடுகு விதைக்கு ஒப்பாகும்.

பெண் ஒருவர் புளிப்பு மாவை எடுத்து மூன்று மரக்கால் மாவில் பிசைந்து வைத்தார். மாவு முழுவதும் புளிப்பேறியது. விண்ணரசு இப்புளிப்புமாவுக்கு ஒப்பாகும்."

(தொடர்ந்து வரும்)

**திருமறை [பு-ஆ] 11 விடை: ☛ யூதாசு இஸ்காரியோத்து**

**பரிசு பெறுவோர்:**

1. **றிஸ்வியா ஜுனைட்,** தாஹா நகர், மூதூர்-07.
2. **வைரமுத்து ரவீந்திரன்,** பிரதான வீதி, தம்பிலுவில்-01.
3. **ஆ.புஸ்பநாதன்,** மாதர் சங்கம் ஒழுங்கை, சித்தன்கேணி.
4. **சர்மினி ஜீவராஜ்,** காந்தி வீதி, ஏறாவூர்-04, செங்கலடி.
5. **எஸ். ஜெயாகரன்,** பழுகாமம்-02, பெரிய போரதீவு.

**திருமறை (பு.ஆ) 14** வினா :- **களைகள் எந்தத் தானியம் விதைக்கப்பட்ட வயலில் நட்டப்பட்டன?**

ஆகஸ்ட் 28 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டியமுகவரி:

**திருமறை பு.ஆ.14 – தினமுரசு வாரமலர், த.பெ.இல – 1772, கொழும்பு.**

## ப யோ டே ட் டா

| | | |
|---|---|---|
| பெயர் | : | இன்றைய நடாளுமன்றம். |
| வயது | : | நான்கு வருடம் பூர்த்தி |
| தொழில் | : | முழக்கங்களை பதிவு செய்வது. |
| கவலை | : | போதிய பெரும்பான்மை இன்மை. |
| நம்பிக்கை | : | தமிழ்க் கட்சிகளது ராஜவிசுவாசம்! |
| பொழுதுபோக்கு | : | தொண்டைக் குழாய்களது சத்தங்களைக் கேட்பது. |
| எதிரி | : | ஜனாதிபதி ஆட்சிமுறை |
| நண்பர்கள் | : | நாடாளுமன்ற நாற்காலிப் பிரியர்கள். |
| ஒரே பேதனை | : | மக்களின் நம்பிக்கையீனம். |
| ஒரே சாதனை | : | எம்.பிகளுக்கு பென்சன். |

**அமெரிக்கப் படையினர் இங்கு வந்தால் தமிழ்க் கட்சித் தலைவர்கள் எவ்வாறு நடந்து கொள்வார்கள்?**

**கா.பூ.கந்தசாமியார் முன்கூட்டியே கற்பனை செய்கிறார்.**

# திருத்தப்பட்ட அறிக்கை

*தமிழ்க்கட்சி ஒன்று 1986ம் ஆண்டு இந்திய இலங்கை ஒப்பந்தக் காலத்தில் தயாரித்து வைத்திருந்த அறிக்கையை தூசிதட்டி எடுத்து, அதில் சில திருத்தங்கள் செய்கிறது. என்ன திருத்தங்கள் என்று பார்ப்போமா?*

"~~இந்திய~~ அமெரிக்க -இலங்கை ஒப்பந்தம் குறைபாடுள்ள ஒப்பந்தம் என்பதை நாமறிவோம். ஆனால் இந்து சமுத்திர பிராந்தியதில் ~~அமெரிக்க~~ தலையீட்டை தடுப்பது அவசியமாகும்.

நாம் முற்போக்கு வாதிகள். புலிகள் போன்ற பிற்போக்கு வாதிகளல்ல. புலிகள் ~~இந்தியாவை~~ அமெரிக்காவை எதிர்ப்பது மூலம் தவிர்க்க முடியாமல் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கைக்குளுள்ளேயே செல்வார்கள்.

~~அமெரிக்காவின்~~ பிற்போக்கு முகாமோடு கைகோர்த்து இந்தப் பிராந்திய நலனை புலிகள் காட்டிக்கொடுக்கிறார்கள்.

~~இந்தியா~~ அமெரிக்கா நம் நட்பு நாடு. ~~இந்தியா~~ அமெரிக்கா நமக்கு சில உறுதிமொழிகளை தந்துள்ளது. அதனால்தான் சமாதானத்துக்கு உடன்பட்டோம். எமது கொள்கை உறுதியை நம் மக்கள் நன்கு அறிவார்கள்.

# அவரா சொன்னார்?



தமிழ் மக்கள் காட்டுமிராண்டிகள் வந்தேறுகுடிகள் என்று பில்கிளின்ரன் அவர்கள் பேசியதாக வெளிவந்த செய்திகளை, பில் கிளின்ரனே மீண்டும் உறுதிப் படுத்தினாலும்கூட அவர் அப்படிக் கூறியிருப்பார் என்று எம்மால் நம்பமுடியாதுள்ளது.

சிங்கேறுகள் அதாவது சிங்கம் போன்றோர் என்று கூற நினைத்தபோது நாக்கு புரண்டுபோனதால் வந்தேறுகுடிகள் என்று கூறியிருக்கலாம். நா செய்த தவறுக்கு அவர் எப்படி பொறுப்பாக முடியும்.

நாம் இது பற்றி பில்கிளின்ரன் ஐயாவிடம் பேசியபோது, தமிழர்கள் மட்டுமல்ல, உலகத்தில் உள்ள மானிடர் யாவருமே வந்தேறு குடிகள்தான் என்றும், அதனை பகிரங்கமாகக் கூறிவிடப் போவதாகவும் வாக்குறுதியளித்தார். விரைவில் அந்த அறிக்கைவரும். எதிர்பாருங்கள்.

மீண்டும் நாம் தெளிவாகக் கூறுவது யாதெனில், தமிழ் மக்கள் வந்தேறு குடிகள் என்று சொல்ல வேண்டும் என்று நினைத்து, அவர் திட்டமிட்டு சொன்ன வார்த்தைகளல்ல அவை. உள்ளத்தில் இருந்தது உதட்டில் வந்துவிட்டது அவ்வளவே. அது வெளியே வந்துவிட்டதால் இனி உள்ளத்திலும் இல்லை என்றுதானே அர்த்தம்.

தொடர்ந்தும் உள்ளத்தில் இருப்பதாக யாராவது கண்டு பிடித்து கூறினால் பில் கிளின்ரனை எதிர்த்து போராடவும், ஏன் ஆயுதம் ஏந்தி போராடக்கூட தயங்கமாட்டோம்.

# முறையீடு

**பத்திரிகைகளுக்கான அறிக்கையை பழக்க தோஷம் காரணமாக முன்னர்போல் எழுதி விட்டு பின்னர் திருத்துகிறார்கள்.**

தமிழ் மக்கள் சந்திக்கும் அதி முக்கிய பிரச்சனைகள் குறித்து அதி உத்தரம ஜனாதிபதி ~~சந்திரிக்கா அம்மையாருக்கு~~ பில் கிளின்ரன் ஐயாவுக்கு எமது தலைவரின் ஆலோசனைப்படி, எமது பகுதிப் பொறுப்பாளரது அக்கறையால், எமது அலுவலகப் பொறுப்பாளரின் முன் முயற்சியால், எமது கிளைச் செயலாளரால் முறை யீடு செய்யப்பட்டுள்ளது. (எமது கட்சியின் வேறு முக்கியஸ்தர்களது பெயர்கள் விடுபட்டிருந்தால் மன்னிக்கவும்).





"மன்னா, நமது படை பலத்தில் ஒன்று கூடியுள்ளது!"

"மகிழ்ச்சி. எப்படி அமைச்சரே?"

"நால்வகைப் படையுடன் ஐந்தாம் படை ஒன்று கூடவே உருவாகியுள்ளது. மன்னா!"

**காதிலை பூ கந்தசாமி**

www.padippakam.com

Regd. as a News Paper at the G.P.O.(QD/40/NEWS/99)



அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS


பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை: 105. காலி வீதி.வெள்ளவத்தை.கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

436331


## ஒப்பனை



➢ அமெரிக்காவில் முகமூடி தயாரிக்கும் நிறுவனம் ஒன்று புதுமை ஒன்றைச் செய்தது. பிரபலமான நான்கு பேரிடம் முகமூடிகளைக் கொடுத்து, வர்ணக்கலவைகளையும் கொடுத்து தங்கள் முகங்கள் எப்படியிருக்கும் என்று முகமூடிகளில் வரையச் சொன்னார்கள்.

அவர்கள் வரைந்த முகமூடிகளை ஏலத்திற்கு விட்டனர். கணிசமான தொகைக்கு விலை போனது.

மூவர் தங்கள் முகங்களை தாங்களே கேலி செய்வது போல வரைந்தனர். ஆனால் ஒருவர் மட்டும் நிதானமாக, தன் முகம் போன்று வரைந்து அழகாக வர்ணம் தீட்டினார்.

அவர் வர்ணம் தீட்டிய முகமூடி எது வாக இருக்கும் என்று நீங்களே கண்டுபிடிக்கலாம்.

தற்போது பில்கிளின்ரன், மோனிக்கா போன்ற முகமூடிகளும் தாராளமாக விற்பனையாகின்றன. இவற்றை அணிந்து கொள்வோர் கிளின்ரன், மோனிக்கா போல மாறாமல் இருந்தால் சரிதான். ★



ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

323657


## தியாகம்

➢ 'த ரெரரிஸ்ட்' என்றொரு படத்தை இயக்கியுள்ளார் சந்தோஷ் சிவன்.

பெண் போராளி ஒருவரது கதை. ஆனால் சந்தோஷ் சிவனுக்கு போராளிகள் பற்றித் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

'உயிரே' படத்தில் மணிரத்னம் போராளிகளை கொச்சைப் படுத்தியிருந்தார். அதற்கு முன்னர் ரோஜாவிலும் போராளிகளை சரிவர சித்தரிக்கவில்லை.

'உயிரே' படத்தில் போராளிப் பெண் பற்றிய மணிரத்னத்தின் சித்தரிப்பை இந்தியாவில் பல முற்போக்காளர்கள் கடுமையாக எதிர்த்திருந்தனர். இப்போது சந்தோஷ் சிவனின் 'த ரெரரிஸ்ட்' (பயங்கரவாதி) படமும் துணிப்புல் மேய்ந்தது போன்ற படம்தான்.

'பயங்கரவாதி' என்ற பெயரே சந்தோஷ் சிவனின் அறியாமைக்கு எடுத்துக்காட்டு. இந்திய அரசின் விருது வழங்குவோரை திருப்தி செய்து விருது பெறத்தக்கதாக படத்தை இயக்கி, அதற்கு தோதாக பெயர் சூட்டியுள்ளார்.

➢ மணிரத்னத்தை கவர்ந்த ஒளிப்பதிவாளரான சந்தோஷ் சிவன் மணிரத்னம் பாதையிலேயே படம் எடுத்து போராளிகளை தெளிவு அற்றவர்கள் என்று கொச்சைப்படுத்தியுள்ளார்.

இவ்வாறான சித்தரிப்புக்களுக்கு பரிசு கொடுக்க என்றே ஒரு கூட்டம் இருக்கிறது. புரட்சிகரமான கருத்துக்கள், மக்களது எழுச்சிகளை சித்தரிக்கும் கதைகள் என்பவற்றுக்கு பரிசோ விருதுகளோ கொடுக்கமாட்டார்கள்.

'பயங்கரவாதி'யில் மனித வெடி குண்டாக நடித்திருப்பவர் ஆயிஷா தர்கார். பிரமுகர் ஒருவரை கொல்வதற்கு தற்கொடைப் போராளியாக வரும் ஆயிஷா தர்காரை மன உறுதியுள்ள ஆனால் தெளிவில்லாத பெண்ணாக சித்தரித்திருக்கிறார்கள்.

தெளிவில்லாத பெண்ணால் தனது எதிர்க்காக காத்திருந்து, மனதை அலைபாய விடாது தவம் இருந்து செயற்பட எப்படி முடியும்? ஆனால் சந்தோஷ் சிவன் தனது விருப்பத்திற்கு ஏற்ப கதாபாத்திரத்தை கர்ப்பமாக்கி, மனப் போராட்டத்தை உருவாக்கி திசை மாற்றுகிறார். தியாகத்தை தெளிவின்மையாக சித்தரித்துள்ளார்.

போராட்டம் பற்றிய தெளிவு இல்லாமல் போனது சந்தோஷ் சிவனுக்குத்தான். பகத்சிங் போன்ற இந்திய சுதந்திரப் போராட்ட தியாகிகளையும் தெளிவு இல்லாதவர்கள் என்றுதான் சந்தோஷ் சிவன் முடிவு கட்டுகிறாரா?

போராட்டம் பற்றிய அனுபவம் இல்லாதவர்கள் போராட்டம் பற்றி படம் எடுத்தால் இப்படித்தான் இருக்கும். ★



## வான் வலம்



➢ விண்ணில் உலகை வலம் வந்து அங்கு காணும் விந்தை-விநோதங்களை அவ்வப்போது பூமியிலுள்ள நிலையத்துக்கு அனுப்பி வைக்கும் மிகப் பிரமாண்டமான தொலைநோக்காடியையே இங்கு பார்க்கிறீர்கள்.

அமெரிக்காவின் தேசிய விண்வெளி ஆராய்ச்சி அதிகார அமைப்பான நாசா (NASA) 11 தொன் எடை யுள்ள இதனை 1990ம் ஆண்டு ஏப்ரல் 24ம் திகதி விண்ணுக்குச் செலுத்தி உலகை வலம் வர வைத்துள்ளது.

இத்தொலைநோக்காடியின் நீளம் 13.1 மீட்டர் (43 அடி).

2.4 மீட்டர் (7 அடி 10 அங்குலம்) பிரதிபலிக்கும் கண்ணாடியும் இதில் பொருத்தப்பட்டுள்ளது.

இத் தொலைநோக்காடி மிகத் துல்லியமான படங்களை பூமியிலுள்ள கட்டுப்பாட்டகத்துக்கு அனுப்பி வைக்கிறதாம்.

இத் தொலைநோக்காடியை உருவாக்க மொத்தம் 2.1 பில்லியன் அமெரிக்க டொலர் செலவாகியுள்ளதாம். நம் மதிப்பில் ஒரு இலட்சத்து 47 ஆயிரம் கோடி ரூபாய்கள். முதன் முதலில் தயாரான மிகப் பிரமாண்டமான தொலைநோக்காடி இதுதான். அதனால் உலக சாதனையாக பதியப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் 'நாசா' அமைப்பு விஞ்ஞான ஆராய்ச்சி என்ற பெயரில் உளவு வேலைகளிலும் ஈடுபட்டு வருகிறது. ★

## தடாகம்



இந்த 'மும்பாய்' இளைஞருக்கு கார் என்றால் கொள்ளைப்பிரியமாம். கார்களில் புதுமைகள் செய்து வித்தியாசப்படுத்தி காண்பிக்கவும் ஆசை.

அவரது ஆசை எப்படி நிறைவேறியுள்ளது பாருங்கள். காருக்குள் குளியல் தொட்டியை உருவாக்கிவிட்டார். நடமாடும் குளியல் தொட்டி.

பிரீமியர் பத்மினி காரை இவ்வாறு தடாக வசதியோடு மாற்றி விட்ட இவருக்கு 32 வயது என்றால் நம்பவா முடிகிறது. கம்பீர இளமை என்பது இதுதானோ.

இவரது அடுத்த தயாரிப்பு 'காதலர் ஸ்பெசல்' அதற்கு என்ன செய்யப்போகிறாரோ?!

## சாம்பியன்



➢ ஸ்டீவ் வோவ், உலக சாம்பியனான அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் தலைவர்.

இவரது தோல் மட்டுமல்ல, உள்ளமும் வெள்ளை என்று புகழுகிறார்கள். அந்தப் புகழ்ச்சி நியாயமானதுதான்.

சத்தமே இல்லாத பல சமூக சேவைகள் செய்து வருகிறார்.

இவர் ஒவ்வோர் ஆண்டும் ஓரிரு தொழுநோய்க் குழந்தைகளை தத்தெடுத்து அவுஸ்திரேலியாவில் வளர்க்கிறார். தனது நண்பர்கள் மூலமும் உதவிகள் பெற்றுக் கொடுக்கிறார்.

இந்தியாவில் டில்லியில் உள்ள 'உதயான்' என்ற சமூக சேவை அமைப்பில் உறுப்பினராக இருக்கிறார். இந்தியா செல்லும் போதெல்லாம் அங்கு போய் குழந்தைகளுடன் தங்கி, அவர்களது தேவைகளை அறிந்துகொள்ளுவார். அவுஸ்திரேலியா சென்றதும் அந்தப் பொருட்களை குழந்தைகளுக்கு அனுப்பிவைப்பார்.


சமீபத்தில் ஏகப்பட்ட படுக்கை விரிப்புக்கள், தலையணைகள், ரீவிக்கள் போன்றவற்றை அனுப்பியிருந்தாராம்.

இதில் இன்னொரு விடயம் யாதெனில் விளம்பரங்கள் மூலம் கோடி கோடியாக சம்பாதிக்கும் இந்திய கிரிக்கெட் நட்சத்திரங்கள் இந்த குழந்தைகள் பக்கமே திரும்பிப் பார்ப்பதில்லை. உதவிகள் செய்ததும் இல்லை.

இதனால் இந்தியாவும், அவுஸ்திரேலியாவும் மோதியபோது, 'உதயான்' அமைப்பு குழந்தைகள் அவுஸ்திரேலியா வெல்லவேண்டும் என்று பிரார்த்தித்தனவாம். உலகக் கோப்பையை அவுஸ்திரேலியா கைப்பற்றியபோது அவுஸ்திரேலிய ரசிகர்கள் மட்டுமல்ல, இந்தியாவில் புதுடில்லியில் உள்ள அநாதைக் குழந்தைகளும் ஆனந்தத்தில் திளைத்தனர். வாழ்த்துக்களையும் அனுப்பினார்கள்.

உலக சாம்பியன் அணிக்கு கப்டன் என்ற நிலையிலும் அலட்டிக் கொள்ளாமல் இருக்கிறார். மைதானத்திலும் பதற்றமே இல்லாமல் 'பபிள்கம்' மென்றபடி அணியை வழி நடத்துகிறார். நிதானமான, சதமான மனதுக்கு சொந்தக்காரர். ★

## 1வது பிறந்த நாள் வாழ்த்து



திஷாந்த் (THESHANTH) 01.08.99

ஒந்தாச்சிமடம் கடற்கரை வீதியில் வசிக்கும் பஞ்சாட்சரம்-ஹேமமாலினி தம்பதிகளின் செல்வப் புதல்வன் திஷாந்த் தனது முதலாவது பிறந்தநாளை 01.08.99 அன்று தனது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடினார். திஷாந்தை அன்பு அப்பா, அம்மா அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், அண்ணாமார், அண்ணிமார், அக்காமார், தம்பிமார், மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் திஷாந்தை, மாரியம்மன் அருளோடும், காளியம்மன் துணையோடும் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல் கா. பஞ்சாட்சரம் (அப்பா)